# எரிமலை

ஜனவரி 2005



வாழ்வு தந்த கடலே
சோறு தந்த கடலே
வஞ்சித்து விட்டாயே
பொருளாதாரத் தடையிலும்
பிறளாது நின்றோம்
பகை புகுந்த போதும்
பணியாது நின்றோம்
- பழி தீர்க்க முடித்திருக்கும் என்பதால்
தண்ணீர் புகுந்த போதிலன்றோ
தவித்துப் போனோம்!
எந்த மொழிகளாலும்
வடித்துவிட முடியாத வலி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26.12.2004 அன்று காலை
தென்கிழக்காசியாவில் ஏற்பட்ட
புவி நடுக்க ஆழிப்பேரலையின்
அனர்த்தத்தால் துயருற்ற மக்களுக்கு
எரிமலை தனது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிமலை

உள்ளே...


## மனிதஅவலங்களின் மீதான சந்திரிகாவின் அரசியல் 30




12




## கட்டுரைகள்


| | |
|---|---|
| திறலோன் | 06 |
| யோ.புரட்சி | 46 |
| தா.பாலகணேசன் | 53 |
| சொக்கன் | 60 |
| கிருபா | 62 |
| தி.தவபாலன் | 70 |


## அணையாத தீபம்




| | |
|---|---|
| 2ம் லெப். தமிழழகி | 64 |




## சிறுகதை


| | |
|---|---|
| அஜந்தி | 50 |
| செங்கை ஆழியான் | 58 |
| முல்லை யேசுதாசன் | 66 |
| கலாநிதி க.சோமாஸ்காந்தன் | 72 |




## கவிதை


| | |
|---|---|
| சோதியா | 04 |
| தா.பாலகணேசன் | 18 |
| மு.பொ | 29 |
| ப.முகில் | 34 |
| திருமலைச்செல்வன் | 35 |
| ஞாலவன் | 40 |
| போராளி சுமித்திரா | 56 |
| மாலிகா | 65 |
| நல்லை அமிழ்தன் | 71 |
| வேரற்கேணியன் | 75 |


## தொகுப்பு


| | |
|---|---|
| நினைவுக்குறிப்பு | 76 |
| மீள்பார்வை | 77 |
| பதிவுகள் | 78 |






42





நேர்காணல்:
'புலிகளின் குரல்' பொறுப்பாளர் தமிழன்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு, ஓர் இக்கட்டான, சிக்கலான சூழ்நிலையை நாம் இன்று எதிர்கொண்டு நிற்கின்றோம். போருமின்றி, நிலையான சமாதானமுமின்றி, இயல்புநிலையுமின்றி, இடைக்காலத் தீர்வுமின்றி, இனப் பிரச்சினைக்கு முடிவுமின்றி நாம் ஒரு அரசியல் வெறுமைக்குள் வாழ்ந்து வருகின்றோம். இந்த அரசியற் சூனிய நிலை நீடித்தால், அது எமது இலட்சியப் போராட்டத்திற்குப் பெரும் பங்கத்தை ஏற்படுத்திவிடும் என்பது திண்ணம்."

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு **வே.பிரபாகரன்** அவர்கள்
(2004ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரையிலிருந்து...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

இருபத்திநாலாம் ஆண்டு

ஜனவரி

**2005**

திருவள்ளுவர் ஆண்டு **2036**

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

**எரிமலை**

தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 01 - 43 58 11 42
Fax: 01 - 43 58 11 91

# தலைவாசல்

## சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தங்கள்

அள்ளிக் கொடுத்த கடலம்மா எமக்குப்பேரழிவைத்தந்து விட்டாள். தமிழ் மண்ணின் முதலாம் எதிரி கடல்தான் என்று கி.பி 2ஆம் நூற்றாண்டில் சிலப்பதிகாரம் எனும் காப்பியத்தைப்படைத்த இளங்கோ அடிகள் கூறினார். குமரிக் கண்டம் முதலாய தமிழ்மண் கடல் கோளால் அழிந்ததை அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். கடல் கண்டவன் தமிழன் என்பது வரலாறு. ஆதி நாட்தொட்டு தமிழன் கடலோடியாகவும், கடல் வாணிபம் மூலம் திரவியம் திரட்டுபவனாகவும் இருந்து வருகிறான். இந்துமாகடல் தமிழர்களின் ஏரி என்று கூறுமளவிற்கு எமது கடலாதிக்கம் இருந்திருக்கிறது. இந்து மாகடலில் பயணிக்கும் கலங்கள் தமிழைத் தொடர்பு மொழியாகப்பயன்படுத்தினர், என்பது உலகறிந்த விடயம்.

டிசம்பர் 26ஆம் நாள் நவீன வரலாற்றில் மிகப்பெரிய பேரழிவு என்று உறுதிப்படுத்தப்பட்ட அனர்த்தங்கள் நிகழ்ந்துள்ளன. ஈழத்தமிழர்களிற்கு இது பலத்த அடியாக இடம்பெற்றுள்ளது. பனையால் வீழ்ந்தவனை மாடு ஏறி மிதித்தது போல் போர் அனர்த்தங்களால் ஒப்பற்ற அழிவுகளில் இருந்து மீளமுன் எம்மினம் மீண்டுமொரு அடியைப் பெற்றுள்ளது. தமிழீழத்தின் கரையோரப் பிரதேசம் இடுகாடாக மாறிவிட்டது.

இங்கு மக்கள் வாழ்ந்தார்கள். என்று நம்புவதற்குக் கடினமாக இருக்கிறது. சிங்களக் கடற்படையின் தாக்குதல்களுக்குக் கடந்த இரு தசாப்தங்களாக முகங் கொடுத்த எமது கரையோர மக்கள் தமது சிதைந்த வாழ்வை மீளக்கட்டியெழுப்ப முன்பே எல்லாவற்றையும் பறிகொடுத்து விட்டார்கள். போரில் இழந்த உயிர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க மிகக் கூடிய எண்ணிக்கையிலான தமிழ் உறவுகளை நாம் சில மணி நேரத்தில் இழந்துவிட்டோம்.

"என்னை விட்டால் எனக்கு வேறுயார்?" என்பது தத்துவம். இது தமிழீழத்திற்கு மிகப் பொருத்தம். அனர்த்தங்கள் நிகழ்ந்த அடுத்த நிமிடத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மீட்புப்பணிகளும், நிவாரண வழங்கலும், மருத்துவ சேவைகளும் வேகமாக இயங்கத்தொடங்கிவிட்டன. இது வெளிநாட்டுப் பார்வையாளர்களை கடும் வியப்புக்கு உட்படுத்தியுள்ளது. நாம் பல அதிர்ச்சிகளையும் அழிவுகளையும் காலத்திற்கு காலம் சந்தித்தவர்கள். இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக சொந்த மண்ணை இழந்து இடம் பெயர்ந்தவர்கள். மணலாறு மண்ணை நாம் 24 மணி நேரத்தில் இழந்தோம். சிங்களக் குடியேற்றம் எமது ஆன்மாவில் ஏற்படுத்திய வலி இன்னும் நீங்கவில்லை. என்றாலும் பேரலை அனர்த்தங்கள் மிகமிகக் கொடியவை என்பதில் சந்தேகமில்லை.

உலகத் தமிழினத்தை ஒன்றிணைத்த சிறப்பு எமது விடுதலைப்போருக்கு என்றென்றும் உண்டு. போரின்போது உதவிய எமது உறவுகள் இப்போது அனர்த்தங்களிலிருந்து மீள்வதற்கும் உதவுகிறார்கள். சிதறுண்ட எமது இனம் ஒன்றிணைந்து செயல்படுவதற்கு இந்த அனர்த்தங்கள் உதவுகின்றன. துன்பத்திலும் ஒரு திருப்தி இருக்கத்தான் செய்கிறது. சிங்கள தேசமும் பேரழிவைச் சந்திக்கிறது. இதுபற்றி எமது தேசியத்தலைவர் அவர்கள் "தமிழ் பேசும் தாயக மண்ணிலும், தென்னிலங்கை கடலோரப் பகுதியிலும் தமது உற்றார், உறவினர்களைப் பலி கொடுத்து ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் இஸ்லாமிய, சிங்களச் சகோதரர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக." என்று பெருந்தன்மையுடன் கூறியுள்ளார்கள். ஆனால் சிறிலங்காத் தலைவி சந்திரிகாவோ "கடந்த 26 ஆம் திகதி நிகழ்ந்த பேரலை அனர்த்தங்களால் விடுதலைப் புலிகளுக்குப் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது" என்று காழ்ப்புணர்வுடன் அறிக்கை வெளியிட்டுள்ளார். நாம் நாமாக இருப்போம், அது எமக்குப் போதும்.

"பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்
புன்மை இருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி"





# புனல் விழுங்கிய பொழுது



'ஜல சமாதி'
இந்த வார்த்தையின் பரிமாணம்
இப்போது புரிகிறது
போரில் நொந்து கிடந்த பூமியை
புனல் விழுங்கிப் போனது!

அழகிய எங்கள் கடலே
அரக்கனாய் எழுந்து
ஆணவம் கொண்டாயோ..!
உன் பொறுமையை
சீண்டிப் பார்த்தவர் யார்...?
உன் அமைதியை
குலைத்துப் போட்டவர் யார்...?
தண்ணீர்... உயிர்காக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்றல்லவா உணர்ந்திருந்தோம்
உயிரோடு ஊர்குடித்து
மீண்டும் கடல் சேர்ந்து கொண்டாயே

வாழ்வு தந்த கடலே
சோறு தந்த கடலே
வஞ்சித்து விட்டாயே
பொருளாதார தடையிலும்
பிறளாது நின்றோம்
பகை புகுந்த போதும்
பணியாது நின்றோம்
- பழி தீர்க்க முடித்திருக்கும் என்பதால்
தண்ணீர் புகுந்த போதிலன்றோ
தவித்துப் போனோம்!
எந்த மொழிகளாலும்
வடித்துவிட முடியாத வலி!



காற்று காதுரச காதுரச
கணக்கற்ற கண்ணீர்க் கதைகள்.
ஒளிப்படங்கள் உயிரைப் பிழிகிறது
கொத்தாய் குழந்தைகளை அணைத்து
முலைசுரந்தவள் மூர்ச்சித்து கிடக்கிறாள்
கர்ப்பிணியாய் போனவளை அள்ளி
கட்டியவன் கதறித் துடிக்கிறான்
ஒருவர் இறந்தால்
ஊர் கூடித் தேம்புவோம் - இங்கு
ஊரே மரித்துக்கிடக்கிறது
தேம்புவாரை தேற்றுவார் யார்?
யாருக்காக யார் அழுவது
யாருக்காக யார் தொழுவது
எந்தக் கைகள் உயர்ந்து
எந்தக் கண்களை துடைப்பது. . . ?

நாளை. . . ஒரு தினம்,
ஈர அலை கால் தழுவ
கரையமர்ந்து கவியெழுத
எந்தக் கவிஞனால் முடியும்
காற்று வாங்க, காலாற நடக்க,
எட்டுமூலைப் பட்டம் விட
எவனால் முடியும்?
அடியே. . . கடற்தாயே!
பேசடி. . . பதில்கூறி மூசடி
மோதி மோதிப் பேசுகின்றாய்
ஐயோ. . .! அலைபாசை அறியாமற் போனேனே
அகத்தியன்! - ஆற்றை அடக்கி
கமண்டலத்துள் கட்டியதாய் சொன்னார்கள்
எனக்கு மட்டும் இயைந்திருந்தால்
கடலே - உன்னை என்
கைகளில் முடக்கியிருப்பேன் - உன்
உயிர் முடித்து முடித்திருப்பேன்.



■ சோதியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடல் கொண்ட தாயகம்



**2004 டிசம்பர் 26. ஞாயிற்றுக்கிழமை.** மணி காலை 07.30. வடதமிழீழத்தின் கரையைத் தொட்டுத் தழுவி நிற்கும் வங்கக் கடல், தன்னுடைய வழமையான ஆர்ப்பரிப்பின்றி அமைதியாக இருந்தது. நள்ளிரவில் நடுக்கடலில் வலைபோட்ட மீனவர்கள் தொழில் முடித்துக் கரை திரும்பிக் கொண்டிருந்தார்கள். வடமராட்சி கிழக்கில் வங்கக் கடலோரத்திலிருந்த அந்த உடுத்துறைக் கிராமமும் அன்று தனது வழமையான காலை நேரப் பரபரப்பின்றி சோம்பிக்கிடந்தது. அது கிறிஸ்மஸ் வாரம் என்றபடியால் கடலுக்குச் சென்ற மீனவர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. அதேபோல மீன்களை வாங்க வந்த வியாபாரிகளும் குறைவாகவே இருந்தனர். மார்கழி மாதக் காலை நேரத்தில் வாடைக்காற்று வீசகின்ற அந்தப் பருவகாலத்தில் அந்த வங்கக்கடலின் அலைகள் மூன்றடி நாலடி உயரத்துக்கு ஆர்ப்பரித்து எழுந்து கரையில் முட்டி மோதிச் சீறுவது வழக்கம். கரை திரும்பும் மீனவர்கள் கொந்தளித்துப் பாயும் இந்த அலைகளை எதிர்த்து தங்களது படகுகளை கரைசேர்ப்பதென்பது ஒரு பெரும் போராட்டமாகவே இருக்கும் ஆனால் அன்று அந்தக் கடல் ஒரு குளம் போல பெரிதாக சலனம் எதுவுமின்றி சின்னச்சின்ன அலைகளால் கரையைத் தழுவிநின்றது. நள்ளிரவு கடலுக்குச் சென்ற கணேசும் அவரது தந்தை சுப்பிரமணியமும் காலை 07.35 க்கு கரை திரும்பிய போது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. யாருடைய உதவியுமின்றி படகை கரைசேர்த்து அங்கிருந்த மண்ணின் திட்டில் நிறுத்திவிட்டு கணேஷ் மீன் பறியுடன் அருகிலிருந்த வீட்டுக்குச் செல்ல சுப்பிரமணியம் கடற்கரை மணலில் வலையை விரித்து அதிலிருந்த கிளிசல்களை பொத்திக் கொண்டிருந்தார். கடற்கரையிலிருந்து 500 மீட்டர் தொலைவிலுள்ள தங்கள் வீட்டுக்குச் சென்ற கணேஷ் அதன்பின் என்ன நடந்தது என்பதை தானே சொல்கிறார். "வீட்டுக்குப் போன நான் மீன் பறியை முற்றத்தில் வைத்துவிட்டு பின்னால் இருந்த கிணத்துக்கு குளிக்கப் போனேன். அம்மா எழுப்பி எங்களுக்காக புட்டு அவித்துக் கொண்டிருந்தா. எனக்கு இரண்டு தம்பிகள் மூன்று தங்கைகள் இரண்டு அக்காமார் என்று எங்கள் குடுப்பத்தில் பத்துப் பேர். அந்த நேரத்தில் அம்மாவையும் என்னையும் தவிர மற்ற எல்லாரும் நித்திரையில் இருந்தார்கள். நான் குளித்துவிட்டு விட்டுக்குள் வந்து பார்த்த போது மணி காலை 08.29 அப்ப அப்பாவும் வீட்டுக்கு வந்து புட்டுச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். நானும் எனக்காக அம்மா கோப்பையில் போட்டு வைத்திருந்த புட்டை கையில் எடுத்த போது மணி 08.30. திடீரென்று ஒரு பேரிரைச்சல். கடந்த காலத்தில் குண்டு வீசி எங்கள் மக்களைக் கொன்ற சிறீலங்கா விமானப்படையின் கிபீர் விமானங்கள் எழுப்புவதைப் போன்ற பேரிரைச்சல். "ஐயோ சண்டை தொடங்கீட்டுது. குண்டு போடப் போறாங்கள்" "ஐயோ என்ரை பிள்ளையள்" என்று அம்மா அடுப்படியை விட்டு கத்திக் கொண்டு ஓட.. நானும் அப்பாவும் புட்டுக் கோப்பையைப் போட்டுவிட்டு வாசல் கதவால் வெளியே ஓட நினைக்க... கண்ணிமைக்கும் நேரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கடல் தண்ணி வந்து எங்கள் முகத்தில் ஓங்கி அடித்து எங்களை மூடியது. என்ன நடந்தது என்று நாங்கள் யோசிப்பதற்கு முன்பே அடுத்த பேரலை வந்து எங்கள் வீட்டை அடித்துப் புரட்டி உருட்டித்தள்ளியது. நாங்கள் நீந்தவே முடியாத அளவுக்கு எங்களை அள்ளிக் கொண்டு போய் எங்களை கட்டிடங்களோடும் மரங்களோடும் அடித்துத் தள்ளியது. தடுமாறித் தத்தளித்து மேலே மிதந்து வந்த பார்த்த போது இரண்டு பனை உயரத்துக்கு கடல் பொங்கி வந்து கொண்டிருந்தது. எனக்கு அண்மித்த தூரத்தில் அப்பா தத்தளித்தபடி நீந்தி வந்து கொண்டிருந்தார் . எங்களுக்கு அருகில் அம்மா இரண்டு வயதான கடைசித் தம்பியை கட்டியணைத்தபடி அந்தக் கடல் பேரலையில் அள்ளுப்பட்டுச் சென்று கொண்டிருந்தா. நானும் அப்பாவும் அவவை காப்பாற்ற முனைந்தோம். நாங்கள் அந்த பேரலையின் வேகத்துக்கு ஈடுகொடுத்து எதிர்த்து நீந்தி அம்மாவுக்கு கிட்டப் போனபோது அவவின் சேலைத் தலைப்பு என்கையில் பட்டது. அதைப்பிடித்து இழுத்து அவவை காப்பாற்ற முனைந்த போது சேலையை உருவி அவவை கடல் கொண்டு போய் விட்டது என்னைக் கொண்டு போய் ஒரு உயில மரத்தில் அடித்துத் தள்ளியது. நான் உயரமான அந்த மரத்தைப் பிடித்து மேலே ஏறிய போது அந்த மரத்துக்கு அப்பால் "காப்பாத்து அண்ணா காப்பாத்து அண்ணா" என்று 19 வயதான என் தங்கை கத்திக் கொண்டு தண்ணியில் மிதந்து வந்தாள். நான் மரத்திலிருந்து பாய்ந்து அவளை எட்டிப் பிடித்த நேரத்தில் அடுத்த அலை வந்து அவளை அடித்துச் சென்று விட்டது. ஒரு ஐந்து முதல் எட்டு நிமிடத்துக்குள் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. எங்கள் கிராமமே தரைமட்டமாகிவிட்டது. எங்கள் உறவினர்கள் எல்லாம் பலியாகி விட்டார்கள். எனது குடும்பத்தில் அம்மா உட்பட 5 போ் பலியாகிவிட்டார்கள்" தற்போது கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் கணேசின் கதையைப் போல இந்த சுனாமிப் பேரலை ஆயிரமாயிரம் சோகக் கதைகளை எங்கள் தாயகத்தில் ஏற்படுத்திவிட்டுப் போய்விட்டது. வட தமிழீழத்தின் அவலத்திற்கு கணேசின் அனுபவம் சாட்சி என்றால் தென் தமிழீழத்தின் அழிவுகளுக்கு ரவியின் அனுபவம் சாட்சியாக இருந்தது.

உயிர்ப் பலிகொண்ட கடற்கோள் பேரலை அடங்கிய மயான பூமியில் பயணம் செய்த 'தமிழ்நெற்' செய்தியாளர்கள் திரட்டிய தகவல் இது. மட்டக்களப்பு நகருக்கு வடக்கே இருக்கும் சீலாமுனை கிராமத்தின் வாவியோரத்தில் இருந்து எதிர்க்கரையில் இருக்கும் நாவலடிக் கிராமத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார் ரவி. வாவியோடும் கடலோடும் அதிகம் பரிச்சயம் உள்ள மீனவரான ரவி இன்னமும் பேரழிவு தந்த அதிர்ச்சி, அவலம், துன்பம் எதிலிருந்தும் மீளாதவராய் இருந்தார். இன்று நாவலடி கிராமத்தில் எஞ்சிய மக்கள் இவரைப் பற்றியே பேசுகின்றார்கள். நீரில் சிக்குண்டு தத்தளித்துக் கொண்டிருந்த நூறு பேரை இவர் காப்பாற்றி இருக்கிறார். ரவி பார்த்துக் கொண்டிருந்த நாவலடிக் கிராமம் இன்று பிணங்கள் புதையுண்டு போன மணல் மேடையாகக் காட்சி தருகின்றது. மட்டக்களப்பு வாவிக்கும், கடலுக்கும் இடையில் அமைந்துள்ள இந்த கிராமத்தில் 475 குடும்பங்களைச் சேர்ந்த 1890 பேர் வசித்து வந்ததாக பிரதேச செயலக தரவுகள் கூறுகின்றன. இவர்களில் 310 பேர் இறந்து போயுள்ளதாக உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இத்தொகை 1000த்திற்கும் அதிகமாக இருக்கலாம் என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இங்கு வசித்து வந்த குடும்பங்கள் அனைத்தும் குறைந்தது தங்கள் குடும்ப உறுப்பினர் ஒருவரையாவது இழந்துள்ளனர். கடல் வெள்ளம் உயர்ந்த போது வாவியின் நடுவில் மீன்பிடித்துக் கொண்டிருந்ததாக ரவி கூறுகிறார். அவர் தனது அனுபவத்தை விபரித்தார். "நாங்கள் போட்டில் நின்ற போது திடீரென நீர்மட்டம் இப்பொழுது இருப்பதிலிருந்து 13, 14 அடி உயர்ந்தது. எங்களுக்குச் சுற்றிலும் நீர் தான் தெரிந்தது. சுற்றியிருந்த மரங்கள் எல்லாம் வெறும் இலைகள் இருப்பது போல அவற்றின் உச்சிகள் தெரிந்தன. சிறிது நேரத்தில் நீர் குறையத் தொடங்கியப் போது தான் எங்களுக்கு விபரீதம் புரிந்தது. ஊரைக் கழுவிக் கொண்டு தண்ணீர் கடலுக்குள் வடிந்து சென்றது. ஆற்றுக்குள் இருந்து மக்கள் கத்திக் கொண்டிருந்தனர். அவர்களின் ஓலங்களுக்கு இடையில் எங்களால் இயலுமான வரை காப்பாற்றுவதற்கு முயற்சி செய்தோம். இருப்பினும் ஆற்றின் உள்ளே தத்தளித்தவர்களில் ஒரு சிலரைத்தான் எங்களால் காப்பாற்ற முடிந்தது. பெருமளவு மக்கள் மரங்களைப் பிடித்த வண்ணம் கரைகளிலே கூக்குரலிட்டவாறு நின்றனர். அவர்களில் 100 பேர் வரையில் எங்களால் காப்பாற்ற முடிந்தது. இவர்களில் 8 இராணுவத்தினரும் அடங்குவர். கடைசியில் எனது படகும் உடைந்துப் போய் விட்டது. இந்தப் போராட்டம் முடிந்த பின்னர் சடலங்கள் மிதக்கத் தொடங்கின. ஆற்றில் மிதந்த எல்லாச் சடலங்களையும் எங்களால் எடுக்க முடியவில்லை. அவை கடலோடு சங்கமிக்கத் தொடங்கின" என்று அதிர்ச்சியான தனது அனுபவத்தைக் கூறுகிறார் ரவி. அரை மணி நேரம் வரையில் தண்ணீர் கிராமத்திற்குள் இருந்தது. எங்களால் எடுக்க முடிந்த சடலங்களை எடுத்தோம். இப்போது உள்ளவற்றை அவை உள்ள நிலையிலேயே எரியூட்டுகிறோம். பெருமளவில் கம்பி வேலிகளில் சிக்கியபடி பெருமளவு பெண்களின் சடலங்கள் இருக்கின்றன என்று ரவி கூறிக்கொண்டிருக்கும் போதே இடைமறித்த அவரது உதவியாளர் இரவு பூராவும் நாவலடி கிராமத்தில் அழுகுரல் கேட்பதாகவும் பேரலை வந்த அன்றிரவு தங்களை காப்பாற்றுமாறு நாவலடிப் பகுதியில் இருந்து கூக்குரல் கேட்ட வண்ணமே இருந்தது. எங்களால் அந்தச் சத்தங்களைத் தாங்க முடியவில்லை. ஆற்றங்கரை ஓரத்திலே இருந்த நாங்கள் உடனடியாக அதிலிருந்து தூர இடங்களுக்குச் சென்று தங்கினோம் என்றார். ரவியுடன் உரையாடிக் கொண்டிருக்கையிலே நாவலடியில் இருந்து சிலர் வள்ளத்தின் மூலம் வாவியினைக் கடந்து சீலாமுனைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அன்னை பூபதி நினைவாலயம்

வந்தனர். இவர்கள் இறந்த தங்கள் உறவுகளுக்கு 8 ஆம் நாள் செய்யப்படும் சடங்கினை செய்து விட்டு வருவதாக ரவி கூறினார். அழுத வண்ணம், வாய்விட்டு தங்கள் வேதனையைக் கதறிய வண்ணம் அவர்கள் வள்ளத்திலிருந்து இறங்கினர். "எங்கட பிள்ளைகள காப்பாற்ற முடியல்லையே" என்று அவர்களின் அவலமான குரல் மிக வலி நிறைந்ததாய் இருந்தது. என்.சௌந்திரராஜா தனது இரண்டு பிள்ளைகளையும் தாய் தந்தையரையும் இழந்து தனது மனைவியை மட்டுமே காப்பாற்றி இருக்கிறார். இறந்து போன நால்வரின் மூவரின் சடலத்தை மட்டுமே மீட்டெடுக்க முடிந்த இவர் இன்று தனது உடைந்து போன வீட்டினுள்ளே இறந்தவர்களுக்கு 8ஆம் நாள் கிரியை செய்து விட்டு வந்திருக்கிறார். தனது உறவுகள் பறிபோன சோகத்தை விவரித்தார். "என்ட பிள்ளை கடைசி வரையும் 'அப்பா' 'அப்பா' என்று கத்தியபடி என் கழுத்தை கட்டியணைத்தவாறே இருந்தான். கடல் அலைகளின் தாக்கம் அதிகமாக இருந்த போது நான் நீருக்குள் சிக்கி செத்துப் போய் விடுவேன் என்ற கட்டத்தில் அவனாவது பிழைக்கட்டும் என்று என்னில் இருந்து அவனைக் கழட்டி விட்டேன். இன்று நான் காப்பாற்றப்பட்டு விட்டேன். அவன் கடலோடு போய்விட்டான். மற்ற மகன் வகுப்புக்கு போனவன் வகுப்பு மாணவர்களோடு சேர்ந்து கடலோடு சங்கமமாகி விட்டான். எங்களுக்கு யாராவது இதைப் பற்றிச் சொல்லியிருந்தால் சொத்துக்கள் அழிந்தாலும் பரவாயில்லை எங்கள் உறவுகளையாவது காப்பாற்றியிருக்கலாம். இனி இந்த உயிர்களை எவ்வாறு நாங்கள் மீட்டெடுப்பது" என்று சௌந்தரராஜா சொல்லிக் கொண்டிருக்கும் போதே தனது நான்கு பிள்ளைகளில் மூன்று பிள்ளைகளைப் பறிக் கொடுத்து அவர்கள் விபரங்களை கூட கண்டுப் பிடிக்க முடியவில்லையே என்று கண்களில் நீர்வழியக் கூறினார் செந்தரராஜாவின் மைத்துனரான எஸ்.கெனமன். "5 நிமிடத்துக்கு முதல் சொல்லியிருந்தால் கூட தப்பியிருப்போம்.


ரவி


மீட்புப்பணியில் விடுதலைப்புலிகள்


கௌரீசன்


என்.சௌந்திரராஜா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இன்றைக்கு இந்த ஊரே இப்படி அழிந்துப் போயிருக்காது. எங்களிடம் 300க்கு மேற்பட்ட படகுகள் இருக்கின்றது. அதில் எங்கள் உறவுகளை ஏற்றி நடு வாவிக்கு வந்தாவது உயிர்களைக் காப்பாற்றியிருப்போம்" என்றார் கெனமன். இனி விறகு வெட்டிப் பிழைத்தாலும் பிழைப்போமேத் தவிர இந்த மயான பூமியில் குடியேற மாட்டோம் என்று அவர் கூறிக்கொண்டிருக்கும் போது இப்பகுதியில் மீள்குடியமர 30,000 ரூபா தருவதாகவும் பாதுகாப்பு முன் நடவடிக்கைகள் அறிவித்தல்கள் தருவதாகவும் இனிமேல் இவ்வாறான பிரச்சினைகளின் போது உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அரச அதிகாரிகள் கூறுகின்றனர் என ஒரு இளைஞர் தெரிவித்தார். அவர் கூறிக்கொண்டிருக்கும் போதே கெனமனும், சௌந்திரராஜாவும் கோபமடைந்தனர். இங்கிருந்து பார்த்திருந்தால்தான் எங்கட கஷ்டம் புரியும். இனி கடலுக்கு பக்கத்தில் ஒரு நாளும் இருக்க மாட்டோம். நாவலடி இப்ப ஊர் கிடையாது. அது சடலங்கள் நிரம்பிய சுடுகாடு. என்று கூறியபடி அரசாங்கத்தை கெட்ட வார்த்தைகளால் திட்டி தங்கள் ஆதங்கத்தை வெளிக்காட்டினார். எங்களுக்கு இப்படியான அலைப் பற்றியும், அலை ஏற்பட்டால் கடலில் ஏதேனும் அனர்த்தங்கள் ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் சொல்லியிருந்தால் இன்றைக்கு எங்கள் உயிர்களைக் காப்பாற்றியிருப்போம். இன்று தரைமட்டமான எங்கள் வீடுகளுக்குச் சென்று அழுகியப் பிணங்களுக்கு இடையிலும், துர்நாற்றத்துக்கு இடையிலும் இறந்தவர்களுக்கான இறுதிக் கடமைகளை நிறைவேற்ற வேண்டி வந்திருக்காது என்றார் சௌந்திரராஜா. மிகவும் உணர்வு பூர்வமாக இருந்த இவர்களால் அதிக நேரம் பேச முடியவில்லை. என் உறவினர்கள் 42 பேர் மாண்டுப் போய் விட்டனர். இனி எங்களுக்கு என்ன வேண்டும். யாருக்கு வேண்டும் நிவாரணங்கள் எல்லாம் என்கிறார். தன் மூன்றுப் பிள்ளைகளின் உடல்களைக் கூட காணக் கிடைக்கவில்லையே என்ற வற்றாத கவலையோடு இருக்கும் கெனமன். யாராலும் பேச முடியவில்லை. பேச ஆரம்பித்ததும் உணர்ச்சிவசப் படுகிறார்கள். மனோநிலை ரீதியில் இவர்கள் எதிர்கொண்டுள்ள பாதிப்பு வெளிப்படையாகவேத் தெரிகிறது. இப்போது கௌரீசன் என்ற கிழக்குப் பல்கலைக்கழக பட்டதாரி இளைஞன் மனோவியல் ரீதியான தனது பாதிப்பைக் கூறினார். "எனக்கு மக்களின் கத்துகிற, ஓடுகிற சத்தங்கள் இரைச்சல்களைக் கேட்டாலே இப்போது பயமாக இருக்கிறது. நான் தண்ணீர் திரண்டு வருவதைக் கண்டு ஓடிச் சென்று ஒரு மேல் மாடி வீட்டில் ஏறினேன். மேல் மாடியில் கீழ்த் தளத்தை நிரப்பியத் தண்ணீர் மேலே வருமோ என்று பயந்துக் கொண்டிருந்தோம். தண்ணீர் வடிந்து செல்லும் போது மக்களை அடித்துச் செல்வதைப் பார்த்தேன். அவர்களின் ஓலம் இன்னமும் என்னுள் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றது. சாகலாம், ஆனால் இப்படி பயந்து பயந்து சாகக்கூடாது. எங்களின் ஒரு தலைமுறை அழிந்துப் போய்விட்டது. (12,000 சிறுவர்கள் இறந்துள்ளதாக இதுவரையில் கிடைத்த உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன) இந்த மிகப்பெரிய அழிவை முன்கூட்டியே சொல்வதற்கு யாராலும் முடியவில்லையே. குளோபல் விலேஜ் என்கிறார்கள், உலகம் சுருங்கி விட்டது என்கிறார்கள் ஆனால் 3 மணி நேரத்துக்கு முதல் நடந்த விடயத்தை நாங்கள் அறிய முடியவில்லையே. இதுதான் தகவல் யுகமா. நியூசிலாந்தில் நடக்கும் கிரிக்கெட் போட்டியை பேரலைச் சம்பவம் நடந்த தினத்தன்று இலங்கையில் பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் எங்களுக்கு அவசியமான ஒரு விடயத்தை எங்களால் அறிய முடியவில்லை. இதைத்தான் உலக மயமாக்கல் என்பதா?" என்று கேள்வி எழுப்பினார் கௌரீசன். நான் குழந்தைகள், சிறுவர்களை நினைத்துக் கதறினேன். என் கண் முன்னால் அடித்துச் செல்லப்படும் சிறுவர்களைக் காப்பாற்ற முடியவில்லையே என்ற ஆதங்கம் எனக்கிருக்கின்றது. இருப்பினும் ஆற்றுத் தண்ணீரோடு பரிட்சயமான இந்தச் சிறுவர்கள் ஓடித் தப்பி தங்கள் உயிர்களைக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இருப்பினும் என்னால் இன்னமும் சகஜ நிலைக்கு வர முடியவில்லை என்று சொல்லும் கௌரீசனின் முகத்தில் இன்னமும் கலவரம் தெரிகிறது. எந்த உதவியும் இன்றி தங்கள் உயிர்களைக் காத்துக் கொள்ள முடியாமல் நீரோடு போராடிய படி இறந்த போன உடல்கள் இன்னமும் நாவலடியில் இருப்பதாக ரவி கூறுகிறார். அந்த உடல்கள் போராடிய வண்ணமே இறந்திருப்பதாக அந்தப் பகுதிக்குச் சென்று திரும்பியவர்கள் கூறுகின்றனர். இன்னமும் ஆங்காங்கே இந்த உடல்கள் இருந்த வண்ணமே இருக்கிறது. பாண்டிய மன்னனின் புகழ் சொல்லும் ஒரே ஒரு பண்டையப் பாடலில் "பிடித்த வேலுடனும் மடித்த வாயுடனும் பாண்டிய வீரன் போர் முனையிலே இறந்து கிடக்கிறான்." என்பதைப் போல இறந்த பின்னும் தங்கள் உயிருக்கான போராட்டத்தை வெளிக்காட்டிக் கொண்டு இன்னமும் உடல்கள் ஆற்றினுள் மிதந்த வண்ணமும் நாவலடிப் பிரதேசத்திலும் இருந்துக் கொண்டிருக்கின்றது. இந்த நாவலடி கிராமத்தில் தான் அன்னை பூபதியின் சமாதி இருந்தது. இன்று அந்த பூமி சமாதிகளின் பூமியாகி விட்டது. இந்த கிராமத்திற்கு அண்மையாக இருந்த காயத்திரி பீடத்தில் நடைபெற்ற பிரார்த்தனையில் கலந்து கொண்ட 100க்கும் அதிகமானவர்கள் கடலினால் காவு கொள்ளப்பட்டனர். இன்று பல கிராமங்கள் இல்லாமலே போய்விட்டன. இந்த கிராமங்களில் இருந்து தப்பியிருப்பவர்களின் உள்ளங்களும் சௌந்திரராஜாவைப் போலவும் கெனமனைப் போலவும், ரவியைப் போலவும், கௌரீசனைப் போலவும் கொதித்துக் கொண்டு வேதனையின் வடிவமாயிருக்கின்றது. இதில் சொல்லப்பட்ட கதை ஒரு கிராமத்தின் கதை மட்டுமல்ல. ஒவ்வொரு கிராமத்திலும் நடந்த கதையின் ஒரு விம்பமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாற்றுப் பேரழிவு



தமிழர் தாயகத்தில் இயக்கை அனர்த்தம் என்று சொல்கிற போது 1964 ம் ஆண்டு ஒரு பெரிய புயல் வந்தது. 1975 ம் ஆண்டு மீண்டும் ஒரு புயலும் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டது. ஆனால் கடல் பொங்கி பல்லாயிரக்கணக்கான மக்களை காவுகொண்டு நிகழ்வு எமது நினைவுக்கு அல்லது எமது பரம்பரையின் நினைவுக்கு எட்டக் கூடியதாகவே நிகழந்ததாக வரலாறு இல்லை.

ஆனால் சங்க இலக்கியங்களிலே கடல்கோள் என்று குறிப்பிடப்படும் இந்தப் பேரனர்த்தம் நிகழ்ந்து குமரிக்கண்டமும், குமரி மலையும் கடலில் மூழ்கியதாக உள்ள குறிப்புகள் வெறும் இலக்கியச் சான்றுகள் என்றே இதுவரை நம்பப்பட்டு வந்தன. தமிழ்கூறு நல்லுலகம் என்பது 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை' என்று தொல்காப்பியத்தில் காணப்படும் குறிப்புகளும் 'பஃறுளி ஆற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள' என்று சிலப்பதிகாரத்தில் காணப்படும் குறிப்புகளும் கடல் கொண்ட காவிரிப்பூம் பட்டணம் என்ற கூற்றுகளும் தமிழர் நிலத்தை விழுங்கிய ஆழிப்பேரனர்த்தத்துக்கு சான்றாக உள்ளன.

எங்கள் நினைவுக்கு எட்டாத வரலாற்றின் தொன்மைக்காலத்தில் குமரிக்கண்டம் என்ற தமிழர் நிலத்தை அழித்த கடல் கோள் இன்று சுனாமி என்ற பெயரில் எங்கள் தாயகத்தில் கரையோரத்தை காவுகொண்டிருக்கிறது.

ஜனவரி எட்டாம் திகதி(08.01.2005) விடுதலைப்புலிகளின் அபிவிருத்திக்கும் திட்டமிடலுக்கு மான செயலகத்தால் வெளியிடப்பட்ட அதிகார பூர்வமான கணக்கின்படி தாயகத்தில் 20ஆயிரத்து 279 பேர் பலியாகியுள்ளனர். 6725 பேர் காணாமல் போயுள்ளனர்.

தென் தமிழீழத்தின் அம்பாறை மாவட்டம் இந்தப் பேரழிவால் அதிகளவுக்குப்பாதிக்கப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக மட்டக்களப்பு மாவட்டமும் வட தமிழீழத்தில் முல்லைத்தீவு மாவட்டமும் யாழ் மாவட்டத்தின் வடமராட்சி கிழக்குப் பகுதிகளும் அதிகளவுக்குப் பாதிக்கப்பட்டன. நூற்றுக் கும் மேற்பட்ட கரையோரக்கிராமங்கள் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டன. பல கிராமங்களில் அடையாளம் காட்ட அல்லது உடலங்களை பொறுப்பெடுக்க யாருமே இல்லாத அளவுக்கு மக்கள் குடும்பம் குடும்பமாக அழிந்துபோன கொடுமை நிகழ்ந்துள்ளது.

08.01.2005 அன்று விடுதலைப்புலிகளின் அபிவிருத்திக்கும் திட்டமிடலுக்குமான செயலகத்தால் வெளியிடப்பட்ட அதிகார பூர்வமான கணக்கின்படி

| மாவட்டம் | இறந்தவர்கள் | காயமடைந்தோர் | காணாமல்போனோர் | இடம்பெயர்ந்தோர் |
|---|---|---|---|---|
| அம்பாறை | 13128 | 648 | 2643 | 31235 |
| மட்டக்களப்பு | 2731 | 1166 | 1081 | 27963 |
| யாழ்ப்பாணம் | 849 | 656 | 1540 | 6824 |
| கிளிநொச்சி | 560 | 645 | 56 | 10651 |
| முல்லைத்தீவு | 1932 | 2590 | 1068 | 5484 |
| திருகோணமலை | 1079 | - | 337 | 28568 |
| வவுனியா | - | - | - | 111 |
| மொத்தம் | 20279 | 5705 | 6725 | 110836 |

## சுனாமி என்ற கடல் கோள் ஏன் எப்படி?

நாம் வாழுகின்ற இந்தப் பூமியின் மேற் பரப்பு. ஆசிய இந்தியக்கண்ட மேடு, நடு அத்தி லாதந்திக் கண்ட மேடு, பசுபிக் கண்டமேடு, அன்ராட்டிக்கா கண்ட மேடு, வட அமெரிக்கக் கண்டமேடு, தென்னமெரிக்க கண்ட மேடு, ஆபிரிக்கக் கண்ட மேடு என 7 கண்ட மேடு களைக் கொண்டது. இந்தக்கண்டமேடுகள் ஒவ்வொன்றும் ஆக்குரோசம் கொண்ட காளை மாடுகள் ஒன்றுடன் ஒன்று தலையோடு தலை வைத்து முட்டி மோதிக்கொண்டிருப்பதைப் போல மோதிக்கொண்டிருக்க பூமியின் உள் ளடக்குகளில் தினசரி வெடிப்புகளும் மோதல் களும் குமுறல்களும் நடந்துகொண்டே இருக் கும். இந்த மோதல்களாலும் குமுறல்களாலும் உருவாகின்ற அமுக்கம் அதிகரித்து கண்ட மேடுகளில் ஏற்படுகின்ற உராய்வுகளின் தாக்க மும் அதனுடன் இணைந்து கொள்ள பூமி பிளந்து நில அதிர்வாகவும் எரிமலைக் குமுறல் களாகவும் வெளிப்படுகிறது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாகச் சொல்லப்படுகிறது.

கடலுக்குள் நில அதிர்வு ஏற்பட்டு தரை பிளக்கும் போது வெளிப்படும் சக்தி வினாடிக்கு இருநூறு தடவைக்கு மேல் நீரைச் சுழற்றி மணிக்கு 500 முதல் 800 கிலோ மீட்டர் வேகத் தில் பாயக்கூடிய அமுக்க அலைகளை உருவாக்குகிறது. இந்த அலைகள் நில அதிர்வு நடந்த இடத்தில் பெரிதாக எந்த சலனத்தையும் காட்டுவதில்லை. அதற்குப் பதிலாக கடலுக் கடியில் ஜெட் வேகத்தில் பயணம் செய்து கரையில் வந்து நீர் மட்டத்தை 500 மீட்டர் உயரத்துக் குக்கூட உயர்த்திப் பாய்ந்து எல்லாவற்றையும் சுருட்டி அடித்து இழுத்துச் சென்றுவிடுகின்றன.

தொகுப்பு: திறலோன்



1896 ஜப்பானைத் தாக்கிய சுனாமி அலையின் உயரம் 7 மாடிக் கட்டிடத்தை மூழ்கடிக்கும் அளவுக்கு இருந்ததாக கூறப்பட்டுள்ளது. இந்தப் பேரனர்த்தத்தில் 26 ஆயிரம் பேர் உயிரிழந்த தாகவும் தெரியவருகிறது. 1958ம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள அலஸ்க்காவில் ஏற்பட்ட சுனாமி தான் இது வரை ஏற்பட்ட சுனாமிகளில் அதிக உயரமானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சுனாமி அலையின் உயரம் 514 மீட்டருக்கு மேல் இருந்ததாக அளவிடப்பட்டுள்ளது.

இன்றைய சுனாமி கடந்த டிசம்பர் மாதம் 26 ம் திகதி காலை 6.30 மணிக்கு ஆசிய இந்தியக் கண்ட மேட்டுப்பகுதியில் இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவில் கடலுக்கடியில் ஏற்பட்ட நில அதிர்வு இந்தியக் கண்டமேட்டுக்கும் ஆசியக்கண்டமேட்டுக்கும் இடையில் 200 கிலோமீட் டர் நீளத்துக்கும் 50 முதல் 100 கிலோ மீட்டர் அகலத்துக்கு பிளவை ஏற்படுத்தியதுடன் ஆசியக்கண்ட மேட்டை உயர்த்தி இந்தியக் கண்டமேட்டை தாழ்த்திவிட்டது.

இதனால் ஏற்பட்ட அழுத்தம் 8.9தில் இருந்து 9.0 டிக்டர் அளவில் வெளிபட்டு சுனாமி அலைகளை உருவாக்கி முதலில் இந்தோனேசியாவின் சுமாத்திரா மற்றும் பண்டா அஷே பகுதிகளை தாக்கியிருக்கிறது. அடுத்து அந்தமான் நிக்கோபார் தீவுகளை சூறையாடிவிட்டு சரியாக 8.15 க்கு தமிழகக் கரைகளையும் 8.30 எமது தாயகப்பகுதியையும் தாக்கியிருக்கிறது.

எமது தாயகத்துக்கும் நில அதிர்வு நடந்த சுமாத்திர தீவுக்கு மிடையில் உள்ள தூரம் இரண்டாயிரம் கிலோ மீட்டராகும். இரண்டு மணி நேரத்தில் இரண்டாயிரம் கிலோ மீட்டரை இந்த பேரலை கடந்திருக்கிறதென்றால் அதனுடைய வேகம் மணிக்கு ஆயிரம் கிலோ மீட்டராக இருந்திருக்கிறது.

கடலுக்கடியில் நில அதிர்வு ஏற்பட்டு சுனாமி அலைகள் உருவாவதை கண்டறிந்து எச்சரிக்கை செய்யும் அமைப்பு பசுபிக் கடற்பிராந்தியத்தில் இருக்கிறது. இந்திய இலங்கை கடற்பிராந்தியத்தில் இது இல்லை என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். சுமாத்திரா தீவில் ஏற்பட்ட கடலடி நில அதிர்வு அதற்கு தெற்கே இருந்த ஒரு அலைக்கண்காணிப்பு நிலையத்தில் பதிவு செய்யப் பட்டதாகவும், இந்துமா கடல் பிராந்தியத்திலோ அல்லது வங்காள விரிகுடா பகுதியிலோ அலைக்கண்காணிப்பு நிலையம் எதுவும் இல்லாததால் இந்த அலை எந்தத்திசை நோக்கிச் செல்கிறது என்பதை கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்ட தென்றும் அப்படிக்கண்டு பிடிக்கப் பட்டிருந்தால் இலங்கையிலும் இந்தியாவிலும் ஏற்பட்ட உயிரழிவுகளை தடுத்திருக்கலாம் என்று அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

தரையிலே இந்த நிகழ்வு நடைபெறுகின்ற பொழுது நகரங்கள், கிராமங்கள் எல்லாம் தரை மட்டமாகி பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்படுகின்றன. பூமியின் மேற்பரப் பில் 70 வீதத்தை ஆக்கிரமித்திருக்கும் கடலுக் குள் இந்த நிகழ்வு நடைபெறும் போது அது அதே இடத்தில் வெடித்தச் சிதறுவதில்லை. அதற்குப் பதிலாக சுனாமி உருவாகிறது.

## சுனாமியும் சுனாமியின் வரலாறும்

சுனாமி என்பது ஒரு ஜப்பானியச் சொல். ஜப்பானில் அடிக்கடி இந்த அனர்த்தம் நிகழ்வ தால் இதற்கு சுனாமி என்று பெயர் சூட்டப்பட்டு அதுவே சர்வதே அளவிலும் பேசப்படுகின்ற ஒன்றாகஅமைந்துவிட்டது. ஜப்பானிய மொழி யில் சுனாமி என்றால் பேரலை அல்லது துறை முக அலை என்று அர்த்தம் கொள்ளப்படுகி றது. அதாவது இந்தச் சுனாமி துறைமுகங் களையும் அதில் தரித்து நிற்கும் கப்பல்களை யும் மூழ்கடித்ததால் அதை துறைமுக அலை என்ற அர்த்தத்தில் ஜப்பானியர்கள் அழைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





எம்மக்களின் கடலோர வாழ்வியலைப் பொறுத்தளவில் சுனாமி பற்றியகல்வியறிவும் நேர்த்தியாகத் திட்டமிட்டு அமைக்கப்படும் சுனாமி ஆய்வுமையங்களும், எச்சரிக்கை நிலையங்களும் யுத்தஅனர்த்தங்களின் பின்னரான மீண்டெழும் புனர்நிர்மாணக் கட்டுமானங்களின் மிகநீண்ட வரிசையில் கடைசியாக வந்தாலும் முக்கிய இடத்தைப் பிடிப்பனவாகவே இருக்கின்றன

# சுனாமி
# TSUNAMI

சுனாமி (Tsunami) என்பது ஒரு யப்பானியச் சொல்லாகும். 'R' (tsu) என்பது துறைமுகத்தையும் 'நாமி' (nami) என்பது அலையையும் குறிக்கின்றது. பண்டைய யப்பானியர்கள் சாதாரண கடலலையைத் தான் (tidal waves) 'சுனாமி' என்கிற பதத்தால் குறிப்பிட்டிருப்பார்கள் என்று கூறப்படுகிறது. ஆனால் விஞ்ஞானஉலகில் இதன் அர்த்தம் இன்னும் வலுவானது. 'சுனாமி' என்பது 'நிலவதிர்வினால் உண்டாகும் கடலலைகள்' (seismic sea waves) என்று பொருள்படுகிறது. ஆனால் இதுவும் பொருத்தமல்ல என்போரும் உண்டு. காரணம் சுனாமி அலைகள் கடலின் அடியில் உண்டாகும் நிலவதிர்ச்சியால் மட்டுமல்லாது வேறு சில காரணங்களாலும் ஏற்படலாம்.

கடலடிநிலச்சரிவு 'லாவா' எனப்படும் எரிமலைக்குழம்பின் பாரிய வெளியேற்றம், வெடிப்புகள், அண்டவெளியிலிருந்து பெரியகற்கள் விழுதல் ஆகியனவற்றால்கூட ஏற்படலாம். எது எப்படியாயினும் 'சுனாமி' என்பது அசுரத்தன்மையான மாபெரும் கடலலையின் தொடர்ச்சியான பயணம் என்பது பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதே.

ஒரு சுனாமியலையின் தாக்குத்திறன் அந்நேரம் அங்கிருக்கக் கூடிய கடலலையின் மேல்மட்டத்தைப் பொறுத்ததாக இருப்பினும் சாதாரண கடலலைகளுக்கும் சுனாமியலைகளுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. சாதாரண குளங்களிலும் வாவிகளிலும் நீரின் மேற்பரப்பைத் தொட்டு வீசும் காற்றின் தன்மைக்கேற்ப சிற்றலைகள் தோன்றுவதுபோல கடலிலும் அலைகள் தோன்றுவது ஒருவகை. இவை சிற்றலைகளாக அல்லாமல் பேரலைகளாகவும் இருக்கலாம். இவைதவிர சூரியன் சந்திரன் உட்பட வேறுகிரகணங்களின் சமநிலையற்ற ஈர்ப்புவிசைக் கேற்பவும் சாதாரண கடலலைகளின் உருவாக்கமும் குணங்களும் அமைகின்றன. கடலில் ஒரு பெரும்புயலினால் ஏற்படக்கூடிய அலையின் நீளம் ஏறக்குறைய 150 மீட்டர்கள் இருக்கலாமென்றால் ஒரு சுனாமியலையின் நீளம் 100 கிலோமீட்டர்களுக்கும் அதிகமாக இருக்கலாம்.

ஆனால் சுனாமி வேறானது. உதாரணமாக சாதாரணமாக நிலத்தில் ஏற்படுவது போல கடலின் அடியிலும் புவியினது மேற்பரப்பை உருவாக்கும் மிகப்பெரிய அளவிலான பாறைத் தகடுகள் (Plates) திடீரென்று ஒன்றுக்கொன்று எதிர்த்திசையில் அசையும்போது புவிநடுக்கம் உண்டாகின்றது.

இவ்வேளைகளில் புவித்தகடுகள் குலுங்கி அதிர்ந்து உடைந்து அதன் துண்டங்கள் நிலைக்குத்தாக பலமீட்டர்கள் மேலெழும்புகின்றன. இது பல்லாயிரக்கணக்கான கனகிலோமீட்டர் அளவுள்ள நீரைத் திடீரென்று அசுரவேகத்தில் நிலைக்குத்தாக இடம்பெயர வைக்கிறது.

இவ்வாறு கடலில் தாக்குதலுக்குள்ளான மையப்பகுதியிலிருந்து பேரலைகள் உருவாகி நாலாபுறமும் கடும்வேகத்துடன் ஆயிரக்கணக்கான மைல்களுக்குப் பரவுகின்றன. சிலநிமிட இடைவெளியில் பெரும் இராட்சத அலைகள் மீண்டும் மீண்டும் உருவாகின்றன. அதாவது சுனாமியின் அதிவேகபயணமொன்று உருவாகிறது.

சுனாமியின் சக்தியானது அது பயணம் செய்யும் கடலின் ஆழம், அலையின் நீளம் என்பவற்றால் தீர்மானிக்கப்படுகின்றது. சராசரியாக மூன்று மைல் ஆழமுள்ள திறந்த கடலில் ஏறக்குறைய அறுநூறு மைல் வேகத்தில் பயணஞ்செய்யும் சுனாமியானது ஆழம் குறைந்த பகுதியை நெருங்கும்போது வேகம் தணிகிறது. அதேவேளையில் அதன் சக்தி மண்டலம் ஏறக்குறைய மாறிலியாகவிருப்பதால் அதன் உக்கிரம் அலையின் உயரத்தால் சமநிலைப்படுத்தப்படுகிறது. அதாவது அதன் அலையின் உயரம் பலமீட்டர்களுக்கும் அதிகமாக இருக்கும். இதனால்தான் நட்டநடுக் கடலில் சத்தம் சந்தடியின்றிப் பயணிக்கும் சுனாமி கரையோரங்களில் மண்மீதும் பயணஞ்செய்து பெரும் உயிரிழப்புகளையும் பொருட்சேதங்களையும் உண்டுபண்ணிவிடுகிறது.

சுனாமிபற்றிய எச்சரிக்கை செய்வதற்கான வசதிகளற்ற கடலோரப் பகுதிகளைப் பொறுத்தவரை நூற்றுக்கணக்கான மீட்டர் உயரத்தில் கரையைநோக்கி மிகவேகமாக விரைந்துவரும் ராட்சதஅலைகள் மட்டுமே சுனாமியின் ஒரே அடையாளமாகிவிடுகிறது. அடுத்த சிலதுளி நிமிடங்களியே கரைதாண்டி பெரும் அனர்த்தங்களை விளைவித்தும் விடுகிறது.

பசுபிக்சமுத்திரத்திலேயே சுனாமித்தாக்குதல் அதிகளவில் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி ஆழிப்பேரலை உருவானது எப்படி?

**1.**

பூகோளத்தின் மேற்பரப்பினை உருவகிக்கும் புவியோடுகள் திடீரென அசையும்போது பூமியதிர்ச்சி ஏற்பட வாய்ப்புண்டு.




**2.**

26-டிசம்பர்-2004 அன்று, கடந்த 40 வருடங்களுக்குள் நிகழாத அளவிற்கு, பாரிய பூமியதிர்ச்சி அவுஸ்திரேலியப் புவியோட்டிற்கும், யூரேசியப் புவியோட்டிற்கும் இடையில் இந்து சமுத்திரத்தில் நிகழ்ந்தது. இந்நில நடுக்கம் சுனாமிப் பேரலைகளை உருவாக்கியது. இவ்வலைகள் பல்லாயிரக்கணக்கான கிலோமீற்றர்களுக்கு, பல மணித்தியாலங்களாகப் பரவியது.




**3.**

புவிநடுக்கமையத்திற்கு வடக்கே இந்து சமுத்திரக் கடலடியிலுள்ள நிலத்தைப் புவியதிர்ச்சி உடைத்தது. இவ் வுடைவு பாரிய அலைகளைத் தோற்றுவித்து 4500கி.மீற்றர் சுற்றாடலில் 7 மணித்தியாலங் களிற்கு மேல் அழிவினை ஏற்படுத்த வழிகோலியது.





**4.**

பூமியதிர்ச்சியால் ஏற்பட்ட விசை, கடற்தளத்தினை மேல்நோக்கி பல மீற்றர்கள் உயர்த்தும்போது, நூற்றுக்கணக்கான கிலோமீற்றர் கனவளவு கடல் நீரினை இடம்பெயர்க்கின்றது. இதுவே, சுனாமிப்பேரலை உருவாகக் காரணமாகிறது.




**5.**

பாரிய அலைகள் புவிநடுக்க மையப் பகுதியிலிருந்து வெளிநோக்கி நகரத் தொடங்கியது. சுனாமிப் பேரலையின் பயணம் தொடங்கிவிட்டது.



**6.**

ஆழ்கடலில் சுனாமிப் பேரலை மணித்தியாலத்திற்கு 800கி.மீற்றர் (500மைல்/மணி) வேகத்தில் சென்றது. ஆழம் குறைந்த கரையோரப் பகுதிகளை அண்மித்ததும், சுனாமிப் பேரலை வேகத்தால் குறைந்து, உயரத்தால் அதிகரித்தது.




நன்றி: பி.பி.சி இணையத்தளம்

BBC NEWS UK EDITION



▲ வந்து கொண்டிருக்கும் சுனாமிப் பேரலை பற்றி இலங்கையின் கரையோரப் பகுதிகளுக்கு, எந்தவிதமான எச்சரிக்கையும் கிடைக்கவில்லை. மேலுள்ளது 2004ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் செய்மதியினால் எடுத்த களுத்துறைக் கரையோரம்.



▲ அவர்களுக்குக் கிடைத்த ஒரேயொரு சமிக்ஞை, சுனாமிப் பேரலை தாக்குவதற்கு முன் கடல் நீர் திடீரெனப் பின்வாங்கியது. கடற்கரையிலிருந்து நூற்றிற்கும் மேற்பட்ட மீற்றர்கள் தூரத்திற்கு கடல் தளம் வெளித்தெரிந்தது.



▲ பல சுனாமிப்பேரலைகள் 5நிமிடத்திற்கும் 40 நிமிடத்திற்கும் இடைவெளியில் வந்தன. இலங்கையின் கரையோரப்பகுதிகளில் ஆகக்குறைந்தது 1கிலோமீற்றர் தூரத்திற்கு மேலாக உள்நோக்கி வந்து பாரிய அனர்த்தத்தை ஏற்படுத்தியது. மேலுள்ளது 26-12-2004 அன்று செய்மதியினால் எடுக்கப்பட்ட களுத்துறைக் கரையோரம்.

பெற்றிருந்தாலும் அது எங்கும் ஏற்படக்கூடிய ஒன்றே. காலத்திற்கு ஒருமுறை நிகழ்வதாக இருந் தாலும்கூட அது பெரும் இயற்கை அழிவையும் உயிரிழப்பையும் ஏற்படுத்தக்கூடியது.

கடந்த நாற்பது வருடங்களில் முன்னெப் போதும் இல்லாதவாறு 26 மார்ச் 2004 இல் அவுஸ் திரேலிய யூரேசிய பாறைத்தகடுகளின் முரண்பட்ட அசைவு இந்து மகாசமுத்திரத்தில் ஒரு பெரிய புவிநடுக்கத்தை ஏற்படுத்தியது.

எனவே எம்மக்களின் கடலோர வாழ்விய லைப் பொறுத்தளவில் சுனாமி பற்றிய கல்விய றிவும் நேர்த்தியாகத் திட்டமிட்டு அமைக்கப்படும் சுனாமி ஆய்வுமையங்களும், எச்சரிக்கை நிலை யங்களும் யுத்தஅனர்த்தங்களின் பின்னரான மீண்டெழும் புனர்நிர்மாணக் கட்டுமானங்களின் மிகநீண்ட வரிசையில் கடைசியாக வந்தாலும் முக்கிய இடத்தைப் பிடிப்பனவாகவே இருக்கின் றன.


**பரா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிப்புற்ற மக்களுக்கு அனுதாபம் தெரிவித்து தேசியத் தலைவர் அவர்களால் வெளியிடப்பட்ட அனுதாபச்செய்தி

" இந்த இயற்கையின் அழிவில் இரத்தஉறவுகளையும் அன்புக்குரியவர்களையும் பறிகொடுத்து, ஆற்றமுடியாத துயரத்திலும் வேதனையிலும் துடிக்கின்ற எமது மக்களுக்கு எனது அன்பையும், ஆறுதலையும், ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன். "



தலைமைச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்
29 டிசம்பர் 2004.

எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே,

இன்று எமது தாயக தேசம் என்றுமில்லாத பேரழிவைச் சந்தித்துப் பெரும் துயரில் மூழ்கிப்போய் நிற்கிறது. ஒரு சில நாட்களுக்கு முன்னர், எவருமே எதிர்பாராத தருணத்தில், திடீரெனச் சீறி எழுந்த நிலவதிர்வுப் பேரலைகள் தென்னாசியப் பிராந்தியத்தின் கடலோரப் பகுதிகளை மூர்க்கமாகத் தாக்கின. இலங்கைத் தீவில், யாழ்ப்பாணத்திலிருந்து காலி வரையான கடலோரம், குறிப்பாக எமது தாயகப் பகுதிகள் இயற்கையின் கோரத் தாண்டவத்திற்கு இலக்காகி பாரிய உயிரழிவையும் பொருளழிவையும் சந்தித்துள்ளன. கடலெழுச்சியின் இந்த அனர்த்தமானது கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்த போரினால் சிதைந்து போன எமது தேசத்தையும் நலிந்துபோன எமது மக்களையும் மிகவும் மோசமாகப் பாதித்துள்ளது. இந்த இயற்கையின் அழிவில் இரத்த உறவுகளையும் அன்புக்குரியவர்களையும் பறிகொடுத்து, ஆற்றமுடியாத துயரத்திலும் வேதனையிலும் துடிக்கின்ற எமது மக்களுக்கு எனது அன்பையும், ஆறுதலையும், ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அதுபோலவே, தமிழ் பேசும் தாயக மண்ணிலும், தென்னிலங்கைக் கடலோரப் பகுதிகளிலும் தமது உற்றார் உறவினரைப் பலிகொடுத்து ஆறாத துயரில் ஆழ்ந்திருக்கும் இஸ்லாமிய சிங்கள சகோதரர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக அத்துடன், தென்னாசிய நாடுகளிலும் இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் உயிரிழப்புகளைச் சந்தித்து துயறுரும் மக்களின் சோகவுணர்விலும் பங்கு கொண்டு எனது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றேன்.

இந்த நிலவதிர்வுப் பேரலைகள் எமது மண்ணில் நிகழ்த்திய பேரழிவில் பல்லாயிரக்கணக்கான எம்மக்களது உயிரைப் பலியெடுத்து பல ஆயிரம் பேரைக் காயப்படுத்தியதோடு மட்டும் நின்றுவிடவில்லை. பல கரையோரக் கிராமங்களையும் பல கரையோர நகரங்களையும் அடியோடு அழிந்து, எம்மக்களின் கடல் சார்ந்த பொருளாதார வாழ்வை நாசப்படுத்தியிருக்கிறது. பல குடும்பங்களை மொத்தமாக அழித்து, எம்மக்களது சமூக வாழ்வை சிதைத்திருக்கிறது, பல்லாயிரம் மக்களது வாழ்விடங்களை அழித்து அவர்களது எதிர்காலத்தை மோசமாகப் பாதித்திருக்கிறது.

இப்படியாகப் பேரழிவைச் சந்தித்து, பெரும் துயரத்தில் வாழும் எம்மக்களுக்கு எமது விடுதலை அமைப்பும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் பல்வேறு மக்கள் அமைப்புக்களும் கூட்டாக இணைந்து உதவி நடவடிக்கைகளையும் மனிதாபிமானப் பணிகளையும் முழு அளவில் மேற்கொண்டுவருகின்றன. இந்த நடவடிக்கைகளுக்கு வலுவூட்டுகின்ற வகையிலும் பாதிப்புற்றுள்ள மக்களுக்கு நம்பிக்கையூட்டுகின்ற வகையிலும் தாமாகவே முன்வந்து, தாராளமாக உதவிவருகின்ற புலம்பெயர்ந்தவாழும் எமது உறவுகளுக்கு இந்தநேரத்தில் எனது அன்பையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். எம்மக்களை இப்பேரழிவிலிருந்து மீட்கத் தொடர்ந்தும் உதவவேண்டும் எனவும் அவர்களைக் கேட்க கொள்கிறேன். அத்தோடு, பாதிப்புற்றுள்ள எம்மக்களுக்கு தாராளமாக உதவுமாறு உலக நாடுகளையும் ஐ.நாவின் அமைப்புக்களையும் வேண்டிக்கொள்கின்றேன்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'
(வே. பிரபாகரன்)
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# “தேசியத்தலைவரின் பணிப்பில் துரித மீட்புப்பணி சகலதுறை ஆளணி, வளங்களுடன் தீவிர முன்னெடுப்பு”

**கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை**

“தேசியத்தலைவரின் பணிப்பிற்கு அமைவாக மீட்புப்பணியினை மேலும் துரிதப்படுத்தும் நோக்கில் களமுனைத் தளபதிகள் நிர்வாக செயற்பாடுகளில் உள்ள அனைத்துப் பொறுப்பாளர்கள் உட்பட சகல ஆளணிகளையும் மற்றும் வளங்களையும் பயன்படுத்தி வருகிறோம்” என கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

இவர் முல்லைத்தீவில் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட பகுதியில் வைத்து வழங்கிய பேட்டியின் விபரம் வருமாறு.

(முல்லைத்தீவு)




### மீட்பு நடவடிக்கையின் தற்போதைய நிலை என்ன?

நாங்கள் தற்பொழுது மீட்புப் பணிகளை துரிதப்படுத்தியுள்ளோம் கண்டெடுக்கப் படும் உடல்களை எரியூட்டி வரும் அதேவேளை சுகாதார நலன் கருதித் தொற்று நோய்கள் ஏற்படாத வகையில் அதற்குரிய மருந்துகளை தெளிகருவி மூலம் அனைத்து இடங்களுக்கும் தெளிக்கும் பணியும் துரித கதியில் நடைபெற்று வருகிறது.

மீட்புப் பணியினை மேலும் துரிதப்படுத்தும் முகமாக எமது உந்துருளி படையணியினரையும் பணியில் ஈடுபடுத்தி உடல்கள் காணப்படும் இடங்களை அடையாளம் காணக்கூடியதாக செயற்படுத்தி வருகின்றோம். இவர்களின் செயற்பாட்டால் சில உடல்களை மீட்கக் கூடியதாக இருந்தது. அத்தோடு இன்றைய மீட்புப் பணிக்கு ஏற்கனவே நின்ற போராளிகளுடன் சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவினரையும் மேலதிகமாக ஈடுபடுத்தியுள்ளோம். அத்தோடு கடற்புலிகளின் மகளிர்படைப்பிரிவு, புலனாய்வுத்துறை தலைமைச்செயலகம், நிதித்துறை, காவல்துறை, மட்டு - அம்பாறைப் படையணி, கணிணி தொழில்நுட்பப்பிரிவு, விடுதலைப் புலிகளின் படைப்பிரிவுகள், துறைசார் போராளிகள் எனப் பலரும் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களோடு மக்களும் இணைந்து செயற்படுகின்றனர். இன்றைய மீட்பின் போது சுமார் 25 இற்கு மேற்பட்ட உடல்கள் கண்டெடுக்கப்படுமானால் நாளையும் எமது மீட்புப்பணி தொடர்ந்து நடைபெறும். மீட்புப்பணிக்கான கனரக வாகனங்களை அரசதுறை சார்ந்தவர்கள் தந்துதவுவதாகப் பலமுறை கூறியும் இன்றும் அவை வந்து சேரவில்லை. ஆனால் எமது நிதித்துறையினர் ஏழு கனரக வாகனங்களைத் தந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தவியுள்ளனர். இதன் உதவியுடனேயே மீட்புப் பணியினை ஓரளவு துரிதகதியில் செய்து வருகின்றோம். இம்மீட்புப் பணிக்கு பாரிய டோசர் போன்ற கனரக இயந்திரங்களே தேவை. ஆனால் தற்போது இப்பணிக்குப் பொருத்தமற்ற வாகனங்களையே கொண்டு பணியில் ஈடுபட்டு வருகின்றோம்.

**இவ் அனர்த்தத்தினால் முல்லைத் தீவுப் பகுதியில் அழிவடைந்த குடியிருப்புக்களின் தொகையினை அண்ணளவாகக் கூறமுடியுமா ?**

முல்லை நகரை அண்டிய பகுதியில் மட்டும் அதாவது வட்டுவாகலில் இருந்து தீர்த்தக்கரைவரையிலான சுமார் ஆறு கிலோ மீற்றர் நீளமுள்ள கரையோரக் கிராமங்களிலுள்ள 15000 மக்கள் தொகையில் 3000 பேர் சாவடைந்துள்ளனர். அதாவது சுமார் ஆறு கிலோ மீற்றர் நீளமும் கரையோரத்திலிருந்து ஒன்றரைக் கிலோமீற்றர் அகலமுள்ள பிரதேசத்துக்குள் இவ் அனர்த்தம் ஏற்பட்டது.

**மீட்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அதேவேளை, வேறு எவ்வாறான பணிகளை முதன் மையாகக் கொண்டு செயற்பட்டு வருகிறீர்கள் ?**

அதாவது மீட்புப் பணி ஒருபுறம் நடை பெற்றுக்கொண்டிருக்கும் இதேவேளை நலன்புரி நிலையங்களில் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கும் எதுவிதமான தொற்று நோய்களும் ஏற்படாதவாறு அதற்குரிய சுகாதார செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதோடு உணவு வழங்குதல் ஏனைய அத்தியாவசிய தேவைகளான உடை போன்றவற்றை வழங்கிவருகின்றோம். இந்தச் செயற்பாட்டுக்காக களமுனைத்தளபதிகள், நிர்வாக ரீதியாக செயற்படுகின்ற பொறுப்பாளர்கள் உட்பட சகல ஆளணிகளையும் செயற்படுமாறு தமிழீழ தேசியத்தலைவர் கூறியுள்ளார் அதற்கிணங்க சகலரும் இச்செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்கள். அத்தோடு எமது சகல வளங்களையும் பயன்படுத்தியே இந்தநடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்.
அத்தோடு அனர்த்தத்திற்குள்ளான முல்லைத்தீவு நகரப்பகுதிக்கு இன்று மின் வழங்கலுக்குரிய ஏற்பாடுகளை மேற்கொண்டு மின் விநியோகத்தினை ஆரம்பித்துள்ளோம். தொடர்ந்து 200 மீற்றருக்கு ஓர் இடத்தில் நீர்த்தொட்டிகளைவைத்து குடிநீர் வழங்க ஏற்பாடுகளைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். அடுத்து வரும் ஐந்தாம் திகதி வரை சேவையில் ஈடுபட்டுள்ள சகாதார அதிகாரிகள் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு காலவரையறை விதித்துள்ளார்கள். அதன் பின்னர் பாதிக்கப்பட்ட பகுதிகள் தவிர்ந்த அதனை அண்டிய ஏனைய பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்தவுள்ளோம்.

**இது இவ்வாறு இருக்க மீட்புப்பணிக்கும் ஏனைய செயற்பாட்டுக்கும் அரசதரப்பில் உதவிகள் எந்தளவில் கிடைக்கப் பெறுகின்றது ?**

அரசு உதவிகள் பற்றி அரசு தரப்பு அதிகாரிகளின் கருத்தை நோக்கினால் கடந்த இரு நாட்களுக்கு முன்பு ஓர் அரச அதிகாரி கூறினார். இங்கு தொலைத்தொடர்பு வசதி ஏற்படுத்தித் தரப்பட்டால் மீட்புப்பணிக்கான கனரக வாகனங்களை அனுப்புவதாக அதற்கிணங்க இப்பகுதியில் செய்மதித் தொலைபேசிகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என அனுமதி கொடுத்துள்ளோம். ஆனால் அவர்கள் கனரக வாகனங்களையும் வழங்கவில்லை.
அதைத் தொடர்ந்து நேற்றைய தினம் முள்ளியவளையில் முல்லை மாவட்ட அரச அதிபரின் தலைமையில் நடைபெற்ற ஒன்று கூடலிலும் இதனை வலியுறுத்தினேன். அதிலும் இவ் ஏற்பாடுகளை உடனடியாகச் செய்வதாக உறுதியாகப்பட்டது. ஆனால் இன்று ஒரு வாகனம் மட்டும் வழங்க முடியும் எனக் கூறினார்கள். அது கூட இன்னமும் வந்து சேரவில்லை. அதுவும் சாதாரண பாரம் தூக்கி வாகனமே தர முடியும் எனக் கூறுகின்றனர். ஆனால் கண்டெடுத்த உடல்களை எரியூட்டுவதற்கு எரிபொருளைக் கொண்டு செல்லக்கூட மிக முக்கிய பணியில் ஈடுபடும் உழவு இயந்திரங்களை வைத்தே பயன்படுத்துகிறோம். இந்த நிலையில் அரச வளங்கள் பயன்படுத்தப்படுவதாக அரச அதிகாரிகள் யாரும் கூறினால் அது இன்றுவரை முற்றிலும் தவறான தகவலாகவே இருக்கும்.

**இவ் அனர்த்தத்தினால் கடற்புலிகளுக்கு பாரிய உயிரிழப்பும் தளபாட இழப்பும் ஏற்பட்டதாக சிறீலங்காவில் பரவலாகப் பேசப்படுகிறது. இது தொடர்பாக உங்களது கருத்து என்ன ?**

கடற்புலிகளில் இவ்வனர்த்தத்தினால் மூன்று பேர்வரையே சாவடைந்துள்ளனர். ஒன்று கடற்புலிகளின் துணைப்படை வீரர் கப்டன் பெற்றோல் ஐயா, என்பவர். இவர் நீண்டகாலமாக கடற்புலிகளுக்கு பெரும் பங்காற்றியவர். அடுத்து கடற்கரும்புலி மேஜர் தர்மேந்திரா. அடுத்து தர்மேந்திராவுடன் துணைக்கு நின்ற ஒரு போராளி ஆகிய மூவருமே இதில் சாவடைந்துள்ளனர். ஆனால் அரச படைகள் நாகர்கோவில் தொடக்கம் பலாலி வரைக்கும் ஐம்பது மீற்றருக்கு ஒரு காவலரண் என அமைத்திருந்தனர் அதிலும் தற்காலத்தில் சந்திரிக்கா அம்மையாரின் போர்க்குணம் தலை தூக்கிய பேச்சுக்களுக்குப் பின்னர் இதனை மேலும் விரிவுபடுத்தினார்கள். இதனாலேயே அவர்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது. நாங்கள் அரச படைகளின் இழப்பைப் பற்றிக் கூறிக்கொள்ள விரும்பவில்லை ஏனெனில் போரில் அழிவதென்பது குறிப்பிடக் கூடியதொன்று. ஆனால் இந்த இயற்கை அனர்த்தத்தில் அழிவடைவதைப் பெரிதுபடுத்த நாங்கள் விரும்பவில்லை.
இது மனிதநேயமற்ற செயலாகும்.

**மீண்டும் இம்மக்களுக்கு மறுவாழ்வளிப்பது தொடர்பான திட்டங்கள் பற்றிக் கூறமுடியுமா ?**

வடக்குக் கிழக்கில் ஏற்பட்டுள்ள இவ்வழிவிலிருந்து பொருளாதார ரீதியாக உதவியளிக்கவும், தேவையான நிதி பற்றிய அண்ணளவான மதிப்பீட்டு ஒன்று தலைவரால் மதிப்பிடப்பட்டது. இதற்கு குறைந்தளவாக ஏறத்தாழ 2500 கோடி ரூபா தேவைப்படுகிறது. எனவே இந்தளவு பெரிய தொகையை வழங்கக் கூடிய நிலையில் சிறீலங்கா அரசாங்கம் இல்லை. இதற்குக் கண்டிப்பாக வெளிநாடுகளே உதவவேண்டும். ஆனால் இதனை வெளிநாடுகள் சிறீலங்கா அரசாங்கத்திற்கூடாக வழங்குமானால் அந்நிதி நிச்சயமாக தமிழர் தாயகத்திற்கு வந்தடையாது. அவர்கள் போரின் இழப்பை நிவர்த்தி செய்யப் பயன்படுத்துவார்களே தவிர மக்களின் குறைகளை நிவர்த்தி செய்ய முன் வரமாட்டார்கள். முல்லைத்தீவில் உள்ளவர்களுக்கு சாதாரணமாக மூன்றுபேருக்கு ஒரு படகு வீதம் வழங்கித் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவே சாதாரணமாக ஒன்பதுகோடி தேவைப்படுகிறது. ஆனால் இது கூட விடுதலைப் புலிகளால் சாத்தியப் படாததொன்று. ஆனால் முகாம்களில் உள்ளவர்களை ஏறத்தாழ மூன்று மாத காலம் பராமரிக்கும் சக்தியே எம்மிடமுண்டு. அதனையே இப்பொழுது செய்துவருகிறோம் இதற்குத் தற்போது புலம் பெயர்ந்த மக்கள் சில உதவிகளைச் செய்து வருகிறார்கள். இது எமது சுமையை ஓரளவு குறைப்பதாக உள்ளது. ஆனால் இது வரைக்கும் எந்தவொரு வெளிநாடுகளும் எந்தவொரு உதவிகளையும் செய்ய முன்வரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











### இவ்வனர்த்தத்தை அடுத்து நீங்கள் கூற விரும்புவது என்ன?

அதாவது மீண்டும் இந்த சுனாமி போன்ற அலைத் தாக்கத்தையோ அல்லது இது போன்ற வேறு அனர்த்தங்களோ தாக்காத வகையில் மக்கள் தமது வாழ்விடங்களை எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டும் என்பது போன்ற ஆலோசனைகளை அந்தத்துறை சார்ந்த வல்லுநர்கள் வந்து வழிகாட்டவேண்டும். அடுத்ததாக இங்கு வாழ்ந்த மக்கள் கடலிலிருந்து 25 யார் தொலைவிலேயே குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்தனர். இதற்குக்காரணம் அவர்களிடம் காணி இல்லாமையே. ஆனால் இங்கு தலைமுறை தலைமுறையாக இங்கில்லாத கடற்கரையிலிருந்து ஆகக் குறைந்தது 200 மீற்றருக்கு அப்பால் குடியிருப்பு இருக்குமானால் இவ்வாறு அனர்த்தத்தின் போதான தாக்கம் குறைவாக இருக்கும் எனவே மக்களின் நலன் கருதி உள் நாட்டில் உரியவர்கள் இல்லாத காணிகளை இம்மக்களுக்கு பகிர்ந்தளிக்க அவர்கள் முன்வரவேண்டும் அதிலும் குறிப்பாக தேவாலயம், இந்து ஆலயம் போன்றவற்றுக்கு பெரியளவில் நிலங்கள் உள்ளன அவற்றில் ஒரு பகுதியேனும் குடியிருப்புக்களை அமைப்பதற்கு வழங்க முன்வரவேண்டும் ஏனென்றால் இவ்வாறான தாக்கம் எப்பொழுது ஏற்படுமெனக் கூறமுடியாது.

எனவே பெருந்தன்மையோடு பயன்படுத்தாதுள்ள காணிகளின் ஒவ்வொரு பகுதிகளை இம்மக்களுக்கு வழங்கி உதவினால் மக்களைப் பாதுகாக்க முடியும் அடுத்து வேறு நாடுகளைப் போன்று கடற் கரைகளில் அலை தடுப்புச் சுவர்கள் அமைக்கப் படுமானால் இழப்பைத் தடுக்க முடியும் அதாவது பருத்தித்துறைக்கு அடுத்துள்ள பகுதிகளில் கடற்கரையில் இருந்து 75 மீற்றருக்கு அப்பால் முருகைக்கல் தடைகளும் கரையோரத்தில் வீதியின் சுவர் பகுதியும் அமைந்திருந்ததினால் வேகம் குறைக்கப்பட்டபின்பே குடியிருப்பைத் தாக்கியது. இவ்வாறு தடுப்புச் சுவர்களை இங்கும் அமைக்க வெளிநாடுகளில் உள்ள புலம் பெயர்ந்த செல்வந்தர்கள் உதவினால் மக்களின் பாதுகாப்பை உறுதிபடுத்த முடியும்.

### இவ்வனர்த்தத்தினால் ஏற்பட்ட சொத்திழப்புக்கள் பற்றிக் கூறமுடியுமா?


சொத்தழிவுபற்றி தற்போது அளவிடவே முடியாது. ஏனெனில் அனைத்துப் படகுகள் உட்பட, தொழில் உபகரணங்கள் முற்றாக அழிந்துள்ளதோடு வீடுகள் ஏனைய பொருட்கள், வியாபார நிலையங்கள், விவசாயப் பயிர்கள் என அளவிட முடியாத அளவு அழிவு ஏற்பட்டுள்ளன.

### மீள முடியாத உளத்தாக்கத்தில் உள்ள மக்களை மீண்டும் தொழிலில் ஈடுபடுத்துவது தொடர்பான திட்டங்கள் ஏதாவது உண்டா?

மக்களுடன் இணைந்து எமது தேவைக்காக மீன் பிடித்துக் கொண்டிருந்த எமது உபகரணங்களும் அழிந்து விட்டன. எனவே அவற்றை மீளப்பெற்று சிறியளவிலான மீன் பிடியில் நாம் ஈடுபடவுள்ளோம். எனவே எம்மைத் தொடர்ந்து மக்களும் மீண்டும் ஈடுபடுவார்கள். என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி: ஈழநாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண் உடைந்து போன கடலாள் - 2

1.
மைம்மல் பொழுதுகளில் கரைகளில்
மனிதர்கள் கடலோடு காதல் கொண்டிருந்தார்கள்
ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டு
கடல் நீரில் வீழும் மரங்களினதும்
படகுகளினதும் கரையோரக் கிராமங்களினதும்
தங்களதும் பிம்பங்களை பார்த்துக்கொண்டிருந்தார்கள்
பொங்கிப் பிரவகித்து வரும் கடலாள்
தணியாத மாய வசீகரத்தோடு
அவர்கள் கிளர்ந்தெழும் விதமாய்
தொன்ம இசையை மீட்டுகிறாள்
அழகிய நீலச்சருகை கரையில் நெழிந்தலைய
குனிந்தும், வளைந்தும்,
தாளமிட்டு மெட்டுக்கட்டினள்
மனிதர்கள் இசையும் பாடலும் சொரிந்தார்கள்.

தா.பாலகணேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2.

குழந்தைகள் கடற்கரைகளில்
மண் வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தார்கள்
செவ்வொளித்தாடிக் கிழவன்
அவர்கள் வீடுகளைக் கடந்து கொண்டு போகிறான்
காற்று சற்றுப் பலமாக வீசத் தொடங்கியது
குதிரைகள் கரையை நோக்கித்
தாவிவருவது போல கடல்.
தந்தையார் பயம் கொள்கிறார்
'பிள்ளைகளே வீட்டுக்குத் திரும்புவோம்' எனக் கத்துகிறார்.
அடம் பிடிக்கும் குழந்தைகளை
தொற தொறவென
மணலில் இழுத்துக்கொண்டு போகிறார்.
மண் வீடுகளில்
குழந்தைகளின் கண்கள்
முழித்துக்கொண்டிருக்க
பேரோசை எழுந்து கேட்கிறது
மண் வீடுகள் கரைந்து ஒழுகிக் கொண்டிருந்தன.
குழந்தைகள்
அன்று இரவு துக்கத்திலிருந்தார்கள்.

3.

கடல் சதா எல்லாவற்றையும்
அழித்து விளையாடுபவள்
அவள் மனிதர்களின் காலடிச் சுவடுகளை
ஞாபகத்தில் வைத்திருப்பதில்லை
கண்ணுக்கு எட்டாத் தொலைவுகளில் எல்லாம்
அவள் கலகம் புரிந்து கொண்டுதான் நிற்பாள்
பொருதுவதே அவள் போக்கு
அவளுடைய சங்கீதத்தைப்
பருகியபடி தீவின் கரைகளில்
மனிதர்கள் பிறந்தார்கள்.

4.

அவள் பண் உடைந்து போன ஒரு நாளில்
எனது கிராமங்களினதும்
மண்பட்டினங்களினதும்
கல்லறையாய் அவள் மாறினாள்.
தொலைக்காட்சியூடாகவும்
அவள் பெருகி வழியத் தொடங்கினாள்.
அதன் பிற்பாடு
பலர் எங்களது கிராமத்தின் கதவுகளைத்
தட்டத் தொடங்கியிருக்கிறார்கள்
நன்மைகளின் நிமித்தமாகவும்
அவர்களின் அகங்களுக்குள்ளாலும்
ஒரு சுனாமி சுழன்று கொண்டு போயிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







5.
அவள் பண் உடைந்து போனது எப்போது?
பத்திரிகை நிருபரைப் போல
கேள்வியெழுப்பினாள் என் நண்பியொருத்தி
முதலாம் உலக மகாயுத்தத்தின் போதாய் இருக்குமா?
தெரியாது.
இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போதாய் இருக்குமா?
தெரியாது.
இரண்டு யுத்தங்களின் போதாய் இருக்குமா?
தெரியாது.
எப்போது அவள் பண் உடைந்து போயிருப்பாள்
யப்பான் நாட்டின்
அழகிய இரு நகரங்களின் மீதும்
அணுக் குண்டு வீழ்ந்த போதிலா?
தெரியாது.
எப்போது அவள் உடைந்து நொருங்கிப் போயிருப்பாள்?
கடலடியின் கீழ்
நடாத்தப்பட்ட அணுக்குண்டுப் பரிசோதனைகளின் போதா?
தெரியாது.
கடலுக்குள் இருந்து உறிஞ்சப்படும்
எண்ணெய் வளம் குறைந்து கொண்டு போவதாலா?
தெரியாது.
சூழலின் சமநிலையை மனிதன் கெடுத்துக்
கேடு விளைத்ததன் பயனாலா?
இருக்கலாம்.
அல்லது வேறேனும் விளையாட்டாக இருக்கலாம்
தங்க முட்டையிடும் வாத்தை
பேராசையால் வெட்டிய கிழவனின்
கதையைச் சுருக்கமாய் அவளுக்குச் சொன்னேன்.
விந்தைக் கிழவனின் பிம்பங்களால்
நிறைந்தது அவள் விழியும்
அவள் பண் உடைந்து போயிருக்கிறாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



6

ஆயிரத்து எழுநூற்றி ஐம்பத்தைதந்துகளில்
லிஸ்போனின் மனிதர்களைக்
கடல் கொண்டு போனது போல.
இரண்டாயிரத்திநான்கில்
மார்கழி இருப்பத்தியாறில்
எமது கரையோரக் கிராமங்களையும்
தமிழ் நாட்டுக் கரையோரக் கிராமங்களையும்
சுமத்திராத் தீவுகளையும்
அந்தமான் தீவுகளையும்
இந்தோனேசியாவையும்
தாய்லாந்தையும்
மாலைதீவையும்
கடற்புவி நடுக்க ஆழிப்பேரலை
அடித்துச் சென்றது
விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்
எங்களுக்கு உதவ மறுத்து விட்டன.


7.

எங்களிடம் விஞ்ஞானிகள் இல்லை
உருவாகுபவர்களையும்
இனவாத அலை மூழ்கடித்துவிடுகிறது
கடலைப் பற்றி பயில்வதற்கான
பாடசாலையைக்கூட அது அழித்துச் சென்றிருக்கிறது
இனவாதப் பேரலைக்குப் பயந்து
பதுங்கு குழி எடுத்து வாழ்ந்தவர்களை,
போரில் எல்லாச் சொத்துச்
சுகங்களையும் இழந்தமனிதர்களை
கடலின் கீழால் பல மைல் வேகத்தில் வந்த
சுனாமிப்பேரலை
அடித்துக் கொண்டு போய்விட்டிருக்கிறது.

வாழ்வின் பண் உடைந்து போகும்படி
திடீரென்று
மரண அலையை எழுப்பினாள்.
பூமிக் கிரகம் துக்கத்தில் ஆழ்ந்தது.
ஒரு பாறையின் நுனியில் நின்று கொண்டு
வாழ்வைக் கொண்டாடுவதைப் போன்ற
நிலையை உணர்த்தியபடி
கடற்புவி நடுக்க ஆழி பேரலை
திரும்பிப் போனது.

8.

மரங்கள் தலை சாய்த்து வீசுகின்றன
பறவைகள் கடல் சூழ் வெளியை விட்டு
பறந்து போகின்றன.
மண்ணும் கஞ்சலும் மூடிய
ஊதா நிறப் பூக்கள் மலர்ந்திருக்கின்றன.
ஒற்றையடிப் பாதைகள்
கடலை நோக்கி நீள்கின்றன
அலைவாய் திறந்து தருமா?
அகம் திறந்தால்
அன்பின் பூக்கள் சொரியும்
மனிதர்களை
மைம்மல் பொழுதுகளில்
அவர்கள் துயரோடு கரையில் காத்திருக்கிறார்கள்.



ஒளிப்படங்கள்: தி.தவபாலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“மக்களுக்கான உடனடி நிவாரணப் பணிகளைப் பூர்த்தியடைய செய்வதற்காக உழைத்து வருகிறோம். நீண்ட வாழ்விற்கான ஆதாரங்களை ஈட்டுவதற்கான பணியில் தொடர்ச்சியாக உழைக்க வேண்டியவர்களாகவே உள்ளோம்.”



பிரான்சுக்கான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பொறுப்பாளர் சுந்தரவேல் அவர்களுடனான ஒரு சந்திப்பு

# புனர்வாழ்வுக்கான இடைவிடாத பயணம்

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தமிழ் மக்களினுடைய துன்பதுயரங்களையெல்லாம் தனது தோளில் சுமந்து நடந்தது. இராணுவ அடக்குமுறைக்குள்ளாகி இடம்பெயர்ந்த மக்களிடையே இயல்பு வாழ்வைத் தோற்றிவிப்பதில் அது மீண்டும் மீண்டும் வலிய கால்கள் கொண்டு நடந்தது. நம்பிக்கைக் கரமாக உதவுவதில் முன்னின்று வருகிறது.

பல்வேறு உதவித் திட்டங்களை முன்வைத்து பாதிக்கப்பட்ட தமிழீழ மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதில் காட்டி வரும் அக்கறை உன்னதமானது.

கல்வி மேம்பாட்டுக்காகவும், அவர்களின் தொழில் முயற்சிகளுக்காகவும் அயராது உழைத்து வருகிறது. நீண்டகாலத் திட்டங்களையும், குறுகிய காலத்திட்டங்களையும் தீட்டி அவற்றை மனோவலிமைமிக்க செயற்பாட்டாளர்களை இணைத்து வென்று வருகிறது.

வழமை போலவே பணிகள் நடைமுறைபடுத்தி செயல் உருப்பெறுவதற்கான ஆயத்த வேலைகளை புனர்வாழ்வுக்கழகம் முன்னெடுத்திருந்தது. தாயகத்திலிருந்து. இவ்வேலைத் திட்டத்தை நேரடியாக நின்று நெறிப்படுத்த தாயகத்திலிருந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் கே.பி ரெஜி அவர்கள் வருகை தந்திருந்து அவர்களுடன் நின்று செயற்பட்டார்.

பிரான்சுக்கான புனர்வாழ்வுக் கழகத்தின் பொறுப்பாளராக இயங்கும் சுந்தரவேல் அவர்களை சந்தித்தோம். அச்சந்திப்பின் போது....

மார்கழி இருபத்தியாறாம் 'திகதியன்று நம்பிக்கை ஒளிநிதியச் சிறப்புத்திட்டம்' தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மிகவும் சிறந்த வழிமுறைகளில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. முதலில் இவ்வேலைத்திட்டத்திற்காக பிரான்ஸ் அடங்கிலுமாக ஐநூறுபேர் அளவிலானவரே பணிகளில் ஈடுபட இருந்தார்கள். மனதிலே பலமான எங்கள் மக்கள் மீதான உரிமையும் எதிர்பார்ப்புகளும் கலந்த உன்னத உணர்வுகளோடு அன்றைய காலைப்பொழுது மிகவும் உற்சாகமானதாகவும் நம்பிக்கையூட்டுவதாகவும் மலர்ந்தது.

ஆனால் தாயகத்திலிருந்து துரதிட்டவசமான அந்தச்செய்தி - ஐரோப்பிய நேரப்படி 7.50 மணிக்கு - அன்று காலை கடல் பொங்கியெழுந்து எங்கள் தாயகம் உட்பட தென்கிழக்கு ஆசியா அடங்கிலுமாக பேரழிவுகளை ஏற்படுத்தியிருப்பதாக அறிவித்தது. பல்லாயிரக்கணக்கில் உயிரிழப்பு - பல கடலோரக்கிராமங்கள் முற்றாக அழிவு - இப்படிப்பல - ஒருகணம் ஆடிப்போய்விட்டோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடனடியாக அவ்வேளையில் நம்பிக்கை ஒளி நிதியத் திட்டத்தை - உயிர் பாதுகாப்பு நிதியமாக அறிவித்து புதிய வேலைத் திட்டங்களையும் இணைத்து தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முன்னெப்போதும் எதிர்பார்த்திராத ஒருபெரும் இழப்பின் உடனடி நிவாரணத்துக்காக துரிதமான நடவடிக்கைகளில் இறங்கியது.

சுனாமி (Tsunami) பேரனர்த்த நிகழ்வின்பின் ஒருசில மணித்துளிகளில் மேலும் ஆயிரத்துக்குமதிகமான தொண்டர்கள் - இளைஞர்கள், யுவதிகள், வயோதிபர்கள், சிறுவர்கள், சிறுமிகள், மாணவமாணவிகள் புதிதாக இணைந்துகொண்டு கடும்குளிரிலும் அரும்பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இப்படியாக பிரஞ்சுக்கான தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் சுந்தரவேல் தெரிவித்தார்.

பிரெஞ்சு மக்களிடமும் நேரடியாகச் சென்று பாதிக்கப்பட்ட தாயக உறவுகளுக்காக நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் காசோலையாகவும், பணமாகவும் வேறும்பல வழிகளிலும் பெருமளவில் உதவி வருவதாகவும் கூறினார்.

பிரஞ்சு பெண்மணி ஒருவரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து கொண்டு முழுநேரமாக செயலாற்ற முன்வந்திருப்பதாகவும் அவ்வாறு பலபேர் வந்து கேட்டவண்ணம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



ஐ.நா செயலாளர் நாயகம் கோபி அனான், தமிழர் புனர்வாழ்வுக் கழகப்பொறுப்பாளர் கே.பி.ரெஜி ஆகியோரின் சந்தித்தபோது.

பிரெஞ்சு தபால் அதிகாரி ஒருவர் அத்தியாவசியப் பொருட்களை இலவசமாகத் தாயகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு உதவ முன்வந்துள்ளாரென்றும் அவர்களோடு பணிபுரியும் வேற்றுநாட்டவர்களிடம் கூட நிதி சேகரித்து 900 ஈரோ அளவிலான தொகையை அன்பளிப்பு செய்துள்ளாரென்றும் கூறினார்.

பிரெஞ்சு - தபால் தந்தித் தொழிலகம் அங்கு பணி புரியும் தொழிலாளர்களிடம் அவசியமான அவசரநிதி வழங்கி உதவுமாறு கேட்டுக்கொண்டுள்ளது என்றார்.

இங்கு வாழும் ஈழத் தமிழர்களின் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பின் அவ்வாறானவர்கள் தாயகம் சென்று திரும்புவதற்கான விசாவை வழங்குமாறு பொலிஸ் திணைக்கழகத்திற்கு பிரெஞ்சு அதிபர் கட்டளையிட்டுள்ளார் என்கின்ற செய்தியும் கிடைத்தது.




பிரான்சின் சுகாதார அமைச்சர் சிறீலங்காவுக்குப் பயணப்பட்டுக்கொண்டிருக்கிறார்.

அவரின் பயணத்தை முன்னிட்டு பேரழிவுக்குள்ளான அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டு உதவுமாறு கேட்டுக்கொள்ளும் கடிதம் ஒன்றினைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அனுப்பி வைத்துள்ளது என்றும் தெரிவித்தார்.

ஊடகங்களின் பங்களிப்பு எவ்வாறு இருக்கிறதென்ற வினாவுக்குப் பதிலளிக்கையில் 'ரீரீஎன்' (TTN) தமிழ் தொலைகாட்சி நிலையம், 'ஐபிசி' போன்ற ஊடகங்களின் பங்களிப்பு உங்களுக்குத் தெரிந்ததே என்றார்.

சந்திப்பு: எரிமலை சஞ்சிகைக் குழுவினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரெஞ்சு ஊடகங்களைப் பொறுத்த வரையில் முதலில் பாரிசின் பிரதான பத்திரிகையான 'பரீசியன்' (Parisien) சுனாமி அலையின் அனர்த்தத்தை வெளிக்கொணர்ந்ததாகவும், அப்பத்திரிகை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முகவரியையும், தொலைபேசி இலக்கத்தையும் பிரான்சிய மக்களிடையே பரவலாக எடுத்துச் சென்றதாகவும் சொன்னார். அதன்பிறகே, தமக்குத் தொலைபேசி அழைப்புக்கள் தொடர்ந்து வந்த வண்ணம் இருப்பதாகவும் பிரெஞ்சு மக்களின் மானிடவுணர்வுபூர்வமான பங்களிப்புகள் கிடைத்து வருவதாகவும் தெரிவித்தார்.

"இவ்வாறான ஒரு அமைப்பு செயற்படுவது குறித்து நாம் அறிந்திருக்கவில்லை. உங்கள் ஊடாக இந்த நிவாரண உதவியை வழங்குவதில் ஒரு மனத்திருப்தி ஏற்படுகிறது. நீங்கள் எங்களோடு வாழ்ந்து வருகிறீர்கள். அதே நேரத்தில் அங்கு வாழும் மக்களுடன் நேரடியான தொடர்பையும் வைத்திருக்கிறீர்கள். எனவே எங்கள் பங்களிப்பை உங்களிடம் வழங்குவதில் எமக்கு மனத்திருப்தி ஏற்படுகிறது" - என பிரெஞ்சு நாட்டவரொருவர் மிகவும் நாகரீகமாகத் தெரிவித்தார். அதன் உள்ளர்த்தத்தைப் புரிந்துகொண்டபோது நெஞ்சுகனத்தது." என்று கூறும்போது எங்களுக்கும் அப்படித்தானிருந்தது.

புதிய உடுபுடவைகளும், மருந்துப் பொருட்களும் தாராளமாக வந்து சேருகின்றன. ஆயினும் தற்பொழுது மிக அவசியமான பொருட்களாக நீர் இறைக்கும் இயந்திரங்கள், கூடாரங்கள், மின்சாரப்பிறப்பாக்கிகள், சிறுவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள், சுகாதாரத்தைப் பேணுவதற்கான பொருட்களின் தேவைகள் அதிகரித்துள்ளன என்றும், இவை மிகவும் பற்றாக்குறையாக உள்ளதாகவும் இவற்றை முன்வழங்குமாறு புனர்வாழ்வுக் கழகம் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளும் ஒரு பொது அறிவித்தலை விடுத்திருக்கிறதாகவும் அவர் சொன்னார்.



Course contre la mort en Asie

L'aide humanitaire commence à peine à parvenir dans les zones les plus sinis par les tsunamis du 26 décembre. On redoute désormais l'apparition d'épid de typhus et de choléra, alors que le dernier bilan s'élève à 130 000 morts.

20 minutes

2 028 267 lecteurs

paris

grand paris

## பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவத் தயார் நிலையில்

*பிரான்சில் இருந்து வெளிவரும்*

## '20 நிமிடம்'

03.01.2005

*எனும் பத்திரிகை இலவசமாக விநியோகமாகிறது இலட்சக்கணக்கான பத்திரிகைப் பிரதிகள் வெளியிடப்படுகின்றன போக்குவரத்து மையங்களில் எல்லாம் இப்பத்திரிகைக்கென ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து இதனை வாசகர்கள் எடுத்துச் சென்றுகொண்டிருப்பார்கள். காலையில் பயணப்படும் எல்லோரது கைகளிலும் இப்பத்திரிகையைக் இருப்பதைக் காணலாம். குறுகிய காலத்தில் உருவாக்கப்பட்ட இப்பத்திரிகையானது பலரது மதிப்பைப் பெற்று வருகிறது. இப்பத்திரிகை பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதில் சிறந்த பணியாற்றி வருகிறது.*

*அப்பத்திரிகை வெளியிட்ட செய்தியிலிருந்து.....*

**சு**னாமி ஆழி அலை தென்கிழக்காசியாவைத் தாக்கி பேரழிவை ஏற்படுத்தியது. ஆழி அலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி புரிய பிரான்ஸ் தயார் நிலையில் இருக்கின்றது. மாநகர சபைகளும், சமூக சேவை நிறுவனங்களும், தொழில் அதிபர்களும், மக்களும் சில நாட்களாக உதவும் முயற்சியில் இறங்கி இருக்கிறார்கள்.

29.12.2004 வியாழக்கிழமை அன்று 200000 ஈரோவை பிரதேச ஆலாசகர்சபை வழங்கத் தீர்மானித்திருக்கிறது.

தை மூன்றாம் திகதி அவர்கள் 3 மில்லியன் ஈரோவை வழங்குவதற்கான வேலையில் ஈடுப்பட்டு வருகிறார்கள்.



பிரான்சில் இயங்கி வரும் வர்த்தக நிறுவனங்களில் ஒன்றான Franprix தனது சீருடையை வழங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிதி சேகரிப்பு நடவடிக்கையில் இறங்க உதவி வருகிறது.

லாச்சப்பலில் அமைந்திருக்கும் முத்து மாரி அம்மன் கோவிலில் பெண்களும் ஆண்களுமாக இரவு பத்து மணிவரை மக்களிடமிருந்து பங்களிப்புக்களைப் பெறுவதற்கானப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். பெருமளவிலான மக்கள் கைகளில் நிவாரணப் பொதிகளுடன் வந்த வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Jean Paul Huchon (le président de région) வரும் நாட்களில் ஒரு விசேட கூட்டத்தை ஒழுங்கு செய்ய இருக்கிறார்.

நீர் முகாமைத்துவ நிறுவனத்தினர் 150000 ஈரோவை வழங்கியுள்ளனர். இந்தோனேசியாவிற்கு நீர் சுத்திகரிப்புச் சேவையை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பாரிஸ் மாநகர சபையினர் நிதிகளைப் பெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்து வருகின்றனர்.

2ம், 5ம், 6ம், 9ம், 10ம், 11ம், 12ம், 15ம், 16ம், 17ம், 19ம் நகரப் பிரிவுகளிலும் இவ் ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

பாரிஸ் மேயர் Bertrand Delanoë பெரிய அளவில் நிதி உதவி வழங்க முன்வந்துள்ளார். எந்த அளவிலான உதவி என்று அவர் இன்னும் கூறவில்லை.

தலைநகரத்தில் தமிழ் சமூகம் இடிந்து போய் இருக்கிறது. ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவத் தயார் நிலையில் இருக்கின்றனர்.

18ம் நகரப் பிரிவில் இயங்கும் வர்த்தக நிறுவனங்கள் கறுப்புக் கொடி கட்டி தமது துக்கத்தை வெளிப்படுத்தி இருக்கின்றன.

அதே நகரத்தில் ஈழத் தமிழர்களுக்காக இயங்கும் புனர்வாழ்வுக் கழகம் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது.

உணவு விடுதியின் உரிமையாளர் ஒருவர் 10000 ஈரோக்கான காசோலையை வழங்கிச்சென்றார்.

மொழிபெயர்ப்பு உதவி: மீரா

இருக்கிறார்கள்.

என்றும் இல்லாதவாறு ஒருபுதுவேகத்தோடு இங்கு வாழும் ஈழத்தமிழ் பல்கலைக்கழக மாணவர்கள் உதவி வருகிறார்கள். பிரெஞ்சு நாட்டு மக்களுடனான தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் நேரடியாக நின்று பணி புரிந்து வருகிறார்கள்.

அவர்களில் ஒரு பிரெஞ்சு பல்கலைக்கழக மாணவன் தன்னுடைய நாட்டில் சுனாமி பேரழிவால் அழிந்த மக்களுக்கு தான் உதவப் போகிறேன் எனக் கூறுகிறான். அவர்களில் இன்னொருவர் நாட்டிற்குப்போக இயலுமாக இருந்தால் தன்னையும் அனுப்பி வையுங்கள் என கேட்ட வண்ணம் இருக்கிறார். அதே போன்று இன்னொரு இளைஞன் தானும் நிறைய ஏதாவது செய்யவேண்டும். எங்களுடைய மக்களின் மண்ணின் மீள்கட்டுமானப் பணிக்கு இந்த நாட்டின் உதவிகளைப்



பெறவேண்டும் எனத்துடிப்பாக இயங்கி வருகிறார். இப்படிப்பல உதாரணங்கள்.

இன்று வரையும் பிரான்சில் உள்ள பதினைந்துக்கும் மேற்பட்ட ஊடகங்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகத்தை நோக்கியும், தொலைக்காட்சி இணையத்தையும் நோக்கியும் சென்ற வண்ணம் உள்ளனர். இதே வேளையில் கலைஞர்கள் செய்த பணியும் மிகப் பெரியது. துன்பப் படும் மக்களின் மனதை ஆற்றும் பாடல்களும் பாடப்பட்டிருக்கின்றன என்றும் கூறினார்.

அத்தனை வேலைப்பழுக்களுக்கும் மத்தியிலும் மேலும்சில கேள்விகள்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அடுத்த முன்னெடுப்புத் திட்டம் என்ன? பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வு ஆதாரங்களை எவ்வாறு ஏற்படுத்தப் போகிறீர்கள்?

“மக்களுக்கான உடனடி நிவாரணப் பணிகளைப் பூர்த்தியடைய செய்வதற்காக உழைத்து வருகிறோம். நீண்ட வாழ்விற்கான ஆதாரங்களை ஈட்டுவதற்கான பணியில் தொடர்ச்சியாக உழைக்க வேண்டியவர்களாகவே உள்ளோம்” என தன்னம்பிக்கையோடும் உறுதியோடும் பதில் அளித்தார்.

# புதிய அழைப்பு



பிரெஞ்சுப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் சங்கத்தின் செயலாளர் மரியதாஸ் மோகன்ராஜ் அவர்களின் கைத்தொலைபேசி ஊடாக பிரெஞ்சுப் பிரதமர் அழைப்பு விடுத்தார்.

திங்கட்கிழமை காலை 27ஆம் திகதி ஒன்பது மணி அளவில் பிரெஞ்சுப் பிரதமர் அவர்கள் - ‘சிறிலங்காவில் நிகழ்ந்த சுனாமி அனர்த்தம் பற்றி நாங்கள் அறிந்தோம். நிறையவே தமிழ் மக்கள் பிரான்சில் வசித்து வருகிறார்கள். நாங்கள் அம்மக்களுக்கு பின்பலமாக நிற்கின்றோம். அதன் நிமித்தமாகவே வெளிநாட்டமைச்சர் ஊடாக மக்களை பாதுகாக்கும் முகமாக நூறு பேர் கொண்ட முதல் உதவிப் படையை அனுப்பி வைத்துள்ளோம்” என கூறினார். மேலும் நாங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு தயாராக இருக்கின்றோம் என அவர் அவ்வழைப்பின் ஊடாக தெரிவித்திருக்கிறார்.

அப்பொழுது தமிழ் பல்கலைக்கழக மாணவர் சங்கச் செயலாளர் சிறீலங்கா அரசாங்கம் நிவாரணப் பொருட்கள் தமிழர் பகுதிக்கு சென்றடைவதை தடுத்து வருகிறது எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

அதற்குப் பதிலளித்த பிரதமர் - வெளி நாட்டு அமைச்சருடன் தொடர்பு கொண்டு நிலமையை விளக்குமாறு சங்கச் செயலாளருக்கு கூறியதோடு அவரது தொலைபேசி இலக்கத்தையும் கொடுத்து நேரில் தொடர்பு கொண்டு பேசுமாறும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளி உறவு அமைச்சர் Michel Barnier அவர்களுடன் தொடர்பு கொண்டு நிலமைகளை தெரியப்படுத்தி இருக்கிறார் அதற்கு அவர் பதில் அளிக்கையில் 'என்னுடைய நோக்கமும் என்னுடைய அரசினுடைய நோக்கமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதல் உதவிகள் விரைவில் கிடைக்கவேண்டும் என்பதே ஆகும் என அவர் தெரிவித்திருக்கிறார். மேலும் நான் சிறீலங்காவிற்கு பயணப்பட்டுக்கொண்டிருக்கின்றேன். என்னுடைய அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு நிலமைகளை விளக்குங்கள். எனது வருகையின் பின் நேரடியாக சந்திப்புக்களை மேற்கொள்ளுமாறும் அவர் பதில் அளித்திருந்தார்.

அதன் பிற்பாடு பிரெஞ்சுப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் சங்கத்தினர் வெளிநாட்டு அமைச்சு அலுவலகத்திற்குச் சென்றிருந்தனர். அங்கு சுனாமி ஆழி அலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிப் பொருட்கள் சென்றடையாது தடுத்து வரும் சிறீலங்கா அரசாங்கத்தின் இனவாதப் போக்கை புரியவைத்தனர்.

செந்தெனிஸ் உதவி மேயரையும் உதவிக்காக அங்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். பிரெஞ்சு மாணவர் சங்கங்களைச் சேர்ந்த மாணவ பிரதிநிதிகளையும் அழைத்துச் சென்று நிலமைகளை புரிய வைத்திருக்கிறார்கள். இந்நிலமைகளை விளக்கும் வகையில் பத்திரிகைச் செய்திகளை ஆதாரம் காட்டி தயாரிக்கப்பட்ட நிரூபணத்தில் 2500க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கையெழுத்து இட்டிருந்தனர். மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் கிடைக்கவில்லை, அரசு தடுத்து நிறுத்துகிறது, போன்ற விபரங்கள் விரிவாக அந்நிரூபணத்தில் விளக்கப்பட்டிருந்தது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மூலமாக நாம் நிறைய நிவாரணப் பொருட்களை சேகரித்துள்ளோம். அதைப் பாதிக்கப்பட்ட வடகிழக்குப் பகுதிகளுக்கு கொண்டு செல்ல உதவுமாறு கேட்கப்பட்டபோது அவர்கள் செஞ்சிலுவை சங்கத்தினூடாக உதவிகளை கோருமாறு பணித்திருக்கிறார்கள்.

இருபது வருடங்களாக போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பணி புரிந்து வருவதாகவும் அவர்களின் செயற்பாடுகளுக்கு சிறீலங்கா அரசு தடையாக நிற்பது குறித்தும் தெரியப்படுத்திய பொழுது அவர்கள் உதவி வழங்குவதற்கான செயற்பாடுகளை தாம் வேறு வழிகளிலும் முயன்று தருவதாக உறுதி அளித்திருக்கிறார்கள்.

---

பிரான்சிலிருந்து வெளிவரும் 'மெத்திரோ' எனும் பத்திரிகையிலிருந்து......



# L'efficacité des "Tigres"

es rebelles tamouls, au
ri Lanka, ont montré
eur capacité à gérer
après-tsunami dans
ne région qu'ils souhai-
ent indépendante.

uelques minutes après le
z-de-marée, les Tigres pour
a libération de l'Eelam ta-
moul (LTTE) ont commencé à
vacuer les survivants et à ra-
masser les cadavres.
Dès la fin de la journée, ils
vaient mis sur pied des
amps de réfugiés. Outre
installation de barrages
outiers pour empêcher les
mouvements de panique et
révenir les pillages, et la
équisition de véhicules ci-
ils pour conduire les blessés
l'hôpital, beaucoup de re-
elles ont donné leur sang.

## a machine militaire

es équipes munies de camé-
as numériques et d'ordina-
eurs se sont rendues dans
s zones sinistrées pour pho-
ographier les visages des
morts afin de permettre ulté-

"Avant le 26 dé-
cembre, nous étions pl
proches de la guerre q
aucun autre moment d
puis le cessez-le-feu. D
sormais nous en somm
beaucoup plus loin."

PAHKAISOTHY SARAVANAMU
DIRECTEUR DU CENTRE P
LES ALTERNAT
POLITIQ

rieurement leur identi
tion. Puis les corps on
brûlés ou enterrés. "Ils
mis en branle une mac
militaire très efficace",
ligne Reuben Thurair
médecin britannique h
vole. Et d'ajouter que
Tigres ont veillé scrupu
sement à ce que les sec
soient distribués de man
équitable entre les réfu
Dans le sud du pays, le
vernement sri-lankais p
lui, à faire face aux co
quences de la catastro

## Espoir de rapprocheme

Le LTTE combat depuis
pour obtenir l'indépend
du nord et de l'est du p
où la minorité tamoul
concentrée, alors que le
de l'île est peuplé major
rement de Cinghalais.
Tigres sont notamment
nus pour leurs sangl
attentats suicide. Un ce
le-feu précaire est en p
depuis février 2002. Le ra
marée pourrait favorise
rapprochement entre
deux camps, des échang
propos conciliants et
engagements à travaille
semble ayant marqué un
dain changement de
dans le pays.

ES "TIGRES" (hommes et
mmes) prennent en charge
es rescapés le 28 décembre

புதன் 5, 2005

# புலிகளின் பலம்

இலங்கையில் தனிமையாக நின்று போராடிவரும் விடுதலைப்புலிகள், சுனாமி ஆழிப்பேரலை நிகழ்த்திய அனர்த்தத்தின் பின், மக்களைப் பாதுகாக்கும், பராமரிக்கும் வல்லமையை வெளிப்படுத்தினார்கள். சுயாதீனத்தை விரும்பும் அவர்களின் தேசத்தில் எடுத்துக் காட்டினார்கள்.

சுனாமி அடித்து ஓய்ந்த சில கணங்களின் பின்னால் தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கும் மக்களை காப்பாற்றினார்கள். கடலில் மிதந்த பிணங்களை மீட்டெடுக்கும் பணியிலும் மிகச் சிறப்பாக இயங்கினார்கள்.

அவர்கள் அகதி முகாம்களை அமைத்து பாதிக்கப்பட்ட மக்களை அங்கு தங்க வைத்தனர். அதற்கப்பால் பாதுகாப்பு அரண்களை அமைத்து திகில் அசைவுகளைத் தடுப்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்தார்கள், அதாவது கொள்ளைகள் நடைபெறாமல் தடுப்பதற்கான செயல்களில் இறங்கி இருந்தார்கள். வாகனங்களை சட்டப்படி கேட்டு, காயப்பட்டவர்களை மருத்துவ நிலையங்களுக்கு எடுத்துச் சென்றார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரத்தம் வழங்குவதிலும் அவர்கள் முன்நின்றார்கள்.

## சிறந்த இராணுவக் கட்டமைப்பைக் கொண்டவர்களாக இருந்தார்கள்

ஒளி, ஒலிப்பதிவுக்கருவிகளுடனும், கணனிகளுடனும் விடுதலைப் போராளிக் குழுக்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இறந்தவர்களின் முகங்களை புகைப்படம் எடுத்தார்கள். அடையாளம் காணுவதற்காக அவற்றை ஆவணப்படுத்தினார்கள். அதன் பின்னர் இறந்தவர்களின் உடல்கள் எரிக்கும், புதைக்கும் பணிகளில் மும்மரமாக ஈடுபட்டனர். 'அவர்களின் இராணுவம் மிக நன்றாக வேலை செய்யும் திறன்மிக்கதாக இருந்தது' உதவி செய்வதற்காக அங்கு வருகை தந்திருந்த பிரித்தானியாவைச் சேர்ந்த மருத்துவர் ரூபன் துரைராஜா அவர்கள் கூறியிருந்தார். புலிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான முறையில் நிவாரண உதவிகள் கிடைக்க வேண்டும் என்பதில் அக்கறையாக இருந்தார்கள். பேரழிவின் முன்னால் சிறீலங்கா அரசோ செயலற்றதாக இருந்தது.

## சமாதான நம்பிக்கை

1983ல் இருந்து நாட்டின் வடக்கிலும், கிழக்கிலுமாக விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் சுதந்திரத்துக்காகப் போராடிவருகிறது. அங்கே சிறு பான்மையினராக தமிழர்கள் இருக்கிறார்கள் மற்றும் தீவில் சிங்களவர்கள் பெரும்பான்மையினராக இருக்கின்றனர். புலிகள் இரத்தம் சிந்திய தற்கொடையின் மூலமே நன்கு அறியப்பட்டவர்களாக இருக்கிறார்கள். 2002 ஆம் ஆண்டிலிருந்து போர் நிறுத்தச் செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. சுனாமி ஆழிப்பேரலை, இரண்டு முகாங்களுக்கிடையிலும் ஒரு சமாதானத்தை ஏற்படுத்தும் வாய்ப்புக்கு ஆதரவளிக்கலாம். ஒன்றாக வேலை செய்வதற்கான உடன்பாடுகளையும் எட்டலாம், சமாதானப் பேச்சுக்களும் உருவாகி இலங்கையில் அவர்களிடையே ஒரு மாற்றம் நிகழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02.தை 2005
ஞாயிற்றுக் கிழமை

## Le Journal du dimanche

### எனும் பத்திரிகையில் வெளிவந்த செய்திக் கட்டுரையிலிருந்து....

இலங்கையில் மீண்டும் வழமைக்குத் திரும்புகின்றன. மரணத்தின் சாயல் கரையோரங்களில் படர்ந்திருந்தாலும் உயிரோடு இருப்பவர்கள் மீண்டும் வாழ்க்கையைக் கட்டி எழுப்பத் தொடங்கிவிட்டார்கள்.

அங்கே திரும்புவதா? கடற்கரையோரத்தில் மீளவும் வீட்டைக் கட்டுவதா?

என்னுடைய இரண்டு வயதான மருமகளைத் தூக்கிக்கொண்டு போன கடலுக்கு முன்னால் கட்டுவதா?

ஓ! இல்லை! என்னால் முடியாது என மீனவர்களின் தங்கையும், மனைவியுமான 42 வயதுடைய இந்திரன் உமயத்தை சொல்கிறார்.

இவர் மட்டக்களப்பிலுள்ள Saint Michel பாடசாலையில் அடைக்கலம் புகுந்துள்ளார்.

அவளைப்போல் அப்பாடசாலையில் 2500 க்கும் மேற்பட்டவர்கள் அங்கு நெருக்கமாக இருக்கிறார்கள்.

தாய்லாந்தில் சுற்றுலாப் பயணிகளைத் தாங்கிய அலைகள் ஏழ்மையில் கரையோரங்களில் வாழும் மக்களையும் தாக்கியிருக்கிறது.

29000 க்கும் மேற்பட்டவர்கள் கடல் அனர்த்தத்தால் இங்கு இறந்துவிட்டார்கள்.

15000க்கும் அதிகமான மக்கள் காணாமற்போற் விட்டார்கள்.

மட்டக்களப்புப் பகுதிகளில் 2254 பேர் மரணமடைந்துள்ளார்கள். 750-1500 க்கும் இடையிலான தொகையிலானோர் காணாமற் போய்விட்டார்கள். குடும்பங்கள் இடம்பெயர்ந்து இருக்கின்றார்கள்.
44850 பேர் ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் அடைக்கலம் புகுந்து இருக்கின்றார்கள்.

சனிக்கிழமை, 1ம் திகதியில் (01.01.2005) இருந்து இரண்டு நாட்களாக தொடர்ச்சியாக பெய்த மழை சற்று ஓய்ந்திருக்கிறது. பாடசாலைகள் எல்லாம் வெள்ளத்தால் நிரம்பி வழிகிறது.

அந்தப் பெண்ணுக்கருகில் இருக்கும் அவளுடைய தம்பி இந்த அலையைப்பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறார்.


Le Journal du Dimanche
N° 3027 - DIMANCHE 2 JANVIER 2005
LE JDD + VERSION FEMINA - 1,50 EURO

La vie reprend au Sri Lanka

Même si l'odeur de mort plane sur la côte est, les survivants pensent à reconstruire

Dans le district de Batticaloa, particulièrement touché par le tsunami, les temples servent de refuge aux familles qui n'ont pl

Les Ind

L'Inde a rejeté t

2 ஆம் திகதி ஞாயிறு (02.01.2005) சுனாமியை நினைவு கூறும் நாளாக இருந்தது. அவன் வாழும் கரையோரக் கிராமமான திருச்செந்தூரில் அன்று அவனில்லை. அவனுடைய மனைவி மூன்று குழந்தைகளுடன் தனியாக இருந்தாள். இரண்டு வயதுடைய மருமகளைக் கண்முன்னே கடல் கொண்டுபோனதை பார்த்தாள். இன்று வரை கடலைப்பார்த்து அவன் பயப்படவில்லை அவனுடையக் குடும்பத்தில் அவனுடைய அப்பாவிலிருந்து அவன் வரை மீனவர்கள். மிக ஏழ்மையானவர்கள். அவனுக்கென ஒரு சொந்த மீன் பிடிப்படகு வாங்கமுடியாத நிலையில் இருக்கிறான்.

அவனுடைய மீன்பிடித்தொழிலில் இருந்து வரும் இலாபத்தின் மூலமே படகுக்கான வாடகையைச் செலுத்தி வந்தான்.

மீன்படுகாலங்களில் கடலில் வலை வீசுவான். சென்ற கிழமை கட்டட வேலைக்காகச் சென்றிருந்தான்.
இந்தக் காலங்களில் கடல் கடுமையாகக் கொந்தளித்துக்கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதனால் மீன் படுவது குறைவு.

நாவலடிக் கிராமத்தில் ஒன்றும் செய்ய முடியாது. அங்கு வாழும் 19 வயதுடைய இளம் பெண் அவளுடைய தந்தையாரை இழந்துவிட்டாள். அவளுடைய இரு தங்கைளையும் இழந்துவிட்டாள்.

நாவலடி கடற்கரைக் கிராமத்தில் 500மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வந்தார்கள். மீண்டும் வடக்கை நோக்கி நடந்தால் நாவலடி சிறுத்துக்கொண்டுபோகும். அப்போது கரையோரப் பகுதிகள் யாவும் அழிந்து கிடக்கும் காட்சியைக் காணலாம்.

நூற்றுக்கும் அதிகமான மரங்கள் அழிந்து கிடக்கின்றன. பத்திரிகைகள், காகிதங்கள் மணலில் புதைந்துக் கிடக்கின்றன. மின்சாரக் கம்பங்கள், தொலைபேசிக் கம்பங்கள் சுனாமியின் வலிமையால் வீழ்த்தப்பட்டுக்கிடக்கின்றன.

நாவலடிக்கு அந்த இளம் பெண் திரும்பப்போவதில்லை. எனக்கு கடலுக்கருகில் வாழப் பிடிக்கவில்லை. எங்களுடைய வீட்டை மீளத் திருப்பிக் கட்டித் தந்தாலும் கூட என்னால் அங்கு சென்று வாழ முடியாது.

நோய்கள் பற்றி ஒரு சமூக சேவையாளர் ஒலிபெருக்கி மூலம் அகதிகளாக இருக்கும் மக்களிடம் தொற்று நோய்களால் வர இருக்கும் பேராபத்துக் குறித்தும். அதைத் தடுக்கும் வழிமுறைகள் பற்றியும் அறிவிக்கிறார். மேலும், அவர்களிடம் சுற்றுப்புறச் சூழலை துப்பரவாக வைத்திருக்குமாறும் வேண்டிக்கொள்கிறார்.

ஆனைப்பந்தியிலுள்ள இந்து ஆலயத்துக்கு முன்னால், ஒரு மருத்துவரைச் சந்திப்பதற்காக நீண்ட வரிசையில் மக்கள் காத்து நின்றார்கள்.

UNICEF என்ற நிறுவனத்தைச் சேர்ந்த பெண்கள் உணவுத் தயாரிப்பில் ஈடுப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் தேங்காய் துருவிக்கொண்டிருந்தார்கள். காய் கறிகளையும் வெட்டிக் கொண்டிருந்தார்கள்.

எனக்கு ஒரு இடம் தேவை அங்கே நானே சமையல் செய்து கொண்டு வாழ்வதற்கு, ஆனால் அங்கே வேண்டாம் எனத் திரும்பத் திரும்பச் அவள் சொல்கிறாள்.

அங்கே மரணத்தின் வாசமே வீசுகிறது. அவள் தன்னுடைய தந்தையின் சடலத்தையும் இரண்டு தங்கைகளின் சடலத்தையும் கண்டுகொண்டாள். அவளும் அவளுடைய தம்பியுமாக சடலங்களை மண்ணில் புதைத்தனர். பொலிஸ் அதிகாரிகளும், மருத்துவர்களுமாய் 874 உடல்களை கண்டெடுத்தனர். அதில் 474 உடல்கள் அடையாளம் காணப்பட்டன என்று அந்த நகரத்தின் மருத்துவ அதிகாரியாக பணி புரியும் தேவராஜன் தெரிவித்தார்.

அகதிகளாக இருப்பவர்கள் எல்லாவற்றையும் இழந்துவிட்டார்கள். அவர்களின் உறவினர்களது சடலங்களைப் புதைப்பதற்குக் கூட அவர்களிடம் வசதிகள் இல்லை. அந்த உடல்களை எங்களால் எப்படிப் பாதுகாக்க முடியும் நோய்கள் பரவும் பெரும் ஆபத்திலிருந்து மீளுவதாயின் நாம் அவற்றை

*அங்கே திரும்புவதா? கடற்கரையோரத்தில் மீளவும் வீட்டைக் கட்டுவதா?*

*என்னுடைய இரண்டு வயதான மருமகளைத் தூக்கிக்கொண்டு போன கடலுக்கு முன்னால் கட்டுவதா?*

*ஓ! இல்லை! என்னால் முடியாது என மீனவர்களின் தங்கையும், மனைவியுமான 42 வயதுடைய இந்திரன் உமயத்தை சொல்கிறார்.*

எரித்தே ஆகவேண்டும் என வேதனையோடு கூறுகிறார்.

மட்டக்களப்பிலிருந்து மூன்று மையில் தொலைவுகளில், மூன்று புதைகுழிகள் தோண்டப்பட்டன. பத்துக்கும் மேற்பட்ட சமூக பணியாளர்கள் சடலங்களை புதைப்பதற்கு கையுறைகள் அணிந்தபடி நின்றுகொண்டிருந்தார்கள்.

புதைகுழிகளுக்குமேலால் துறுநாற்றம் வீசியது.

மட்டக்களப்பின் கரையில் எதுவுமே இல்லை. 1972 தொடக்கம் 2002 வரை நடந்த போரினால் எதுவுமே கட்டி எழுப்பப்படவில்லை ஒரு தொழிற்சாலைக்கூட இல்லை. எல்லாம் அழிக்கப்பட்டுவிட்டன.

2002 மாசி மாதம் சமாதானம் ஒப்பந்தம் செய்யப்பட்டது. 2003 இல் சமாதான பேச்சுவார்த்தைகள் நின்று போய்விட்டன.

தொடர்ந்து அகதிகளுக்கான நிவாரணப் பொருட்களைக் காவிக்கொண்டு பஸ் வண்டிகளும், லொறிகளும் மட்டக்களப்பை நோக்கிப் போகின்றன.

நிறைய உடுப்புகளும், அரிசிகளும் வழங்கப்படுகின்றது. ஆனைப்பந்தியிலுள்ள அகதி முகாமுக்கு 500 பாண்களை எடுத்துச் சென்று கொண்டிருந்த ஒருவர் கூறினார் "பாண் வியாபாரியிடம் நிறையப் பாண்கள் இல்லை இருந்திருந்தால் இன்னும் வாங்கியிருப்பேன்" என்று. சேர்ந்து உழைக்கும் மனப்பாங்கு உண்மையில் அங்கு இருக்கின்றது.

குடிநீருக்கான வசதிகளும் மலசல கூட வசதிகளும் உடனடியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

நிலத்தினுடைய மனிதர்கள் (Terre des hommes), உலகப் பார்வை (World vision), சர்வதேச அங்கவீனர் (Handicap International)போன்றோர் அகதிமுகாங்களுக்கு மருத்துவ உதவி வழங்க முயற்சிக்கிறார்கள். (NGO) அரச சார்பற்ற நிறுவனங்கள் பேரழிவு பற்றிய விபரங்கள் கிடைக்க பெற்றதும், எல்லாவற்றையும் மீள கட்டி எழுப்புவதற்கான முயற்சியில் இறங்க தயாராக இருப்பதாக கூறுகின்றனர்.

மொழிபெயர்ப்பு உதவி: மீரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒளிப்படம்: தி.தவபாலன்

# அலையில் பிறந்த கேள்வி

உள்ளங்கை உருட்டும் எலுமிச்சங் காயென
உலகம் ஒடுங்கிற்று கணனி யுகத்தில் என வியந்தோம்.
விஞ்ஞான அறிவின் அள்ளலில்
சுட்டு விரலில் உலகம் சுழலும்
ஒரு சுண்டங்காயென நாம் நினைத்திருந்தோம்.
ஆனால் முந்தநாள்,
வான்முகட்டை நோக்கி எழுந்த பேரலைகளில் ஒன்று,
விஞ்ஞானத்தின் செவியில் பிடித்ததை
ஓர் சிற்றெறும்பாய் கையில் வைத்துக் கேட்டது?
"உன் ஆய்வெல்லாம் எங்கே அடங்கிற்று இப்போ?"
விஞ்ஞானம் பரிதாபமாய் அசடு வழியக் குறுகிற்று.
"இச்சையிலா இயற்கை அன்னை நான்,
என் இயக்கத்தின் முன்
உன் ஆய்வெல்லாம் நான் போட்ட பிச்சை தான், தெரிகிறதா?"
"என்ன சொல்கிறாய் அம்மா?" - விஞ்ஞானம் விக்கித்தவாறு கேட்டது
"மீண்டும் நான் வருவேன் இக்கோலத்தில் அல்ல,
காண்டாவனமாகும் இப்பூமி அப்போது -
எஞ்சி நின்றாடும் உண்மையின் ஓர் புல்லின் துளிர்ப்பான என்னிருப்பில்
கருக்கொழும் புதுயுகம்"

■ மு.பொ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதஅவலங்களின் மீதான சந்திரிகாவின் அரசியல்

நாதன்

**ஐநா பொதுச்செயலாளரை தமிழர் தாயகத்திற்குச் செல்லவிடாது தடுத்ததன் மூலம் தமிழ் – சிங்கள தேசங்களிற்கு இடையேயான உறவுகளில் மற்றுமொரு கசப்பான அத்தியாயத்தை சந்திரிகா பண்டாரநாயக்க எழுதியுள்ளார்.**



ஆழிப்பேரலையின் பெரும் சிதைவுகளால் இலங்கைத்தீவு அழிவுண்டபோது, இனமுரண்பாடுகளை புறம்தள்ளி ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கான வாய்ப்பு அங்கு எற்பட்டுள்ளது என்கின்ற ஆருடங்களை அனைத்துலக ஊடகவியலாளர்களும், தலைவர்களும் வெளியிடத் தொடங்கினர். ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது தொடர்பான தமது முதலாவது சந்திப்பை நியூயோர்க்கில் முடித்துவிட்டு ஊடகவியலாளர்களை சந்தித்த ஐ.நா செயலாளர் நாயகம் கோபி அனானும், அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின்பவலும் இதே நம்பிக்கையை வெளியிட்டு முரண்பாடு தீர்வுக்கான (Conflict resolution) தமது ஆவலை வெளியிட்டிருந்தனர். கிளிநொச்சியில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சுப. தமிழ்ச்செல்வனும் இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்கான பணியில் அனைத்துத் தரப்பும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என்கின்ற அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

ஆனால், இந்த எதிர்பார்ப்புக்களுடன் கொழும்பு வந்த ஐ.நா செயலாளர் நாயகம் தனது விருப்பப்படி பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு செல்லமுடியாது சிறீலங்காவினால் தடுக்கப்பட்ட போது சிங்கள பேரினவாதத்தின் கொடுங்கரங்கள் அதன் வீரியம் சற்றும் குறையாது மனிதாபிமானப் பணிகளின் குரல்வளையை நெரிப்பதைக் கண்டு கொண்டார்.

போர்நிறுத்தமும், இணக்க முயற்சிகளும் இடம்பெறுகின்ற காலகட்டத்தில் இந்த கடும்போக்கை சர்வதேசசமூகம் எதிர்பார்க்கவில்லை. இதனால் இந்தத் தடுப்பு நடவடிக்கைகளின் பின்னால் உள்ள அரசியல் என்ன என்கின்ற கேள்வியே பெரியளவில் எழுந்தது.

தமிழர் பகுதிகளுக்குச் செல்வதையும், புலிகளை சந்திப்பதையும் எதற்காக சந்திரிகா தலைமையிலான சிங்களத் தலைமை தடுத்து நிறுத்தியது?.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆழிப்பேரலை தென்ஆசிய மற்றும் தென் கிழக்காசிய பிராந்தியத்தைச் சேர்ந்த 12 நாடுகளை தாக்கி ஊழித் தாண்டவம் ஆடி ஓய்ந்தவுடனேயே அது ஏற்படுத்திய மனித அவலத்தை துடைப்பதற்கான மனிதாபிமானப் பணிகளும் ஆரம்பமாகின. ஐ.நா செயலாளர் நாயகம் இந்தப் பணிகளின் தலைமைப் பொறுப்பினை வகித்தார். உலகளாவியளவில் பெருமளவிலான உதவிகளை உருவாக்கும் விதத்தில் அவசர அழைப்புக்களை (Flash appel) வெளியிடப்பட்டது. அழிவின் கனத்தை வெளிப்படுத்தும் அறிக்கைகள் விடுக்கப்பட்டன. பல நாடுகளினதும் வளங்கள் அவரது தலைமையில் ஒன்று திரட்டப்பட்டன. மறுபுறம், ஐ.நாவுடனான பனிப்போரில் ஈடுபட்டுவந்த அமெரிக்கா தன் பசுபிக் பிராந்திய சகாக்களான ஜப்பான், அவுஸ்ரேலியாவுடனும் இந்து சமுத்திரத்தில் இந்தியாவுடனும் இணைந்து உருவாக்கிய ஆழிப்பேரலையினைக் கையாள்வதற்காக அவசரக் குழுவானது ஐ.நா செயலாளர் நாயகத்தின் துடிப்பான செயற்பாடுகளால் கலைக்கப்பட்டு ஒரு குடையின் கீழ் கொண்டுவரப்பட்டது. இந்தப் பின்னணியில் ஜகார்த்தாவில் உதவிவழங்கும் நாடுகளின் சந்திப்பு நடாத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்காக 4பில்லியன் டொலர்களுக்கு மேல் உதவிகள் வழங்குவதற்கான ஒப்புதல்களை நாடுகள் வழங்கின. இந்த தொடர் முயற்சிகளின் மறுஅங்கமாகவும், மனிதாபிமானப் பணிகளைப் பலப்படுத்தும் நோக்குடனும் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடும் பயணத்தில் கொபி அனான் ஈடுபட்டார்.

அவரது இலங்கைக்கான பயண அறிவிப்பு வெளிவந்த போது ஆழிப்பேரலைகளின் 65வீதப் பாதிப்பை இலங்கைத்தீவில் எதிர்கொண்ட வடக்குக்கிழக்கு தாயகப் பகுதிகளுக்கும் அவர் விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்பட்டது. ஐ.நாவுடனும், பிற சர்வதேச நிறுவனங்களுடனும் நல்லுறவுகளைக் கொண்டுள்ள புலிகள் அவரது பயணத்திற்கான அழைப்பினை விடுத்தனர். அவரும் அந்த அழைப்பினை ஏற்று தமிழர் தாயகப்பகுதிகளுக்கு வருவார் என்பதும், தமிழர்களின் தலைமையினை வன்னிப் பகுதியில் வைத்து சந்திப்பார் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவே அறியத்தரப்பட்டிருந்தது.

தமிழர் தாயகப்பகுதிகளிலும், அனைத்துலக தமிழர் தரப்பிலிருந்தும் அவரது பயணத்தைக் கோரும் அழைப்புக்களும், மனுக்களும் அனுப்பப்பட்டன. அவர் செல்லவேண்டியதற்கான மனிதாபிமானக் காரணங்கள் இந்த மனுக்களில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

* * *

தனது இலங்கைத்தீவுக்கான சுற்றுப் பயணத்தின் ஒரு கட்டமாக அம்பாந்தோட்டையினிற்குச் சென்ற செயலாளர் நாயகம் தன்னால் தமிழர் தாயகப்பகுதிக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது தொடர்பான கவலையை வெளியிட்டார். தான் அனைத்துப் பகுதிகளுக்கும் செல்ல விரும்புகின்றபோதும், தான் அரசின் விருந்தினராகவே இங்கு வந்துள்ளேன் என்பதால் தன்னால் அரசை மீறி செயற்பட முடியாது என தெரிவித்தார். இந்த அறிவிப்பு அவர் தமிழர் தாயகத்திற்கு பயணம் செய்யாமைக்கான பொறுப்பினை சிறீலங்கா அரசின் மீது தள்ளியது.


மறுபுறம், சிஎன்என் தொலைக்காட்சிக்கான செவ்வியில் சிறீலங்கா சனாதிபதி எதுவித தயக்கமுமின்றி கொபி அனனை தானே தடுத்து நிறுத்தினேன் என உரிமை கோரினார். அவரது வெளிவிவகார அமைச்சர் தாங்கள் அவரை தடுக்கவில்லை, ஐ.நா கொழும்புப் பணிமனையே இந்த முடிவை எடுத்தது என்கின்ற பாவனையுடன் அறிக்கையொன்றினை வெளியிடுகையில் சிறீலங்கா சனாதிபதி எதுவித சங்கடங்களுமின்றி மிகுந்த கர்வத்துடன் தான்தான் ஐ.நா செயலாளரைத் தடுத்தேன் என அறிவித்தமையானது நன்கு திட்டமிடப்பட்ட இனவாத வேலைத்திட்டத்தின் வெளிப்பாடாகும்.

* * *

சந்திரிகா தலைமையிலான இனவாத சிறீலங்கா அரசு நோர்வே முன்னெடுப்புடன் கூடிய இணக்க முயற்சிகளையும், போர்நிறுத்த உடன்பாடு புலிகளுக்கும், அரசுக்கும் கொடுக்கும் இணையான பாத்திரத்தையும் கடுமையாக எதிர்ப்பவர்கள். சர்வதேச நெருக்கடி மற்றும் பொருளாதார கடுமைகளினால் போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்தோ, இணக்க முயற்சிகளிலிருந்தோ உடனடியாக வெளியேற முடியாத நிலையில் இழுத்தடிப்புக்கள் மூலமும், கடும் போக்கான நிலைப்பாடுகளை எடுப்பதன் வாயிலாகவும் இதனை சாதிக்க முற்பட்டனர். தமிழீழ போராட்டத்திற்கு எதிரான தென் தமிழீழப் படுகொலைகள் இத்தகைய முடிவுகளின் வெளிப்பாடேயாகும்.

இந்தச் சூழலில்தான் ஆழிப் பேரலை அனர்த்தம் இடம்பெற்றது. இந்த அனர்த்தங்கள் இடம்பெற்று முதல் மூன்று நாட்களும் சந்திரிகாவும், அரசும் செய்வதறியாது திகைத்து நிற்கையில் புலிகள் வடக்குக் கிழக்குப் பகுதிகளின் மீட்புப் பணிகளினை வெற்றிகரமாக நிறைவேற்றினர்கள். தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தனது பணிகள் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான பணிகளை முடுக்கிவிட்டது.

பேரழிவின் பின்னால் உடனடியாக இந்தியாவின் உதவியை நாடிய சிறீலங்கா மூன்றாம் நாளின் பின்னர் விழித்துக் கொண்டது. இந்த பேரழிவின் பின்னால் ஒரு சதிகார



ஐ.நா செயலா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ஐ.நா செயலாளர் நாயகம் கோபி அனான் அவர்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கின்றார்

அரசியல் நடவடிக்கைக்கான வாய்ப்புக்கள் இருப்பதை உணர்ந்து கொண்டது. புலிகள் தமது செயற்பாடுகள் மூலம் தமக்கானதொரு சர்வதேச நல்லெண்ணத்தை வலுப்படுத்திக் கொண்டதையும் புரிந்து கொண்டது. புலிகள் அமைத்த மாவட்ட செயலணிகள் புலிகளின் ஆளுமை வெளிப்பாடாக அமைவதை கண்டு கொண்டது.

இந்தப் போக்கை தடுத்து நிறுத்துவதற்காக சகல நிவாரண மற்றும் புனர்வாழ்வுப் பணிகளையும் தனது கைகளிற்குள் சந்திரிகா கொண்டுவந்தார். ஐ.நா கொழும்பு பணிமனை உருவாக்கிய பேரழிவு மையத்தின் செயற்பாடுகளையும் சந்திரிகா தனது ஆளுமைக்குள் கொண்டு வந்தார். தனது தலைமையில் மீட்புப்பணிகள், நிவாரணப் பணிகள், புனர்வாழ்வுப் பணிகளிற்கான நடவடிக்கைகளைக்கான அதிகாரிகளை நியமித்தார். புலிகள் மாவட்டவாரியாக உருவாக்கிய செயலணிகளினைக் கூட தனது ஆளுமைக்குள் கொண்டுவரும் முடிவுகள் எடுக்கப்பட்டன. தனது நிர்வாகத்தின் கீழ் புலிகளும் கட்டுண்டு செயற்படுவதாக அவர் பாவனை பண்ணத் தொடங்கினார். இராணுவத் தளபதிகளை மாவட்ட இணைப்பாளராக நியமித்தார்.

இங்கு இலங்கைத்தீவின் முழுநிர்வாகமும் தனது ஆளுகைக்குள்தான் உள்ளது என்கின்ற நிலவரத்தை மனித பேரழிவு ஏற்படுத்திய அழிவுகளின் ஊடாக நிறுவுவதிலே சந்திரிகாவின் நோக்காகவிருந்தது. சர்வதேச உதவிகள் அனைத்தையும் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதன் மூலம் தமிழர் தாயகப் பகுதிகள் தனது தயவிலேயே தங்கியிருக்க வேண்டும் என்கின்ற நிலைக்குள் தள்ளப்படும் என அவர் கணிப்பிட்டார். இதனால் கடுமையான அதிகார வர்க்க நெருக்குவாரம் சர்வதேச உதவிவழங்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன.

கொழும்பில் உள்ள ஐ.நா செயலணிகள் அடிப்படையில் நாடுகளுக்கு இடையேயான உடன்பாட்டின் கீழே உருவாக்கப்பட்டமையால் அவர்களால் சந்திரிகாவின் நெருக்குவாரத்திற்கு எதிர்த்து நிற்கமுடியாத சூழல் நிலவியது. இலங்கை அனைத்துலக அரசியலில் சரியானவர்களின் பக்கத்தில் நிற்பதால் ஐ.நா இலங்கை மீது அழுத்தம் கொடுக்கும் வாய்ப்புக்களை கொண்டிருக்கவில்லை என்று வாதிக்கப்படுகின்றது.

* * *

கொபி அனனின் முல்லைத்தீவுப் பயணம் அரசியல் இராஜதந்திர முனையில் உறுத்தலான விடயமாக சந்திரிகாவால் நோக்கப்பட்டது. இந்தப் பயணம் புலிகளுக்கும், புலிகள் தலைமை தாங்கும் தமிழர் தாயகப்பகுதிகளுக்கான கட்டுமானங்களுக்கும் கிடைக்கும் அங்கீகாரமாக அமைந்துவிடும் எனச் இனவாதிகளால் விபரிக்கப்பட்டது. ஐ.நா செயலாளர் ஒருபோதும் வட அயர்லாந்து போன்ற முரண்பாடு நிலவும் இடங்களுக்குச் சென்றதில்லை என கொழும்பு அதிகாரிகள் பெயர் சொல்லாமல் ஊடகங்களுக்கு விளக்கம் கொடுத்ததாக ஏபி செய்தித்தாபனம் கூறியது.

மனித அவலங்களைப் பயன்படுத்த தன்னை நிலைநிறுத்தும் அதேவேளையில் புலிகளையும், தமிழர்களையும் மூலைக்குள் தள்ளும் அரசியல் சதிக்கு ஒரு அச்சுறுத்தலாக கொபி அனானின் இந்தப் பயணத்தை சந்திரிகா நோக்கினார். இந்த சதியின் அடிப்படையில் ஐ.நா செயலாளர் நாயகம் தமிழர் தாயகப் பகுதிகளுக்குச் செல்லும் வாய்ப்பை தடுத்து நிறுத்தினார். இது அப்பட்டமான இனவாத நடவடிக்கையாகவே பார்க்கப்படும் என்பதை சந்திரிகா அறிந்திருந்தும் தனது நீண்டகால தேவைகளிற்காக இந்த முடிவை எடுத்தார்.

தமிழர்களுடன் எதுவித சமரசமுமற்ற அடக்குமுறை அணுகுமுறையையே சந்திரிகா தலைமை தாங்கும் இனவாத அமைப்பு தொடரும் என்பதற்கான ஒரு எடுத்துக்காட்டே இந்த தடுப்பு நடவடிக்கையாகும்.

* * *

இந்த தடுப்பு நடவடிக்கைகளினால் தமிழர்களிற்கு ஏற்பட்ட இழப்பு என்ன என்ன?. ஐ.நா செயலாளர் நாயகத்தின் பயணம் தேவையான கவன ஈர்ப்பையும், உதவிகளையும் தமிழர் தாயகப்பகுதிகளுக்கு கொண்டு வரும் என்கின்ற எதிர்பார்ப்பு பொய்த்துப் போய்விட்டது. எனினும், சிங்களத்தின் இந்த மறுப்பானது இனவாத கடும்போக்கினை செயலாளர் நாயகமே நேரிடையாகக் அனுபவிக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளது, இதனூடாக சர்வதேச சமூகமும் இதனை உணரும் வாய்ப்பும் எட்டியுள்ளது.

செயலாளர் நாயகம் தமிழர் தாயகப் பகுதிக்கு வந்திருப்பின் தமிழர் தலைமைக்கும், தாயக கட்டுமானங்களுக்கும் அங்கீகாரம் கிட்டும் என்று சிங்களஅமைப்பு பெரும் மகிழ்வுடன் விவாதித்துக் கொண்டிருக்கையில் இலங்கை இனச்சிக்கலின் ஆழத்தை சரியாகக் கணிப்பிடும் வாய்ப்பு அவர் வராது தடுக்கப்பட்டமையால் ஐ.நாவிற்கும் உலகத்தலைவர்களுக்கும் ஏற்பட்டுள்ளது என்கின்ற உண்மையை நாங்கள் கணிப்பிடல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லிஸ்போன் 1755:
# என்ன குற்றம், என்ன பிழை...

அது 1755 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம், போர்த்துக்கல் நாட்டின் தலைநகரம் லிஸ்போனையும், அதன் நகரங்களான மெகினேசையும், தெத்துவானையும் மற்றும் பெரும் தொகை குடியினர்களையும் அந்தக் காலத்தில் பயமுறுத்திய நிலநடுக்கம் அமிழ்த்திக்கொண்டது.

வோல்த்தர் (Voltaire) எனும் அழைக்கப்படும் பிரெஞ்சுக் கவிஞர் நியாயத்தை இந்த சிறந்த கவிதையிலிருந்து எடுத்துக் காட்டுகிறார்.

ஏமாற்றப்பட்ட தத்துவஞானிகள் உரக்கக் கத்தினார்கள் “எல்லாம் நலமாக இருக்கிறது”
ஓடுங்கள், உற்றுநோக்குங்கள் அவலட்சணமான இந்த அழிவுகளை
இந்த இடிபாடுகளை, இந்தக் கந்தைத்துணிகளை, இந்தத் துன்பமான சாம்பல்களை,
இந்த பெண்களை, ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கப்பட்ட இந்தக் குழந்தைகளை,
ஒடிந்த இந்த சலவைகற்களுக்குக் கீழ் சிதறடிக்கப்பட்ட இந்த உறுப்புக்கள்;
பல்லாயிரம் துர்ப்பாக்கியமுள்ளவர்களைத்தான் பூமி விழுங்குகிறது.
அவர்கள், இரத்தம் வடிக்கப்பட்டு, கிழிக்கப்பட்டு, இன்னும் துடித்துக்கொண்டு,
கூரைகளுக்குக் கீழ் புதைக்கப்பட்டு, உதவியுமின்றி போய்ச்சேர்ந்தார்கள்.
பயங்கரமான பல வதைகளுக்குள் அவர்களுடைய துக்கமான நாட்கள்!
அவர்களின் மூச்சை குரல்களால் வெளிவிட்டுக் கொண்டிருக்கும் உருமாற்றப்பட்ட குரல்களுக்கு,
புகைக்கிற அவர்களின் சாம்பல்களின் பயங்கரமுள்ள காட்சிக்கு
நீங்கள் சொல்வீர்களா: “அது முடிவில்லாத சட்டங்களின் பலன்
எவன் சுதந்திரமான மற்றும் நல்ல கடவுளினால் தேர்வை அவசியப்படுத்துகிறவன்”?
நீங்கள் சொல்வீர்களா, குவிக்கப்பட்ட இந்த பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்து:
“கடவுள் பழி வாங்கியுள்ளார், அவர்களின் மரணம் அவர்களுடைய குற்றத்தின் விளைவாக இருக்கிறது”
என்ன குற்றம், எந்தப் பிழையை இழைத்தார்கள் இந்தக் குழந்தைகள்
மிதிக்கப்பட்ட, இரத்தம் வடிக்கப்பட்ட தாயின் மார்பகத்தின் மீது?....

மொழிபெயர்ப்பு உதவி: மீரா

வோல்த்தர்(Voltaire)( லிஸ்போனின் அழிவு, 1755)




1755 இல் நிலநடுக்கம் லிஸ்போனை அழித்துவிட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ப. முகில் யேர்மனி

# கடலோர வாழ்வு

அலைகடல் வந்து தாலாட்டி
சென்ற கரை வாழ்வு
திரை கடலேறி
திரவியம் அள்ளிவந்த வாழ்வு
நுரை பொங்கும் கரையெங்கும்
மழலைகள் துள்ளி மகிழ்வாழ்வு
நிலவொளியில் கடல் வெளியில்
காதல் கொண்ட எம்வாழ்வு
பகல் வந்து மீன் அள்ளும்
பரவயரின் வாழ்வென்ற வாழ்வு
கடல் சூழ்ந்து நாம் வாழ்ந்த
இயற்கை வள வாழ்வு


அன்னை இவள் மடியில்
அழகாய் வாழ்கையிலே
அலைமேவிக் கரைதாவி
உயிரள்ளிப் போகுமென்று
நாம் நினைக்கவில்லை.
கொடுமிந்த நிலைவந்து
கொன்றொழிக்கும் என்று
கொஞ்சமும் எண்ணவில்லை.
கடற்புவி நடுங்கி —எம்
குலைநடுங்க வைக்குமென்று
விஞ்ஞானம் சொல்லவில்லை
கையெடுத்த தெய்வங்களும்
கடல் அள்ளிப் போகையிலே
கண்ணெடுத்துப் பார்க்கவில்லை.

எம்மை
சினந்தறியாக் கடற்தாயே! நீ
சீறிவந்து வறுக என்ன
எம் உயிர்கள் மலிவோ...?
செருகுண்டு புதையுண்டு
சிக்குண்டு சிதைந்தனவாய்ப்போவதற்கு
உயிரற்ற எம்முடல்கள் மலிவோ..?
குருத்தும் பிஞ்சும் காயும் கனியுமாய்
உருவி எடுத்துப்போக
பேரலையே உன்னை
ஏவியவர் யாரோ...?
குண்டுவந்து கொலைசெய்து
போகையிலே
எஞ்சிவந்த வாழ்வை
குடியோடு கடல் கொண்டு
குலமழியும் நிலையெமக்கோ?
கோவிற் தெய்வங்களும்
கொடும் அலைக்கு அஞ்சி
நடுவூரில் நடுபட்டு நின்றனவோ?

பெற்றெடுத்த பிள்ளைகள்
உடன்பிறப்புகள் கணவர்மார்
கைப்பிடித்த மனைவிமார்

கைப்பிடியில் கழன்று
சென்ற சிறுவர்கள்
அத்தனை உறவிழந்து
மாளாது மீண்டவர்கள்
மனநிலைகள் அறிவீரோ?
சிசுவிருந்த கற்பப்பை
கலங்கி நடுங்கிறதே...
சினந்துவந்த பேரலையே
திருப்பித் தருவாயோ..?
பார்த்துத் தவிக்கையிலே
பறித்துச்சென்ற எம்முறவை
திருப்பித்தருவாயோ பேரலையே.?

நெஞ்சுக்குழி கலங்கி
நினைவுகள் குழம்பி
பித்துப் பிடித்ததுபோல்
பிதற்றும் உறவுகள் நாம்
வாய்க்குழி இறங்கும் நீர்
வாரிய அலையை நினைவிருத்த
எஞ்சிய குஞ்சுகளின் வாழ்வுக்காய்
எங்களின் எதிர்காலத்துக்காய்
மீண்டும் நிமிர வேண்டும்.
நிமிர்ந்தே வாழவேண்டும்.!!!!





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# தனித்து விட்டதாய்த் தவிக்காதீர்

எதிரி ஆமியின் தொல்லை தளர்ந்து — கொஞ்சம்
எம் மக்கள் முகம் மலர்ந்த வேளை — மீண்டும்
சுனாமியின் கோரக் கரத்தால் கேடுண்டு
சிதறிப் போயிருக்கும் எம் உறவுகளே

தயக்கமின்றி நாம் உரைக்கின்றோம் — நீங்கள்
தனித்துவிட்டோம் என்று தவிக்க வேண்டாம்
எதுவும் இல்லையென்று ஏங்கவேண்டாம் — உங்கள்
உதவும் உயிர்கள் இங்கு நாங்களுள்ளோம்

உங்கள் அவல ஓலங்கள்
எங்கள் நெஞ்சை உலுக்கியதே
நீங்கள் மட்டுமா உயிரிழந்தீர் — இல்லை
நாங்களும் இங்கு நடைபிணங்களே
நீங்கள் மட்டுமா படுகாயப்பட்டீர் — இங்கு
எங்கள் இதயங்களும் படுகாயம் கண்டுள்ளதே
நீங்கள் மட்டுமா ஊணுறக்கமற்றீர் — செய்திகேட்டு
நாங்களும் ஊணுறக்கம் மறந்துவிட்டோமே

எங்கள் தமிழ் நெஞ்சங்கள்
எங்கு நொந்து அழுதாலும்
இங்கு எம் நெஞ்சம் நொந்து
நோய்கண்டு குருதி வடிகின்றதே

இங்கு எம் புலம் பெயர் மக்கள் ஒன்றாகி
நன்கு வெண்புறாவாகிப் , புனர்வாழ் கழகமாகி
எங்கும் பறந்து முயன்று தேடி
உங்கள் துயர்துடைக்க துடித்து நிற்கின்றோம்

நாளை மலரும் நல் விடியலில்
நம் மக்கள் நலம்பெற்று
குறைகளைந்து குணமடைந்து — மீண்டும்
உறுதிகொண்ட மனிதராக வேண்டுகின்றோம்

காலம் உங்கள் கவலை களையும்
கடமை தங்கள் சுமையைக் குறைக்கும்
வேகம் உங்கள் நடையில் தெரியும்
வென்று வாழ வழியும் பிறக்கும்

**திருமலைச்செல்வன்** ஜேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இந்தியா



தமிழீழம்



இந்தோனேசியா



சிறீலங்கா




தாய்லாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மாலைதீவு





மலேசியா





தென்கிழக்காசியாவில்
சுனாமிப்பேரலை அனர்த்தமும்
அது பதிந்து சென்ற
சுவடுகளும் – பதிவுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுனாமி ஆழிப்பேரலையால்






பிரான்ஸ்





பின்லாந்து





ஜேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர்பகிர்வும்






# துயருற்ற மக்களுக்காக





கனடா





பிரித்தானியா





நியூசிலாந்து

# துயர்துடைப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சுனாமி ஆழிப்பேரலையால் துயர்பகிர்வும்

சுவிற்சலாந்து




## காரணமும் காரியமும்



ஞாலவன்

விழிக்க மறந்த கண்கள்
தூக்கமும் துன்பமும்
தொடர்ந்ததினால்
எட்டாத வேதனைக் கரைகளை
எட்டாமலேயே போனதாக எண்ணி
கடலிடையே ஓர்
கண்ணீர் வாழ்க்கை
பார்வைகளை மறுத்ததினால்
பாதைகள் திசைகளையிழந்து
சிக்கித் தவித்தன
உண்மைகளை நோக்கிய
தேடல்கள்
உருவங்களிடம்
தங்களையே இழந்து போயின.
இழப்புக்கள்
விளக்கங்களுடன் விரிந்து
இலக்கணமாகியது
பற்றுக்கொண்ட தேடல்களும்
கூடவே ஒட்டிக்கொண்டன
இருட்டு மேடையில்
சுருட்டல் நாடகம்
நலமே நடந்தேறியது
தொலைந்துபோன சொந்தங்களிலே
எஞ்சிப் போனவை:
ஏழ்மையும் ஏளனமுவே!
நியாயக் கற்பிதங்கள்
கோர்ட்டு சூட்டும் மட்டும்
போட்டிருக்கவில்லை
கோவணமும் சால்வைத்துண்டும் கூட
எட்டி நின்று ஏவல் செய்தன
மேடைக்கு வெளியிலும்
நடமாடும் வேசங்கள்
அவற்றின் கூச்சலிலே
அருகில் நின்ற ஆதரவென்றெண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துயருற்ற மக்களுக்காக





# துயர்துடைப்பும்

நம்பியே வெம்பிய கூட்டங்கள்
மூடிய கண்களுக்குள்ளே
முழுநேர விரிவுரைகள்
வெளிச்சத்திற்கு வேலியிட்டன.
வேலியென்ன
தாழ்ப்பாளே போட்டன.
கடந்து போனவையெல்லாம்
இழந்து போனவையாம்
புதிய விளக்கங்கள்
கண்ணுக்கு மை இட்டு
அழகென்று அறிவுறுத்தின
குருட்டுக் கண்கள்
இருட்டுக் வாழ்க்கையிலும்
இழந்ததை

தாம் மறந்ததை - ஏதோ
மீட்டுக் கொண்டதைப்போல்
மகிழ்ந்து கொண்டன
தேவைகளின் நிர்ப்பந்தத்தில்
நீண்டு வரும் கைகள்
வாங்குவதிற்காக ஏங்கி நிற்கும்
ஏங்கி ஏங்கி
எதையுமே வாங்காமல்
தூங்கிப்போகும் - அல்லது
துளியொன்று கிட்டிவிட்டால்
துள்ளிப்போகும்
முட்டும் நீர்த்துளிகள்
கண்கள் மீறி
எட்டிப் பார்க்க
எல்லைகளைத் தாண்டிய
அழுகைகள்


வெளிச்சத்திற்குள் வந்து
வேவு பார்க்கும்
இருட்டு மேடைகளின்
வரட்டு வாதங்கள்
கேள்வி குறிகளாகி
விலகிப் போக
தூக்கத்தின் துயரங்கள்
வாழ்க்கை வரைமுறைகளோடு
அளக்கப்படும்
வாங்கிய கைகள்
ஓங்கும் நாள் வரின்
துயரங்கள் தூரமாகி
எட்டினும் எட்டாமல்
விட்டுப் போய்விட
காரணங்களைத் தேடிய
கண்கள்
பார்வைகளுக்குள்
பதிந்து கொண்டதை
எடை பார்த்து
எடுத்துக் கொள்ளும்
நாளை நம்கையில்
வாழ்வு எம்கையில்
வரைமுறைகளும் அவ்வாறே!
ஆமாம்
இறந்தகாலம் பாடங்களாகி
இலட்சியம் எதிர்காலமாக
போராட்டம் நிகழ்காலமாகட்டும்!!
அப்போதுதான்
வினாகள் விடைகளைக்காண
விடைகள் வரைகளைக்காண
வரைகள் மனிதத்தைக் காணும்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புலிகளின் குரல்' வானொலிப் பொறுப்பாளர் தமிழன்பன் [ஜவான்] அவர்கள் - விடுதலைப்போரில் தன்னை இணைத்துக் கொண்டு தலைவர் மீதும், தலைவர் வரித்துக் கொண்ட கொள்கை மீதும் பற்றுடன் செயற்பட்டுவருபவர்களில் ஒருவர். எளிமையானவர், அன்பாகப் பழகக் கூடியவர், மக்கள்மீது பாசம் கொண்டவர், போர்க்களத்தில் ஒரு காலை இழந்த நிலையிலும் தொடர்ந்து பணிகளில் செயற்பட்டுவருபவர்.

விடுதலைப் போராட்டத்தில். பல்வேறு தளங்களிலும் இயங்கிவருபவர். குறிப்பாக பல களங்களைக் கண்டு பல விழுப்புண் களைத்தாங்கிய போர் வீரன், புகைப்படக் கலைஞன், ஒரு நல்ல ஊடகவியலாளர்.

துடிப்புமிக்கவர். வெளிநாடுகளுக்கும் அவர் பயணங்களை மேற்கொண்டு வருகிறார். அத்தகைய அவரது ஒரு பயணத்தில் அவரை நாங்கள் நேர்கண்டோம்.



# எமது இனத்தின் உரிமைக்குரலாக, விடுதலைக் கானமாக ஒலிக்கிறது - புலிகளின் குரல்

**புலிகளின் குரல் வானொலியினுடைய தோற்றம் பற்றியும், அது தன்னுடைய பயணப்பாதையில் எதுவரை சென்றிருக்கின்றது என்பது பற்றியும் கூறுவீர்களா?**

"ஒடுக்கப்பட்ட எமது மக்களின் உரிமைக் குரலாகவும், எதிரியின் பொய்மைகளுக்கு எதிரான உண்மைக் குரலாகவும் ஓங்கி ஒலிக்கட்டும்" - என எமது தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் புலிகளின் குரல் வானொலியை 21.11.1990 ஆம் ஆண்டு தொடக்கி வைத்தார்.

தமிழ் மக்களின் தனித்துவமான முதல் வானொலியாக இதுவே தோற்றம் பெற்றது. சிங்கள அரச பயங்கரவாத ஆட்சியாளர்கள் எமது மக்கள் மீது அடுத்தடுத்து தொடுத்த கொடும் யுத்தங்களிலிருந்து - அவர்களை எமது விடுதலை இயக்கமானது புலிகளின் குரல் ஊடாகவும் பாதுகாத்து வந்திருக்கின்றது.

அந்த வகையில், ஆரம்பத்தில் எதிரியின் உலங்கு வானூர்தித் தாக்குதல்களிலிருந்தும், விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களிலிருந்தும் தற்காப்புத் தேடுதல் பற்றி மக்களுக்கு எடுத்துரைத்துள்ளது.

சிங்களப்பயங்கரவாத ஆட்சியாளர்கள் எமது மக்கள் மீது பொருளாதார தடையை விதித்தார்கள். போக்குவரத்துத் தடையை விதித்தார்கள், சுகாதார மருத்துவத் தடைகளை விதித்தார்கள். கல்விக்கான தடைகளை விதித்தார்கள். இவ்வாறான அத்தியாவசியத் தேவைகளுக்கெல்லாம் தடைவிதித்தார்கள், முற்றுகையிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதெல்லாம் எமது மக்கள் தடைகளையும் முற்றுகைகளையும் எதிர்த்து நின்று வாழக்கூடிய கருத்துக்களை புலிகளின் குரல் வானொலி எடுத்துரைத்தது.

உதாரணமாக - பதுங்குகுழி அமைத்தல், உணவு பதனிடல், வீட்டுத் தோட்டம் அமைத்தல், உணவைச் சிக்கனப்படுத்துதல், பகிர்ந்து உண்ணுதல், சுகாதாரக் கருத்தூட்டல், முதலுதவிச் சிகிச்சைக்கான அறிவூட்டல், கல்வி வளர்ச்சிக்கான கருத்துரைகள், பண்பாடு, சட்ட ஒழுங்கு போன்ற வகையில் புலிகளின் குரல் மக்களுக்கான கருத்துப் பரம்பலைச் செய்தது.

அத்துடன் மக்களின் மனங்களை மேம்படுத்தி விடுதலைக் கருத்துக் களையும் வரலாற்றையும் கூறி விடுதலைப் போருக்கு வலுவூட்டியது.

இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட எமது தேசத்தை மீட்கும் போரின் போது மக்களைப் பாதுகாத்து, எதிரியை அழிக்கும் நடவடிக்கை களின் போது மக்களுக்கான அவசர அறிவித்தல்களையும் வழங்கியது.

உதாரணத்திற்கு - ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையின் போது மக்களையும், நிலத்தையும் ஆக்கிரமித்த இராணுவத்தினரை தனிமைப் படுத்தி தமிழர்சேனை தாக்கி அழித்தது. அப்பொழுது பாதுகாப்பான இடங்களுக்கு மக்களை நகர்த்தும் அறிவித்தல்களைச் செய்தது. இதனால் எமது மக்களின் இழப்பின்றி எமது இயக்கம் பாரிய நிலப் பரப்புக்களை வெற்றிகரமாக மீட்டது.

இப்போது புலிகளின் குரல் வளர்ந்து புலம் பெயர்ந்த எமது உறவுகளுக்காக இணையத்தளத்தினூடாகவும் இயங்கி வருகிறது.

www.pulikalinkural.com

**போராட்டம் நடந்து கொண்டிருக்கும் நெருக்கடியான கால கட்டங்களில் எவ்வாறு செய்திகளை சேகரித்தீர்கள் ?**

நாட்டில் சிறீலங்கா இராணுவத்தின் முற்றுகைக்குள் இருந்த மக் களுக்கு தொடர்புசாதன வசதிகள் இருக்கவில்லை. அதேபோல் புலி களின் குரலுக்கும் தொடர்புசாதன வசதிகள் இருக்கவில்லை. இருந்தா லும் எங்கள் இயக்க இராணுவத் தேவைகளுக்காக பாவிக்கப் பட்டிருந்த தொலைத்தொடர்புச் சாதனங்களை நாமும் பாவித்து செய்திகளைச் சேகரித்தோம்.

அதைவிட எங்களுடைய மக்களும், எங்களுடைய செய்தி யாளர்களும் அந்தந்த பகுதிகளுக்கு சைக்கிளிலோ, ஓடியோ, நடந்தோ, செய்திகளை சேகரித்துத் தந்தார்கள்.

பிரதம செய்தி ஆசிரியர் தவபாலன் கூட எந்த இடங்களில் சம்பவங்கள் நடந்திருக்கிறதோ அந்த இடங்களுக்கு நேரடி யாகச் சென்று செய்திகளைச் சேகரிப்பார். அந்நேரம் இராணுவம் 'செல்' அடித்துக்கொண்டிருப்பான். விமானத் தாக்குதல்கள் நடக்கும். இராணுவத்துடனான மோதல் கள் நடக்கும். நாங்கள் இராணுவத்தை வெற்றிகொண்டு அடித்துக்கொண்டு முன்னுக்கு போவோம். அந்தந்த இடங் களில் சென்று செய்திகள் சேகரிக்கப்படும். இவை உட னடியாகவே ஒலிபரப்புச் செய்யப்படும்.

இதில் உண்மையிலேயே செய்தி சேகரிப்பாளர்களின் பங்கென்பது மகத்துவமானது. நெருக்கடிகளுக்குள்ளும் யுத்தங்களுக்குள்ளும் சலிக்காமல் எந்த ஒரு தனிப்பட்ட எதிர்பார்ப்பும் இல்லாமல், தங்களாலியன்ற ஏதோ ஒரு வழியில் செய்திகளைத் தருவார்கள்.

செய்திகள் சிலவேளை உடனடியாக வரும் சில தாமதமாக வரும் இராணுவ விமானத்தாக்குதல் நடந்து விட்டது என்று சொன்னால் அந்தச் செய்தியை எப்படியும் வேகமாக கொண்டுவந்து தருவார்கள்.

தூர இடத்துச் செய்திகள் அங்கே உள்ள செய்தி சேகரிக்கக் கூடிய போராளிகள் ஊடாகவும், சாதாரண மக்கள் ஊடாகவும் சேகரிக்கப்பட்டு எமது இயக்கத்தின் தொலைத்தொடர்புச்சாதனங்களுக்கூடாக பெறப் பட்டன.

தலைவருடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப பற்றுறுதியோடு அவரு டைய கருத்துக்களை முன்வைத்து, எங்களுடைய செய்தியாளர்கள், கலைஞர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், பொறியியலாளர்கள் உட்பட அனைவரும் செயற்பட்டார்கள்.


இதனால்தான் புலிகளின் குரலை தொடர்ச்சியாகவே எல்லா மக்களாலும் கேட்கக் கூடியதாக இருக்கிறது.

**தாயகத்திலும் வெளியிலும் நிகழும் ஊடகப் பணியில் புலிகளின் குரலின் பங்கு என்ன ?**

தாயகத்திலிருக்கும் மக்கள் எம்முடைய நிர்வாக கட்டமைப் புக்குள்ளும், சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும், புலிகளின் குரல் எல்லோரும் பயனடையக்கூடியவகையில் சேவை செய்கிறது.

இதேநேரம் எமது வானொலியின் வீச்சுத்தூரம் குறிக்கப்பட்ட எல்லைக்குள் இருந்தாலும் ஏனைய ஊடகங்கள் புலிகளின் குரல் செய்தியை மேற்கோள்காட்டியோ அல்லது மறுஒலிபரப்புச் செய்தோ வெளியிடுகின்றன. புலம்பெயர் வாழ் மக்கள் மத்தியிலுள்ள ஊடகங்களும் இவ்வாறு செய்து வருகின்றன.

நேரடியாக எங்கள் செய்திகள் புலம்பெயர் வாழ் மக்களைச் சென்றடைவதற்கான வசதிகள் எங்களிடம் முன்பு இருக்கவில்லை. ஆனால், இப்பொழுது எங்களால் முடிந்த நடவடிக்கையாக இணையத் தளத்திற்கூடாகவும் உலகம் முழுதும் புலிகளின் குரல்கேட்கக் கூடியதாக இருபத்திநான்கு மணத்தியால இணையச் சேவையைச் செய்து வரு கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்கண்டவர்கள்:
எரிமலை சஞ்சிகைக் குழுவினர்



"தேசியத் தலைவரின் ஆழமான, தீர்க்கதரிசனமிக்க பார்வையோடு, நேரடியான வழிகாட்டலில் ஊடகப் பண்பாட்டோடு நாங்கள் இயங்குகின்றோம். ஊடகப்போரில் வென்றிருக்கிறோம். வென்றுகொண்டுமிருக்கின்றோம்."

**ஊடகப்போர் பற்றி கூறுங்கள்.**

ஊடகப்போர் என்பது ஒரு முக்கியமான விடயம்.

அதனால்தான் தமிழீழத்தேசியத் தலைவரின் வழிகாட்டலுக்கமைவாக, அப்போது யாழ்மாவட்டத் தளபதியாக இருந்த 'கிட்டண்ணா' எமது இயக்கத்திற்கான ஊடகக்கட்டுமானத்தை ஆரம்பித்தார்.

ஆரம்பத்தில் மக்கள் கூடும் முக்கிய இடங்களில் அமைக்கப்பட்ட 'உறுமல்' செய்திப் பலகைகளில், நாளாந்தம் செய்திகளை எழுதிவிடுவதனூடாகவும், பின்பு சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், பதாதைகள், பத்திரிகைகள், (களத்தில் பத்திரிகை, விடுதலைப் புலிகள் பத்திரிகை) என்ற நிலையிலிருந்து நிதர்சனத் தொலைக்காட்சி, புலிகளின் குரல் சிற்றலை ஒலிபரப்பு (தொலைத் தொடர்பு சாதனத்தை பயன்படுத்தி நாளாந்தம் குறிக்கப்பட்ட நேரத்தில் செய்யப்பட்ட ஒலிபரப்பு), ஒளிவீச்சு சலனப்படச் சஞ்சிகை, புலிகளின் குரல் பண்பலை வரிசையிலான ஒலிபரப்பு என விடுதலைப் புலிகளின் ஊடகவியல் இணையத்தளம் வரை வளர்ச்சி பெற்றுள்ளது.

எங்கள் இனத்தை சின்னாபின்னமாக உடைக்கத் திட்டமிட்டு எதிரியின் ஊடகங்கள் முடுக்கி விடப்பட்டன. மேலும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன.

அந்த ஊடகங்களின் பொய்யான செய்திகளை, 'இல்லை' என்று மறுத்தோ 'பொய்' என்று சொல்லியோ எதிர்த்து நின்று போராடியோ கருத்துக்களை முன்வைக்காமல் எங்களுடைய செய்திகளை உள்ளபடியே அழுத்தமாக ஒலிபரப்பினோம்.

ஊடகத்தர்மத்தை பின்பற்றினோம். எதிரியும் தன் வேலையைச் செய்து கொண்டே இருந்தான். காலத்துக்குக் காலம் எதிரிகளால் கொண்டுவரப்பட்ட ஊடகங்களான 'லங்காபுவத்', 'மக்கள் குரல்', போன்ற சிறீலங்கா ஊடகங்களும், ராஜீவ் காந்தி அரசால், இந்திய அமைதிப்படை எமது மண்ணை ஆக்கிரமித்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 'நேசக்கரம்' 'பூமாலை' போன்ற ஊடகங்களும் எமது விடுதலைப் போராட்டத்திற்கும் எமது இனத்திற்கும் எதிராக செயற்பட்டன.

இப்படியாக பல ஊடகங்கள் அவ்வப்போது தோன்றின. எல்லாம் கொஞ்சக் கொஞ்சக் காலந்தான் இயங்கின. அது உங்களுக்குத் தெரியும்.

ஆனால், புலிகளின் குரல் தொடர்ச்சியாகவே யுத்தத்தின் மத்தியிலும், முற்றுகைகளின் மத்தியிலும், வல்லரசுகளின் பிற்பலத்தோடு நிற்கும் சிறீலங்கா அரசை எதிர்த்து, மக்களோடு மக்களாக நின்று, தலைவரின் வழிகாட்டலில் பதினான்கு வருடங்களை கடந்து, ஏராளமான நேயர்களை இணைத்து, பலமான ஒரு ஊடக சக்தியாக வளர்த்திருக்கிறது.

அது பல வழிகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இன்று 'புலிகளின் குரல்' விடுதலைக் குரலின் அடித்தளமாய், அடிநாதமாய் தாயகத்திலிருந்து உலகமெலாம் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

விடுதலை பற்றிய கருத்துக்களையும், செய்திகளையும் எடுத்துச் செல்கிறது. தாயகம் பற்றிய செய்திகளைப் பொறுத்தளவில் புலம்பெயர் நாடுகளில் இயங்குகின்ற ஊடகங்கள் புலிகளின் குரல் செய்திகளை அடிப்படையாகவைத்தே ஒலிபரப்புச் செய்கின்றன என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன்.

இந்த வகையில் எதிரிகளினுடைய பொய் பிரச்சாரங்கள் உடைக்கப்படுகின்றன. அவர்கள் உருவாக்கும் கருத்துக்கள் வலுவிழந்துக் கொண்டு போகின்றன.

தேசியத் தலைவரின் ஆழமான, தீர்க்கதரிசனமிக்க பார்வையோடு, நேரடியான வழிகாட்டலில் ஊடகப் பண்பாட்டோடு நாங்கள் இயங்குகின்றோம். ஊடகப்போரில் வென்றிருக்கிறோம். வென்றுகொண்டுமிருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எமது பாரம்பரிய இசைக்கூறுகளையும் இசைக்கருவிகளையும் பாதுகாப்பதில், வளர்த்தெடுப்பதில் வானொலியின் பங்கு எதுவாக இருக்கிறது ?**

எமது பண்பாடு பாரம்பரியம் பற்றிய வலுவான தேடலுக்குரிய சந்தர்ப்பம் உண்மையிலையே கடந்த போர்க்காலங்களிலே எங்களுக்கு ஏற்படவில்லை. அதற்கான அவகாசமும் இருக்கவில்லை.

இருந்தும் எங்களை அறியாமல், இந்த எண்ணங்கள் எங்களோடு ஒட்டிவந்து காக்கப்பட்டிருக்கிறது. பாரம்பரிய இசைக்கூறுகள் எங்களுடைய கலை நிகழ்ச்சிகளுக்கூடாகவும், அந்த கலைஞர்களைச் செவ்வி காண்பதூடாகவும், பாரம்பரிய இசைக்கருவிகளை இசைப்பதனூடாகவும் பாதுகாக்கப்படுகிறது. ஓரளவு வளர்கிறது. எங்களுடைய மக்களுக்குள் அது வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறது.

ஆனாலும் அதற்கென்று திட்டமிட்டு அதற்கான செயல் வடிவத்தை இன்னும் செயற்படுத்தவில்லை. அது ஒரு குறையாகத்தான் இருக்கிறது. அதை நாங்கள் வேகமாக செய்யவேண்டும் என்பதும் உண்மைதான். தலைவருடைய கருத்திலும், எண்ணத்திலும் அது இருக்கிறது. அதற்கு எல்லோருமே ஒத்துழைத்து, செயல் வடிவத்தில் இறங்க வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளையும் நான் இங்கு முன் வைக்கிறேன்.

**நீங்கள் அறிந்திருப்பீர்கள். குறிப்பாக எம்மக்கள் வாழும் நாடுகளில் திட்டமிட்ட வியாபார நோக்கைக் கொண்ட சினிமாக்கள்,**
**நாடகத் தொடர்கள் என்பன ஆதிக்கம் செய்கின்றன. மக்களைப் போதை நிலைக்குத் தள்ளி, அவர்களின் சுயசிந்தனையை மழுங்கடிக்கச் செய்து பொழுதுபோக்குப் பண்ட நுகர்வாளர்களாக மாற்றிவரும் இந்த பேராபத்தை எப்படி எதிர்கொள்ளலாம்?**

இது உண்மையில் பெரிய பிரச்சினைதான். இல்லையென்றில்லை. ஆனால் 'இது எங்களுக்கு ஒரு உடனடி சவால்' என்ற ஒரு நிலவரத்தை எமது மக்கள் எமக்கு இன்னும் ஏற்படுத்தவில்லை.


எங்களுடைய மக்களின் வாழ்வியல் நிலைமைகள் வேறுபாடானது. இந்திய மக்களின் வாழ்வியல் நிலைமைகள் வேறுபாடானது. எங்களுடைய மக்களுக்கு நாடு, ஊர், தன்னுடைய குடும்பம், என்ற பற்றுணர்வு அதிகம். அதனால் அவர்களை அந்நிய கலாச்சார சீரழிவுகளோ, தென்னிந்திய சினிமா கலாச்சார சீரழிவுகளோ முற்றுமுழுதாகப் பாதித்துவிட முடியாது. இருந்தாலும், இந்தப் பிரச்சினை இருப்பதென்பது உண்மைதான்.

அதற்கெதிராக எங்களுடைய மக்கள், எங்களுடைய கலைஞர்கள் விழிப்போடு செயற்படவேண்டும். குறிப்பாக, புலம்பெயர்ந்த மண்ணில் ஏராளமான சினிமாக்கலைஞர்கள் உருவாகிக் கொண்டு வருகிறார்கள். அதற்காகப் படித்துவருகிறார்கள். அதற்கான ஆர்வம் இருக்கிறது. அதற்கான பொருளாதார வளம் இருக்கிறது. அவற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு தாயகத்தை நோக்கிய, மையப்படுத்திய, கருத்தோட்டமிக்க, ஆரோக்கியமான, ரசனைமிக்க, கலைப்படைப்புக்கள் விரைவில் உருவாகும். உருவாக வேண்டும். இந்த வகையில்தான் இத்தகைய சீரழிவுகளிலிருந்து மக்களைக் காக்க முடியும்.

தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரையில் நல்ல, கணிசமான கலைப்படைப்புக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. புதிய புதிய படத் தயாரிப்பாளர்கள், நெறியாளர்கள், கலைஞர்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்.

எமது கலைப்படைப்புக்கள் எமது மக்களால் வரவேற்கப்பட்டிருக்கின்றன. விரும்பிப் பார்க்கப்படுகின்றன. எமது மக்களின் எதிர்பார்ப்புக்கு இசைவாக நாமும் வேகமாக இயங்கவேண்டும். அதேவேளை எங்களுடைய வானொலிகளினதும் தொலைக்காட்சிகளினதும் வலுமேலும் அதிகரிக்கப்பட்டு எங்களுடைய வாழ்வியலைப் பேச வேண்டும். எங்கெங்கெல்லாம் எமது மக்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் அவர்கள் நல்ல கருத்துக்களையும் செய்திகளையும் அறிவதற்கு வாய்ப்பளித்துக் கொடுக்கவேண்டும்.

> *“எங்களுடைய மக்களின் வாழ்வியல் நிலைமைகள் வேறுபாடானது. இந்திய மக்களின் வாழ்வியல் நிலைமைகள் வேறுபாடானது. எங்களுடைய மக்களுக்கு நாடு, ஊர், தன்னுடைய குடும்பம் என்ற பற்றுணர்வு அதிகம். அதனால் அவர்களை அந்நிய கலாச்சார சீரழிவுகளோ, தென்னிந்திய சினிமா கலாச்சார சீரழிவுகளோ முற்றுமுழுதாகப் பாதித்துவிட முடியாது.”*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியம் பற்றிய பார்வையும் அவை செய்ய வேண்டியவையும்

'கலை இலக்கியப் படைப்புக்கள் மக்களை சிந்திக்கத் தூண்ட வேண்டும். பழமையிலும் பொய்மையிலும் பல்வேறு மாயைகளிலும் சிறைப்பட்டுக் கிடக்கும் மக்கள் மனதில் புரட்சிகரப் பார்வையைத் தோற்றுவிக்க வேண்டும். மாறி வரும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்' இப்படிக் கூறுகிறார் எமது தேசியத்தலைவர் அவர்கள். இது விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட முத்தமிழ் விழாவிற்கு வாழ்த்துத் தெரிவித்து 06.06.1991 அன்று எமது தலைவரால் விடுக்கப்பட்ட அறிக்கையில் உள்ள ஒரு வசனமாகும்.

உண்மையில் கலை, இலக்கியப் படைப்புக்கள் தலைவர்கூறிய கருத்தின்படியே அமைய வேண்டும். அப்படிப்பட்ட கலை இலக்கியங்களே நீதியான மனச்சுத்தியுடன் படைக்கப்படும் கலை இலக்கியங்கள் ஆகும். இனி நாம் கலை இலக்கியங்கள் எப்படி எப்படி அமைதல் வேண்டும் என்பது பற்றியும், அது ஒரு மக்கள் கூட்டத்தின் அல்லது நாட்டின் சீரமைப்பிற்கு, எழுச்சிக்கு ஆற்ற வேண்டிய பங்கு பற்றியும் அதைப் படைப்போர் பற்றியும் பார்ப்போம்.

உலகத்து அனுபவங்களை மீள உருவாக்கித் தருவதே கலை இலக்கியங்கள் ஆகும். அதாவது ஓர் கலை இலக்கியவாதி தான் கண்ட அனுபவத்தை அல்லது வேறு ஒருவர் கண்ட அனுபவத்தை மீண்டும் இன்னுமொருவர் பார்க்க அல்லது வாசிக்கச் செய்கின்ற செயற்பாடே கலை இலக்கியமாக மாறுகின்றது.



கலை, இலக்கியங்கள் வாழ்க்கையுடன் சேர்ந்து இருக்கவேண்டும். அதாவது எமது வாழ்க்கை வட்டத்தினுள் அடங்காத தேவையற்ற விடயங்கள் கலை இலக்கியத்தினுள் அடக்கப்படக் கூடாது. அவ்வாறு அடக்கப்படும் விடயங்கள் உண்மையிலேயே தேவையற்றவை ஆகும். மக்களுக்கு எது தேவையோ அதையே படைப்பாளி தன் படைப்புகளூடாக வழங்க வேண்டும். அதையே மக்களும் பார்த்தோ படித்தோ அனுபவிப்பர். மக்களால் அனுபவிக்கப்பட்ட ஓர் கலை இலக்கியப் படைப்பு புதிய ஓர் பாதையையோ, புதிய வாழ்வுத் திருப்பத்தையோ ஏற்படுத்துமாயின் அதுவே கலை இலக்கியத்தின் வெற்றியாகக் கொள்ளப்படுகிறது. இப்படியாகக் கலை இலக்கியப் படைப்புகளை உருவாக்குகின்றவர்களைப் பிரதானமாக மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன:

01. பார்வையும் கலைப்பெறுமானமும் கொண்ட வெற்றிகரமான படைப்பை உருவாக்கும் படைப்பாளி.

02. கேளிக்கையாளர்கள்.

03.சிறந்த படைப்பை உருவாக்க முடியாவிட்டாலும் ஆத்மார்த்தமானதைச் செய்கின்ற படைப்பாளர்.

இவ்வகையில் நாம் முதலாவது படைப்பு வகையைச் சேர்ந்தவர்களையும் அவர்களது கலை, இலக்கியப் போக்குப் பற்றியும் பார்ப்போம். பொதுவாகச் சொல்லப் போனால் இவ்வகைப் படைப்பாளர்களால் புதிய ஓர் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும். அத்தோடு இவர்களின் படைப்புக்கள் சமுதாய வாழ்வுக்கு உரமேற்றுபவையாக அமையும். இவர்களுக்குள் தாங்கள் படைக்கின்ற படைப்புக்குள் அடக்கப்பட்டுள்ள விடயம் பற்றிய பெரும் பார்வை நிச்சயம் இருக்கும். இப்போது தேசியத்தலைவர் அவர்களின் கருத்தோடும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கதையோடும் இவ்வகைப் படைப்பாளர்கள் எப்படி ஒன்றுபடுகின்றனர் என்பது புரியும். தலைவர் அவர்கள் கூறுகிறார். (கலை, இலக்கியங்கள்) மாறி வரும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என்று. இப்போது நாம் உதாரணத்திற்கு சீன விடுதலைக்கு முன்னர் அந்த நாட்டிலே தொடர்ந்து மக்களால் நடிக்கப்பட்டுவந்த நாடகம் பற்றிச் சுருக்கமாக நோக்குவோம். அந்த நாடகத்தில் இடம்பெறும் கதை இவ்வாறு அமைகிறது.

சீன விடுதலைக்கு முன்னர் அங்கு பிரபுக்கள் எனப்படும் உயர்வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தனர். அவர்கள் தங்களுக்குக் கீழே வேலை செய்பவர்களை அடிமைகளாகவே நடத்தினர். இவ்வடிமைகளும் அவர்களின் பேச்சுக்கோ, செயலுக்கோ மறுபேச்சோ, எதிர்ப்புணர்வோ தெரிவிக்காதவர்களாக எவ்வித உரிமையும் அற்றவர்களாகவே வாழ்ந்து வந்தனர். இவ்வாறாக வாழ்ந்துவரும் அடிமைகளில் ஓர் பெண்ணை இழுத்து அவளைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தச் சீனப்பிரபு ஒருவர் முயல்கிறார். இதைக் கண்ட அந்த அடிமைப் பெண்ணின் சகோதரன் (அவனும் அடிமையே) பிரபுவின் முயற்சியைத் தடுக்க ஓடுகிறான். இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தப் பிரபுவினால் சகோதரன் கொலை செய்யப்படுகிறான். அதன் பின்னர் அப்பெண் பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்படுகிறாள். இப்படியாகச் சீன விடுதலைக்கு முற்பட்ட காலத்திலே இந்த நாடகம் நடிக்கப்பட்டு வந்தது. (இதன் பின்னர்) இந்த நாடகமானது சீன விடுதலைக்குப் பின்னர் ஏற்பட்ட கலாச்சாரப் புரட்சியினால் கீழ்வருமாறு மாற்றியமைக்கப்பட்டது. அதாவது பாலியல் வல்லுறவு முயற்சியில் ஈடுபட்ட பிரபுவோடு அந்த அடிமைச் சகோதரர்கள் இருவரும் சண்டை போடுகின்றனர். பிரபு தாக்குதலுக்கு உள்ளாகிறார். ஈற்றில் அந்தப் பிரபுவின் ஆட்களின் தாக்குதலால் இருவருமே இறக்கின்றனர். ஆனால் பிரபுவால் பாலியல் வல்லுறவில் ஈடுபடமுடியவில்லை. அவர்கள் தடுத்தே விட்டார்கள். ஆனால் அம்முயற்சியில் இறந்து போனார்கள்.

இதிலிருந்து மிகப்பெரும் மாற்றங்களை கலை, இலக்கியப் படைப்புகளால் செய்துவிட முடியும் என விளங்குகிறதல்லவா? அதாவது சீன விடுதலைக்கு முன்னர் இந்த நாடகத்தைப் பார்க்கும் அடிமைகள் மனதில் என்ன தோன்றியிருக்கும். பிரபுக்கள் எதைச் செய்தாலும் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எதிர்க்கக்கூடாது, அவ்வாறு எதிர்த்தால் எதிர்ப்பவர்கள் கொல்லப்படுவதோடு, அவர்கள் எதைச் செய்ய நினைத்தார்களோ அதை நிச்சயம் செய்தே முடிப்பார்கள் என்று எண்ணத் தோன்றியிருக்கும். இதனால் அவர்கள் எந்த எதிர்ப்புமே காட்டாமல் இருந்திருப்பர். பார்த்தீர்களா ஒரு கலைப்படைப்பு மூலம் பிரபுக்கள் 'தங்களை எதிர்த்தால் என்ன நடக்கும்' என்பதைக் கூறி அடிமைகளைக் கட்டுப்படுத்தி இருக்கிறார்கள்.

இதே நாடகத்தை சீன விடுதலையின் பின் மேலே குறிப்பிட்டது போன்று மாற்றி நடிக்க அதைப் பார்க்கும் யாவர்க்கும் என்ன தோன்றும். யாராலும் சரி எம்மைக் கொடுமைப்படுத்த முயன்றால் அவர்களைக் கொல்வோம். அல்லது அவர்களுடன் போராடி நாம் வீழ்வோம். இப்படி நிச்சயம் தோன்றும். எனவே முன் குறிப்பிட்ட முதலாவது வகைப் படைப்பாளியாலேயே இந்த நாடகம் மாற்றி அமைக்கப் பட்டிருக்கும் என்பதைச் சொல்லித்தான் விளங்கவேண்டும் என்றில்லை. இப்படியான மாற்றங்களைச் செய்வதோடு சமூக விழிப்புணர்வு, சீரமைப்பு, வாழ்க்கைக்கான வழிகள் என்பவற்றை இந்தப் படைப்பாளர்கள் படைப்பு மூலம் தெரிவிப்பர்.

எனவே மேற்சொன்ன நாடகத்தை மாற்றி எப்படியெல்லாம் மக்களுக்குப் புதியதொரு மாற்றத்தை ஓர் கலை, இலக்கியப் படைப்பு ஏற்படுத்தியதோ அப்படியெல்லாம் மாற்றம் அமைக்கக் கலை இலக்கியப் படைப்பாளர்கள் பாடுபடவேண்டும்.

இனி நாம் இரண்டாவதாகக் குறிப்பிட்ட கேளிக்கையாளர்கள் பற்றிப் பார்ப்போம். கேளிக்கையாளர்கள் என்றதுமே இவர்கள் தேவையற்ற கலை இலக்கியப் படைப்பை உருவாக்குபவர்கள் என்றும், இவர்களே தங்களின் படைப்புகள் மூலம் சமூகத்தைச் சீரழிக்கவும், சமூகத்தில் தேவையற்ற மூட நம்பிக்கைகளைப் புகுத்தவும் முற்படுபவர்கள் என்றும் புரிகிறது தானே.

இவர்களின் படைப்புக்கள் பற்றி நாம் பார்ப்போமானால் இவர்களின் படைப்புகளில் வெறும் கற்பனாவாதங்களும், அலங்காரங்களும், சக மனிதர்களை ஏமாற்றும் கருத்துக்களும், மூட நம்பிக்கைகளும் புதைந்து கிடக்கும். அதாவது இப்படைப்புக்கள் வெறும் பொழுதுபோக்குக்காக வெறும் இரசனைக்காக உருவாக்கப்பட்டிருக்கும். இப்படைப்புகளை அனுபவிக்கும் எதுவுமே அறியாத மக்கள் என்ன செய்வார்கள். இதில் எதைச் சரியென்று கூறுகிறார்களோ அதையே பின்பற்றுவார்கள். ஏன் முதலாவது வகைப் படைப்பாளர்கள் தானே நல்ல படைப்புக்களை உருவாக்கி நல்ல பாதைக்கு மக்களை இட்டுச் செல்கிறார்களே. இந்த இடத்தில் இவர்களால் என்னதான் முடியும் என்ற கேள்வி எழலாம். அதாவது இப்படைப்புக்களின் இயல்புகள் பற்றி மேலே கூறப்பட்டவற்றுள் வெறும் அலங்காரமும் ஒன்று. இப்படிப்பட்ட அலங்காரமானது சமூக விழிப்புணர்வு, படிப்பறிவு என்பன குறைந்த யாவரையும் தன்பால் இழுத்துக்கொள்கிறது. இவ்வாறு இழுக்கப்பட்டு அப்படைப்புக்களில் மூழ்கிவிடுபவர்கள், இந்தப் படைப்புக்களில் கூறப்பட்ட கருத்துக்களை நேசிப்பவர்களாக, அவற்றைப் பின்பற்றுபவர்களாக இருக்கின்றனர். ஆனால் சிந்தனை வளர்ச்சியடைந்தவர்களோ அதற்குள் அகப்படாமல் தப்பி விடுகின்றனர். இவ்வாறு தப்பி விடுபவர்களிடையே இருக்கின்ற கலை, இலக்கியப் படைப்பாளிகளே கேளிக்கையாளர்களின் படைப்புக்கள் எனும் கடலில் மூழ்கிய மக்களைக் காப்பாற்றும் தோணிகளாவார். இப்படித் தோணிகளாக இருப்பவர்கள் நிச்சயம் மனச் சுத்தியுடன் தங்கள் படைப்புக்களை மேற்கொள்ள வேண்டும். இவர்களால்தான் பெரும் புரட்சிகளை ஏற்படுத்திச் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

இப்படிப்பட்ட (கேளிக்கையாளரின்) படைப்புக்களின் ஆட்சியானது இப்போது பல இடங்களில் வெற்றிகரமாக இடம்பெறுகிறது. கொலரா கிருமியின் தாக்கங்களால் மிகவும் பரந்தளவில் கொலரா நோய் பரவியது நாம் அறிந்ததே. எனினும் இடைவிடாத தொடர்ச்சியான கருத்தூட்டல், இது பற்றிய விழிப்புணர்வு, எதிர் நடவடிக்கைகள் என இதற்கு உரியவர்கள் செயலில் இறங்கியமையால் இந்நோய் கட்டுப் படுத்தப்பட்டது.


இது போன்றே இப்படிப்பட்ட படைப்புக்களின் தாக்கங்களை சிதறடிக்க நல்ல படைப்பாளர்கள் பூரணமாக முயலவேண்டும். இவற்றால் ஏற்படும் சமூகச் சீரழிவுகளையும், தீமை ஏற்படுவதையும் தங்களின் படைப்புகளூடாக நிச்சயம் சொல்ல முடியும்.

வாழ்க்கை எண்ணற்ற பரிமாணங்களைக் கொண்டிருப்பதால் அதை எளிதில் கண்டு சொல்ல முடியாது. உன்னதமான கலை, இலக்கிய சாராம்சங்களை தொகுப்பதன் மூலம் தொகுக்கப்படும் அந்தப் படைப்புக்கள் நம்மை உண்மையை நோக்கி இட்டுச் செல்லுகின்றன. அவை ஒரு தெளிவை ஏற்படுத்துகின்றன.

கேளிக்கையாளர்களின் படைப்புக்கள் என நாம் பார்த்ததற்கு ஓர் உதாரணக் கதை ஒன்று பார்த்தால் அது எப்படி இருக்கிறது எனப் புரியுமல்லவா?

அந்த ஊரிலே ஓர் பெரிய புளியமரம். அது அவ்வூரின் மக்கள் பயன்பாட்டுப் பாதையில் இருந்து சற்றுத் தள்ளிச் சிறிய காட்டுப் பகுதியில் இருந்தது. அந்தப் புளியமரத்தில் ஒரு பேய் உலாவி வருவதாக அவ்வூர் மக்கள் பேசிக்கொண்டார்கள். அதற்குக் காரணம் இருந்தது. அவ்வூர் இளைஞன் ஒருவன் அந்தப் புளிய மரத்திலேதானாம் ஏதோ ஓர் பிரச்சினைக்காகத் தூக்கிட்டுக் கொண்டானாம். அவன்தான் பேயாக உலவுகிறானாம். அதன் பின்பு கூட அந்த மரத்தடியால் ஓரிரவு அவ்வூர் இளைஞன் ஒருவன் சென்றபோது அவ் விடத்தில் வைத்துத் திடீரெனத் தாக்கப் பட்டு மயங்கி விட்டான். சிறிது நேரம் கழித்து அவ்விளைஞன் மயக்கம் தெளிந்து எழுந்து அவ்வூரில் இந்த 'செய்தியைக் கூறி' என் கண்ணுக்கே யாரடித்தது எனத் தெரியவில்லை, இது உண்மையில் பேய்தான்' எனக்கூற அந்த ஊரார் யாவரும் அதை நம்பி அந்த இடத்தைப் பார்ப்பதுகூட இல்லை. எனவே பேயுலாவும் இடம் சாதாரண மனிதர்க்குத் தேவையற்ற இடம், அவ்விடங்களை இம்மக்கள் போன்றே தவிர்த்தல் வேண்டும் என அக்கதை முடிகிறது. இந்தக் கதையானது நல்ல படைப்பாளனால் உருவாகும் விதத்தைப் பாருங்கள்.

அந்த வழியால் இளைஞன் ஒருவன் தாக்கப்பட்டதற்கு அடுத்த நாள் ஓரளவு மாலையே அவ்வூரில் ஓர் இளைஞன் இதை என்னவென அறியவேண்டுமென எண்ணிப் புளியமரத்தடிக்கு அருகிலுள்ள சிறு பற்றைக்குள் பதுங்கி இருக்கிறான். இருளில் அவ் விடம் மூழ்கிறது. இப்போது தாடிக்காரர் இருவர் வந்து புளிய மரப்பொந்து ஒன்றில் தாம் பதுக்கி வைத்த பெறுமதியான களவுப்பொருட்களில் ஒரு தொகுதியை எடுக்கின்றனர். எடுத்தபின் புளிய மரத்தடியைச் சுற்றிப் பார்த்துவிட்டு 'நாளையிரவு மிகுதியை எடுத்து விற்போம்' எனக் கூறிச் செல்கின்றனர். இப்போது அவ்விளைஞனுக்கு எது பேயெனப் புரியவே, மறுநாள் பலபேருடன் ஓரிடத்தில் மறைந்து இருந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விருவரையும் கைது செய்கிறான். அவர்கள் இருவரும் இளைஞனை தாங்களே தாக்கியதாக ஒப்புக் கொள்கின்றனர்.

இதன் மூலம் புரிவது என்ன? கேளிக்கையாளர்களின் படைப்புக்களின் தன்மைகளில் ஒன்றானது மூட நம்பிக்கையை ஏற்படுத்திவிடல் என்பது இதற்குப் பொருந்துகிறதல்லவா?

அதே கதையை மக்களில் அக்கறை கொண்ட படைப்பாளன் எப்படி ஆக்குகிறான் என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும். இது போன்ற தேவையற்ற மூட நம்பிக்கைகளை அடியோடு களைந்தெறிய வேண்டும். நிச்சயம் ஓர் உண்மையை ஒழுங்காக ஆராய வேண்டும். வீணான முடிவுகளை அவசரப்பட்டு எடுத்து எம்மை நாமே அழிவுக்கு இட்டுச் செல்லாமல் படைப்பாளன் படைப்புக்களை ஆக்கவேண்டும்.

ஆரம்பத்தில் பேயுள்ள இடத்தில் மனிதர்க்கு என்ன வேலை எனக் குறிப்பிட்டுக் கதை முடித்த படைப்பாளன் விரிந்த பார்வையற்ற படைப்பாளன். வெறும் கற்பனாவாதத்திற்கு மட்டும் முன்னுரிமை கொடுத்து மக்களிடையே பய உணர்வை ஏற்படுத்தி ஓர் ஏமாற்றுப் படைப்பை மேற்கொண்டுள்ளான். இதன் மூலம் அவன் வெற்றி கண்டான். மக்களும் அதை உண்மையென ஏற்றனர். இருந்தாலும் கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள் தான் என்பது போல மக்கள் நேயங்கொண்ட ஒரு படைப்பாளன் அதை உடைத்தெறிந்து புதிய படைப்பை உருவாக்கி மக்களை எழுச்சிகொள்ள வைத்துவிட்டான்.

ஒரு மனிதனுக்கு தான் வாழ்கின்ற முறையிலேயே அவன் வாழ்வெனும் புத்தகத்தின் சகல பக்கங்களையும் அறிந்து விடுகின்றான் எனில் அவனுக்கு இந்தக் கலை, இலக்கியங்கள் ஒருபோதும் தேவையில்லை. ஆனால் வாழ்வு பற்றிய முழுமையான தெளிவு யாவருக்கும் இல்லை. இந்தத் தெளிவுகளை ஏற்படுத்துபவையே கலை, இலக்கியங்கள் ஆகும். வேறு எவற்றாலும் மனிதன் ஏனைய தானறியாத வாழ்வின் பக்கங்களை முழுமையாக அறியமுடியாது. இதுவே உண்மை. அனுபவத்தின் வாயிலாக அறியலாம்தானே எனச் சொன்னாலும் அது தவறானதே. ஏனெனில் ஒரு மனிதனுக்கு வாழ்வியல் பற்றி எண்ணற்ற அனுபவங்கள் ஏற்படுவதில்லை. ஆனால் கலை இலக்கியங்கள் பல வாழ்வியல் அனுபவங்களைக் கூறுகின்றன. இவை மூலம் மனிதன் வாழ்வியலின் ஏனைய பக்கங்களைப் புரட்டிப் பார்க்க முடிகிறது. இவ்வாறு புரட்டிப் பார்கின்றபோதுதான் கேளிக்கையாளர்களின் படைப்புக்களையும் அவன் காண நேரிடுகிறது. இதன்போது அவன் அதன் அலங்காரங்களில் தன் மனதை இழக்கிறான். கற்பனை உணர்வுகளை நம்புகிறான். இப்படியான மனிதரை விடுவிக்கவே உண்மையான கலை, இலக்கியப் படைப்பாளி உழைக்க வேண்டும்.

இனி நாம் மூன்றாவது வகையைச் சேர்ந்த படைப்பாளியைப் பற்றிச் சுருக்கமாக நோக்குவோம். அதாவது சிறந்த கலை இலக்கியப் படைப்பை உருவாக்க முடியாவிட்டாலும் ஆத்மார்த்தமானதைச் செய்கின்ற படைப்பாளன். இவர்களின் படைப்புக்களில் உண்மைகள் இருக்கும். இவர்களின் படைப்புக்களில் படைப்பினை மெருகூட்டக் கற்பனாவாதங்களோ, அலங்காரங்களோ இருக்கா, அதாவது தங்களுக்குத் தெரிந்த உண்மையை அப்படியே படைப்பாக மாற்றுவார்கள். இருப்பினும் முதலாவது வகைப் படைப்பாளர்களின் படைப்புத் தரத்தை இவை எட்டா. எனினும் இவர்களாலும் புதிய சமூக மாற்றங்களைக் கொண்டுவர முடியும். இவர்கள் தங்களின் மனச்சாட்சிக்கு அமைய எழுதுவார்கள். இவர்களின் படைப்புக்கள் சாதாரண மக்களிடையே நன்றாக உலவி வரும். இப்படியான படைப்பாளர்கள் யாவரும் சமூக வளர்ச்சிக்குப் பாடுபட்டால் புதிய சமுதாயம் உருவாகும்.

இவ்வாறாக கலை, இலக்கியம் படைக்கும் படைப்பாளர்கள் மூன்று வகையாக இருக்கிறார்கள். இதைவிட வளர்ச்சி காணாமல் ஆரம்பப் படைப்பாளர்களும் இருக்கிறார்கள். இவர்கள் கூட இந்த மூவகைப் படைப்பாளருள் ஏதோ ஒன்றுக்குள் ஆரம்பத்திலேயே சேர்ந்து விடுவர். ஆனால் ஆரம்பத்திலேயே ஒரு படைப்பாளன் உண்மையைப் படைக்கப் பழகுதல் வேண்டும். அவனே உண்மையானவன்.


இனி நாம் இலக்கியத்தின் ஏனைய தன்மைகளையும் அதன் முக்கியத்துவங்கள் பற்றியும் வேறு எப்படியெல்லாம் அது அமையலாம் என்பது பற்றியும் பார்ப்போம்.


இலக்கியத்தின் முக்கியத்துவம் பற்றிப் பார்க்கும்போது ஒரு தேசிய இனத்திற்கு இருக்கவேண்டிய பண்புகளில் தனக்கேயான கலாச்சாரமும் ஒன்று. இந்தக் கலாச்சாரத்தினுள் கலைப் படைப்புக்கள் அடங்குகின்றன. அதாவது ஒரு இனம் தனக்கேயுரிய கலைப் பண்புகளையும் பெற்றிருக்கவேண்டும். இவ்வாறு தனக்கேயுரிய கலைப்பண்புகள் அற்ற இனமானது ஒரு தனித் தேசிய இனமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பாரம்பரிய நிலம், தனித்துவமான மொழி, தனக்குரிய வரலாறு, தனியான பொருளாதாரம், தனக்குரிய கலாசாரம் இவையே தேசிய இனமொன்றிற்குரிய அம்சங்கள். இதில் கலாச்சாரத்தினுள்தான் கலை இலக்கியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.


பார்த்தீர்களா இந்தக் கலை இலக்கியம் இல்லாவிட்டால் கூட ஒரு இனத்தை தனி இனமாகப் பார்க்கமாட்டார்கள். எனவே நாம் தொடர்ந்து இந்தக் கலை, இலக்கியங்களைப் பாதுகாக்க வேண்டும். ஒரு இனத்தின் கலை, இலக்கியப் படைப்புகளுக்குள் ஏனைய தேவையற்ற படைப்புக்கள் புகுந்து அதன் சிறப்பை, அதன் தன்மையை சீரழித்து விடக்கூடாது. இதைப் பார்ப்பது ஒவ்வொரு படைப்பாளரின் தலையாய கடமையாகும்.

கலை, இலக்கியம் எனும்போது நாடகம், இசை, பாடல், கதை, கவிதை, நாவல், நடனம், ஓவியம், ஏனைய கூத்துக்கள் என பல்வகையாகக் கூறிக்கொண்டே போகலாம்.

கலை இலக்கியத்தின் இன்னுமோர் முக்கியத்துவத்தைப் பாருங்கள். ஒரு காலத்தைப் பதிவு செய்வதில் இவை முக்கிய பங்கு வகிக்கின்றன. இதனால் தான் இவற்றை 'காலத்தின் கண்ணாடி' எனக் கூறுகின்றனர். எமது தமிழினம் நல்லதோர் இனமாக வாழ்ந்து இருக்கிறது. ஆனால் அதைச் சிலர் பின்னர் ஆக்கிரமித்து விட்டனர். பின்னர் இது மீண்டும் தலை நிமிர்ந்து விட்டது. இதற்குரிய காரணம் என்ன? அக்காலத்தில் படைக்கப்பட்ட இலக்கியங்கள் எமது இன வரலாற்றைக் கூறியதை நாம் அறிந்துகொண்டதுதான். இவ்வாறு அறியாமல் நாம் போரினைத் தொடக்கி அதை நகர்த்த முடியாது. ஏனெனில் இந்நாடு முன்னர் யாரால் ஆளப்பட்டது எனத் தெரியாமல் இது எங்களுடையதுதான் எனக் கூறுதல் அர்த்தமற்றதாகும். ஆனால் வரலாறுகள் இதற்குச் சான்று பகர்கின்றன. வரலாறு எனும்போது அதுகூட ஓர் உண்மையான படைப்பே, சிற்பங்கள், ஓவியங்கள் எல்லாம் கலைஞனாலேயே படைக்க முடியும். வரலாறு கூட ஒரு தேசத்தின் உண்மைக் கதைகள் அடங்கிய நூலே. இதைக்கூட ஓர் உண்மையான இலக்கியப் படைப்பாளனாலேயே சரியாகத் தொகுக்க முடியும். எனவே தேசிய இனப் பண்புகளை அறிய இலக்கியமே ஓர் வழிகாட்டியாக அமைகிறது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு படைப்பாளனால் பல காரியங்களைச் செய்ய முடியும். தமிழீழப் பாடலொன்றைப் பார்ப்போம். 'நீங்க வேற நாடையா நாங்க வேறு நாடு' எனும் பாடலை படிக்கும்போது யாவர்க்கும் புரிவது என்ன? எமது இனப் பண்புகளிற்கும், சிறீலங்கா நாட்டின் பண்புகளிற்கும் வித்தியாசம் உண்டு எனப் புரியும். இப்பாடலை எழுதிய உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன் அவர்கள் இதை எளிய நடையிலேயே எழுதியுள்ளார்.

ஒரு கலை, இலக்கியமானது சாதாரண மக்களையும் சென்றடையும் வகையில் படைக்கப்படவேண்டும். படிப்பறிவுள்ள ஒரு பகுதியினருக்கு மட்டும் விளங்குகின்ற வகையில் படைக்கப்படும் படைப்புக்கள் கீழ்மையில் சிக்குண்ட மனிதரைத் தட்டி எழுப்பாத படைப்புகளாகும். சாதாரண ஒரு மனிதனிடம் தனக்கே தெரியாமல் உறங்கிக் கிடக்கும் திறமைகளை, செயல்களை ஒரு படைப்பு தட்டி எழுப்புமானால் அது நல்லதொரு படைப்பே. உண்மையான கலை, இலக்கியம் ஒரு கனவன்று, அது சிந்திக்கத் தூண்டும் அதில் ஆழம் இருக்கும்.

இன்னுமோர் விடயம் ஒரு கலை, இலக்கியத்தினைக் கொண்டே அந்தச் சமுதாயத்தின் நிலையை அறியலாம். கேளிக்கையாளரின் படைப்புக்கள் என முன்கூறப்பட்ட படைப்புக்கள் உள்ள சமுதாயம் இப்போதும் கீழ்மையில் சிக்குண்டு கிடக்கிறது எனப் புரியும். உண்மையான அனுபவமுள்ள நல்ல படைப்புக்கள் உள்ள சமுதாயம் வளர்ச்சியடைந்த சமுதாயம் எனப் புரியும்.

கலை, இலக்கியங்களை யாவரும் அனுபவிப்பதால் யாவர்க்கும் பொதுவானதாக அதைக் கொள்ளவேண்டும். உலகில் எத்தனை மொழி, உயர்வு, தாழ்வு, பொருள் முறைகள் என பிரிவினை இருந்தாலும் படைப்பு எனும் போது மனிதகுலம் ஒன்றுதான். மனித ஏக்கங்கள், சுக துக்கங்கள், இலட்சியங்கள், அனுபவங்கள் என்பவற்றைப் படைப்புக்கள் கூறுவதால் எந்த இன மனிதர்கள் அதை அனுபவித்தாலும் அதனால் ஒரு பயனை அவர்கள் அடையவேண்டும். இதனாலேயே கலை, இலக்கியங்கள் பொதுவானவையாகக் கொள்ளப்படுகின்றன எனக் கொள்கிறோம். இதைவிட ஒவ்வொரு இனத்திற்கும் வெவ்வேறான கலைகள் இருந்தாற்கூட அவைகளும் ஏதோ ஒவ்வொரு செய்தியையோ அனுபவத்தையோதான் கூறுகின்றன அல்லது இரசனையைத் தருகின்றன. இதனாலேயே பொதுவானது எனக் கொள்கிறோம்.

இப்படி நாம் பெருமையாகப் பேசிக்கொள்கிறோமே கலை இலக்கியங்கள் இவை இப்போது எதற்கெல்லாம் பயன்படுத்தப்படுகின்றன பாருங்கள்- இப்போது கலை, இலக்கியங்களை வைத்தே பலர் உழைக்கின்றார்கள். இப்போதெல்லாம் வணிக நோக்கம், புகழ், இலாபம்தேடல் போன்றவற்றால் கலை இலக்கியங்கள் மிகவும் சிதலமடையும் நிலைக்குச் சென்றுள்ளன. கலை, இலக்கியங்களை மூலாதாரமாக வைத்து அவற்றில் வெறும் இரசனையை மட்டும் தரும் படைப்புக்களைச் சேர்த்தும், பாலுணர்வுகளை தூண்டும் செய்திகளைச் சேர்த்தும், படைப்புக்களை அலங்கரித்து அவை வெளியிடப்படுகின்றன. பலருக்கு அவை நல்லனவெனப் பட்டாலும், எத்தனை இரசனைகள் அதில் இருந்தாலும் அவற்றை அனுபவிக்கும் மனிதர்கள் மறைமுகமாகச் சீரழிக்கின்றனர் என்பதே உண்மை. இந்த அழிவுப் பாதைகள் அவற்றை அனுபவிப்பவர்களுக்கே தெரியாமல் போகலாம். ஆனால் பலாபலனைப் பாராமல் உழைக்கின்ற படைப்பாளி ஒருவன் இந்தச் சீரழிவுகளைக் கூட தன்னுடைய படைப்பு மூலம் மக்களுக்குச் சொல்லி மக்கள் மத்தியில் ஓர் விழிப்புணர்வினை ஏற்படுத்தலாம். இந்த விடயங்கள் யாவையும் உண்மையில் மனச்சாட்சியுள்ள படைப்பாளர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். இதை ஏனோ, தானோ என்று ஒதுக்கி வைக்கின்ற படைப்பாளர்கள் கூட சமூகத்தைச் சீரழிக்கும் கிருமிகள் ஆவார்.

இதைவிட குடும்பப் பிரச்சினைகளை, சாதிப் பிரச்சனைகளை, ஏற்றத் தாழ்வுகளை எல்லாம் ஒரு படைப்பாளியாலேதான் நிச்சயம் நீக்க முடியும். உண்மையில் சாதிப் பிரச்சினைகளை நீக்கி சமத்துவமான சமுதாயத்தை உருவாக்க ஒரு படைப்பாளியாலேதான் முடியும். சாதிப் பிரிவினை பார்க்கின்றவர்கள் ஏதோ ஓர் சிந்தனை வளர்ச்சி குன்றியவர்களே. இவர்களுடைய இந்தப் போக்குகளை கலை, இலக்கியப் படைப்புக்கள் மூலம் நிச்சயம் கட்டுப்படுத்தலாம்.

கலை இலக்கியத்தின் பெருமைகளையும் அவற்றைப் படைப்பவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் எப்படிப்பட்ட கலை, இலக்கியப் படைப்பாளர்கள் எல்லாம் உலாவுகிறார்கள் என்பதையும் பார்த்தோம். எமது தமிழீழப் படைப்பாளிகள் மட்டுமல்லர் எந்தப் படைப்பாளியும் இதில் கூறப்பட்டது போன்றே ஒழுகி உலகை நல்வழிப்படுத்துதல் வேண்டும். எமது போராட்டத்தின் உண்மைகள் சரியாகக் கூறப்படவேண்டும். அந்தந்தக் காலத்தில் எவ்வெப் படைப்புக்கள் தேவையாக இருக்கின்றனவோ அவற்றையே எம்மீழப் படைப்பாளர்கள் செய்ய வேண்டும். நாம் பார்த்த நல்ல படைப்புக்கள் போன்று ஈழத்தில் படைப்புக்கள் உருவாகட்டும். இதனால் உருவாகப்போகும் ஈழம் மேலும் மிளிரட்டும். உருவாகும் இந்தத் தமிழீழத்தின் வளர்ச்சிக்குத் தமிழீழப் படைப்பாளர்கள் எல்லாம் தூண்களாக நின்று செயற்பட வேண்டும். அதன் மூலமே ஈழமெனும் வீட்டை நாம் சிறப்பாகக் கட்ட முடியும். நாம் பார்த்த கருத்துக்கள் பொதுவானவை எனினும் படைப்புச் சம்மந்தமான தெளிவை யாவர்க்கும் தந்திருக்கும். அப்படி நல் படைப்புக்களைத் தமிழீழத்தில் உருவாக்குவோம். அதற்காக ஒன்றுபடுவோம்.


> “கலை, இலக்கியங்களை யாவரும் அனுபவிப்பதால் யாவர்க்கும் பொதுவானதாக அதைக் கொள்ளவேண்டும். உலகில் எத்தனை மொழி, உயர்வு, தாழ்வு, பொருள் முறைகள் என பிரிவினை இருந்தாலும் படைப்பு எனும் போது மனிதகுலம் ஒன்றுதான். மனித ஏக்கங்கள், சுக துக்கங்கள், இலட்சியங்கள், அனுபவங்கள் என்பவற்றைப் படைப்புக்கள் கூறுவதால் எந்த இன மனிதர்கள் அதை அனுபவித்தாலும் அதனால் ஒரு பயனை அவர்கள் அடையவேண்டும். இதனாலேயே கலை, இலக்கியங்கள் பொதுவானவையாகக் கொள்ளப் படுகின்றன எனக் கொள்கிறோம். இதைவிட ஒவ்வொரு இனத்திற்கும் வெவ்வேறான கலைகள் இருந்தாற்கூட அவைகளும் ஏதோ ஒவ்வொரு செய்தியையோ அனுபவத்தையோ தான் கூறுகின்றன அல்லது இரசனையைத் தருகின்றன. இதனாலேயே பொதுவானது எனக் கொள்கிறோம்”

போராளி யோ. புரட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவரோகணம்



பிரிவு ஏக்கம், வேதனை, சோகம், நெருஞ்சி முட்களான கடந்தகால நினைவுகள்....

எட்டு மிக நீண்ட வருடங்களின் அனுபவங்கள் இவை.

இதோ-

என் சொந்த மண்ணில் காலடி வைக்கின்ற இந்த நிமிடத்தில் எனக்குள்ளே உருவாகின்ற உணர்ச்சிக்குவியல்களை - இதே உணர்ச்சிப் பரப்புக்குள் உலாவர நேர்ந்தவர்கள் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

புளியங்குளம்... கனகராயன்குளம்... மாங்குளம்... முறிகண்டி.

முறிகண்டியானுடைய வாசலில் மினிபஸ் நின்றது.

"பதினைஞ்சு நிமிஷத்துக்குள்ளை எல்லாரும் வந்திடுங்கோ... அஞ்சு மணிக்கு முன்னம் முகமாலை தாண்டட வேணும்...."

இது சாரதியின் கண்டிப்பான வேண்டுகோள்.

இந்த மண்ணில் நிகழ்ந்த - நிகழ்ந்துகொண்டிருக்கிற - அத்தனை மாற்றங்களையும் உள்வாங்கியபடி, தான் மட்டும் எதுவித மாற்றமும் காட்டாமல் A9 சாலையில் வீற்றிருக்கும் முறிகண்டியான்...

சுவாலை பரப்பி எரிகின்ற கற்பூர தீபம்...

தேங்காய்ச் சிதறல்கள்...

முண்டியடிக்கின்ற பக்தர் கூட்டம்...

மனசுக்குள் பரவச சிலிர்ப்பு.

இந்த வாசலில் இனி ஒருதரம் இப்படி நிற்பேன் என்பதை அன்று - துயரம் தோய்ந்த அந்த நாளில் - துளியேனும் நினைத்திருப்பேனா?

அல்லது, இது பற்றிய நினைப்புக்கு அன்று மனசில்தான் இடமேது?

**அஜந்தி**

கண்ணீருடனும் கனத்துப்போன இதயங்களுடனும் ஊர்பிரிந்து நடந்த பல்லாயிரம் என் மக்களில் நானும் ஒரு அங்கமாய்...

வீட்டு யன்னல் வழியே சுகமான காற்றைத் தினம் தினம் எமக்கு அன்பளிப்புச் செய்த அந்த வேப்பமரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் மலர்களால் தினமும் காலை வணக்கம் சொல்லிய செவ்வரத்தைச் செடிகள் - ஓய்வாகச் சாய்ந்திருந்து பத்திரிகையும் புத்தகங்களும் வாசிக்கின்ற நிம்மதி நிறைந்த மகிழ்ச்சியைத் தந்த வீட்டின் முன் விறாந்தை - இன்னும் ... இன்னும்... எமது வாழ்வுடன் ஒன்றிக்கலந்துவிட்ட அத்தனையையும் விட்டு விட்டு...

பசி, தாகம், களைப்பு, சோர்வு என்பவற்றின் கைதிகளாய், எதிர்காலம் பற்றிய எதுவித இலக்குமின்றி அந்த நீண்ட நடைப் பயணத்தில் சென்றதை இந்த நிமிடம் நினைக்கையிலும், அடி வயிற்றிலிருந்து தீச்சுவாலை ஒன்று கிளம்பி, மேலே.. மேலே... நெஞ்சினுள் பரவி, உயிரை உருக்கி - ஆன்மாவையும் தீண்டி இம்சை செய்கிறதே...

தாயகம் நோக்கிய பயணத்தில் இந்த இம்சை, இந்தச் சோதனைமிக்க வேதனை என்பவை தவிர்க்க முடியாத ஒரு நியதியாக இருந்திருக்குமோ?

இருந்தது.

எதிரில் தென்பட்ட ஒவ்வொரு முகத்தையும் உற்றுப்பார்க்கிறேன்.

நிம்மதியும் சந்தோஷமும் தெரிந்தன. ஆனால் அவற்றையும் மீறி - 'இந்த நிம்மதியும் சந்தோஷமும் நீடிக்க வேண்டுமே'... என்பது போன்ற விசனமும் அந்த முகங்களில் தெரிவதாய் எனக்குத் தோன்றியது.

நெஞ்சில் பட்ட காயமும் வலியும் இன்னும் ஆறாதது காரணமாயிருக்கலாம்.

பஸ் கிளிநொச்சியைத் தாண்டுகையில், வீதியோரப் பெயர்ப்பலகைகளின் மீது பார்வை பதிய -

'அறிவமுது பொத்தக நிலையம்', 'இசைவிழி வாணிபம்', 'தமிழ்நம்பி வெதுப்பகம்' என்பன போன்ற அழகான அறிவிப்புக்கள் மனசை நிறைக்கின்றன.

அழகழகாய் ஆடைகள் அணிந்து நிற்கும் தூயதமிழ்.

'அலைவற்றிக் கடலது சாகுமா... தமிழ்ப் புலிப்படை தோற்றிடக்கூடுமா...' என்ற யோகியின் பாடல்வரி காற்றோடு வந்தது மனசை வருடியது.

இப்படி எத்தனை பாடல்கள்.

வயது வித்தியாசமின்றி அனைவரையும் மூணுமுணுக்க வைத்து விடுதலை உணர்வுக்கு உரம் சேர்த்த கானங்கள்.

இப்போது கூட ஞாபகமிருக்கிறது.

பக்கத்து வீட்டுச் சின்னப்பையன் குட்டி இந்தப் பாட்டெல்லாம் அழகாய்ப் பாடுவான்.

"நீ பெரிசாய் வளர்ந்து படிச்சு என்னவாய் வருவாய்?"
என்று கேட்டால்.

"புலி மாமாக்களோடை வேலை செய்வன்" பளிச் என்று பதில் சொல்வான்.

விடுதலை என்பதன் அர்த்தம் தெரியாத அந்த ஐந்து வயசிலேயே அவன் மனசில் இப்படியொரு எண்ணம் விதைக்கப்பட்டிருந்தது எங்களுக்கு ஆச்சரியமாயும் கூடவே பெருமையாயும் இருக்கும்.

அவன் இப்பொழுது வளர்ந்து பெரிய பையனாய் இருப்பான்.

என்னை ஞாபகம் வைத்திருப்பானா?

இன்னும் இரண்டரை மணி நேரத்தில் எல்லோரையும் சந்திக்கப்போகிறேன்.

பதட்டமும் சந்தோஷப் பரபரப்புமாய் மனம் துள்ளுகிறது.

பரந்தன் தாண்டித் தூரம் கடந்துகொண்டிருந்தபோது ஆனையிறவுத் தடைமுகாம் நினைவுக்கு வருகிறது.

வெளியே எட்டிப் பார்க்கிறேன். விரிந்து பரந்து கிடந்தது - கடலின் நீலம் சாட்சி சொல்ல, எனக்குள் கரைந்து போகிறேன்.

எத்தனை விலை கொடுத்திருப்பார்கள் என் பிள்ளைகள்?

அவர்கள் புதையுண்டு விதையாகிப்போன உப்பு நிலம் தழுவிவந்த காற்று என்னை வருடி நலம் விசாரிப்பதாய் உணர்கையில் கண்கள் பனிக்கின்றன.

"நன்றி என் செல்வங்களே நன்றி"

இயக்கச்சி... பளை.

பளை தென்னந்தோட்டத்துக்குப் பெயர்போன இடம். ஒருவர் பளையில் தென்னந்தோட்டம் வைத்திருந்தால் அந்தக் காலத்தில் அவர் பெரிய பணக்காரர்.

கண்டி வீதியின் இரு புறமும் ஓங்கி நின்று சிறகசைக்கும் தென்னைகள் தம்மை வரவேற்று வாழ்த்துவதாய் போவோர் வருவோரை உணரச்செய்யும். அது ஒரு இதமான அனுபவம்.

ஆர்வம் மேலிட இருபக்கமும் கண்களை ஓடவிடுகிறேன்.

பல நூற்றுக்கணக்கான தென்னைகள் தலையிழந்து சிறகொடிந்து சமாதிநிலை அடைந்திருந்தன.

வரவேற்புமில்லை ... வாழ்த்துமில்லை.

நெஞ்சுக்குள் வலி.

அழித்தவனை மனசு தூற்றிச் சபிக்கிறது.

நகர்ப்பகுதியில் பளை களைகட்டியிருந்தது.

நவீன பாணியிலமைந்த வியாபார நிலையங்கள் பல வண்ணம் காட்டின.

தென்னிந்திய சினிமாக் கதாநாயகர்கள் அஜித்தும் விஜய்யும் 'அம்பாள் கொமினிக்கேசன்', 'நிர்மல் கொமினிக்கேசன்' என்ற பெயர்ப்பலகைகளில் பெரிதாய் இருந்தது 'போன்' பேசிக்கொண்டிருந்தார்கள்.

'தொலைத் தொடர்பு நிலையம்' என்ற அழகிய தமிழ்ப்பதம் இருக்கையில் ஏன் இந்த 'கொமினிக்கேஷன்?'

வீடியோக் கடை ஒன்றின் 'இன்றைய வெளியீடுகள் பிதாமகன், ஆஞ்சநேயா' என்ற வாசகம் ஒரு நிமிடம் பார்வையில் தெறித்து விலகிப் பின்னால் ஓட,

விக்ரமும் அஜித்தும் என்னைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது.

மீண்டும் பழைய நாட்கள் நினைவில் மோதின. நெஞ்சை நெகிழ்த்தும் வாசகங்களுடன் எங்கள் மண்ணின் மைந்தர்களை அஞ்சலிக்கும் சுவரொட்டிகள்.

இந்த மண் தனது விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் வரலாற்றை எங்கும் எதிலும் பிரதிபலிக்கும் வாழ்க்கைமுறை...

இன்று திலீபனும் மாலதியும் எங்காவது ஒரு வீதியோரச் சுவரில் சின்னதாய்த் தெரிந்தார்கள்.

ஊருக்குத் திரும்புகின்ற சந்தோஷம் வலுவிழந்து கொண்டிருப்பது போன்ற உணர்வு.

யுத்தத்தின் சாட்சிகளாய் அதன் அழியாத வடுக்களைச் சுமந்தபடி இடிபாடுகளாய் மாறியிருந்த வீடுகளும் கட்டடங்களும் கொடிகாமம், சாவச்சேரி எனத் தொடர்ந்த பயணத்தில் இம்சை செய்ய -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதடியும் நாவற்குழியும் மனித வாழ்வின் சுவடே இல்லாத பாலைவனங்களாய் வரண்டுபோய்க் கிடந்தன. கைதடிப் பாலத்திலும் நாவற்குழிப் பாலத்திலும் முட்கம்பிகளால் சூழப்பட்ட கூடுகளுக்குள் நின்றபடி ராணுவம் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தது.

செம்மணி வெளி.

கிருஷாந்தி... புதைகுழி... எலும்புக்கூடுகள்... எதையெதை யெல்லாம் இதுவரை பறிகொடுத்துவிட்டோம்...?

இனி..?

தூரத்தில் அந்த வளைவு தெரிகிறது.

'யாழ்ப்பாணம் உங்களை அன்புடன் வரவேற்கிறது'

என அந்த வளைவிலுள்ள வாசகம் எனக்கு மிகவும் பிடித்தமானது.

யாரோ ஒரு மனிதர் எமக்காக அங்கே நின்று எம்மை அன்போடு வரவேற்பதான ஒரு உணர்வுப்பூரிப்பு அந்த வாசகத்தைப் பார்க்கும் ஒவ்வொரு தடவையும் இதமாக இதயத்தை வருடும்.

பஸ் அந்த இடத்தை நெருங்க - வாசகம் தெளிவாய்த் தெரிகிறது.

என் தாய் மண்ணே... நீண்ட பிரிவுக்குப் பின் உன்னிடம் இதோ வருகிறேன். என்னை அன்போடு அணைத்துக்கொள்...

நீ என் சொந்தம்...

நீ என் வாழ்வு...

நீ என் உயிர்...

வாசகம் மீதிருந்த பார்வை கீழே இறங்கி, சாலையில் பதிகிறது.

அங்கே -

அடுக்கப்பட்ட மண்மூடைகளுக்கு நடுவில் - பச்சைத் தொப்பி... குரோதம் கொப்பளிக்கும் இரண்டு கண்கள்... துப்பாக்கி முனை!

அவனா? எனக்கே எனக்கேயான என் தாய் நிலத்தில் என்னை வரவேற்க -

அவனா? தலையிழந்த தென்னைகளும் கற்குவியல்களான வீடுகளும்... மயானமாகிவிட்ட ஊர்களும்... எலும்புக்கூடுகளை அடையாளம் காணவேண்டிய எம் மக்களின் சோகமும்... சீரழிந்துபோன எம் வாழ்க்கையும்.

எல்லாம்.. எல்லாமுமே அவனால் நிகழ்ந்து முடிந்த பின்னும் அவன் எப்படி இங்கே .. இப்படி?

இந்த இடத்தில் நிற்க அவனுக்கு என்ன தகுதி இருக்கிறது?

இதயம் வலிக்கிறது.

அரியாலை... கச்சேரியடி...

யாழ்.பஸ் நிலையம்.

மீண்டும் உயிர் பெற்ற நவீன சந்தை - நடைபாதைக்கடைகள்...

அப்பிள் - திராட்சைகளின் குவியல்கள்...

ஓட்டோ வரிசைகள்.

வாசலில் ஓட்டோ நின்றதும் முதலில் ஓடி வந்தது கமலா - குட்டியின் அம்மா.

"அன்ரி வாங்கோ... எவ்வளவு காலம்...? உங்களைக் காண எவ்வளவு சந்தோஷமாயிருக்கு... நல்லா மெலிஞ்சு போனியள்..."

ஒரே மூச்சில் சொல்லி ஓடிவந்து கட்டிப்பிடித்து பைகளைத் தன் கையில் வாங்கியபடி -

"டேய் குட்டீ... ஓடியாடா... அன்ரி வந்திட்டாவடா" உரத்தக் கூப்பிட்டாள்.

ஓடி வந்தவன் - குட்டியா? நம்ப முடியவில்லை. நன்றாய் வளர்ந்திருந்தான்.

"குட்டி... எப்படியப்பன் இருக்கிறாய்? அன்ரியை ஞாபகம் இருக்கே?" கேட்டேன்.

"ஓ.. அம்மா சொல்லுறவ"

"நல்லா படிக்கிறியே...? எத்தினையாம் வகுப்பு?"

"ஆண்டு எட்டு"

பழைய ஞாபகம்வர, சிரித்தபடி நான் கேட்டேன்.

"அப்ப பெரிசாய் வளர்ந்து படிச்சு என்னவாய் வருவாய்...?"

கமலாவுக்கு ஞாபகம் வந்திருக்க வேண்டும். சிரித்தாள்.

"என்ன.. நான் கேட்டதுக்கு ஒண்டும் சொல்லேல்லை...

சிரித்தான் பதிலேதும் சொல்லவில்லை.

அடிக்கடி தாயைப் பார்ப்பதும் அவசரப்படுவதுமாய் பரபரத்தபடி நின்றான்.

"என்னடா... அவ வந்துநிக்கிறா... நீ ஓடப்பாக்கிறாய்... கொஞ்சநேரம் நில்... அந்த சூட்கேசுகளை எடுத்துக்கொண்டு போய் உள்ளுக்கு வை... அன்ரி களைச்சுப்போனா..."

மளமள வென்று எல்லாவற்றையும் தூக்கி வீட்டின் முன் விறாந்தையில் வைத்தான்.

"நான் போட்டு வாறன்..." தாயிடம் சொல்லி, எனக்கும் சொல்வது போல ஒரு தரம் என்னைப் பார்த்துவிட்டு வெளியே ஓடினான்.

"இவ்வளவு அவசரமாய் எங்கை ஓடுறான்? ரியூஷன் ஏதுமே?"

"இல்லை அன்ரி... இண்டைக்கு ஒக்ரோபர் ரெண்டல்லே... அதுக்காக விசேஷ நிகழ்ச்சியளாம். ஆரோ நடிகை மும்தாஷின்ர பேட்டியும் 'பாபா' படமும் போடுறாங்களாம்... இப்ப சன் ரீவியை அப்படியே எடுத்து இங்கை சக்தி போடுதல்லே... அதுதான் பாக்கிறதுக்கு ஓடுறான். முன் வீட்டில ரீவி இருக்கு... எல்லாப் பிள்ளையளுக்கும் இப்ப இதுதான் பைத்தியம்... முந்தி மாதிரி இல்லை..."


கமலாவின் குரலில் கவலை தெரிந்தது.

"இந்ததாங்கோ அன்ரி திறப்பு... நீங்கள் குளியுங்கோ.... நான் அதுக்கிடேலை தேத்தண்ணி போட்டுக்கொண்டு வாறன்..."

கமலா போக - கதவைத் திறந்து உள்ளே நுழைகிறேன்.

என் வீடு எனக்கே அந்நியமாகிப் போய்விட்டது போன்ற உணர்வொன்று நெஞ்சைத் தாக்க.

துக்கம் பீறிடுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உள்நோக்கியும் வெளிநோக்கியுமாக சித்திரங்களால் ஆன கோட்டுப்பாலம். யாழ்பாணத்தில் கடந்த 2004ம் ஆண்டு 5ம் திகதி புரட்டாதி மாதத்தில் இருந்து ஐப்பசி மாதம் வரை நிகழ்ந்த ஓவியக் காட்சி பற்றிய வரைவு.)

# அகம் புறம்

4.10.2004

## தா.பாலகணேசன்

1.

சிங்களப் பயங்கரவாதத்தினுடைய நிழலை ஊடுருவலை அகத்தை பிம்பத்தை எழுப்பிய காட்சிப் புலம் அது.

மாற்றுச் சிந்தனையும் கலகக் குரலும் கொண்ட தமிழ் கலைஞர்களும் சிங்களக் கலைஞர்களும் இணைந்து 'அகம் புறம்' என ஒரு காட்சி புலத்தை அமைத்தனர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஓவியப் பயில் நிலையிலுள்ள தமிழ்க் கலைஞர்களின் அகம் புறம் ஓவியக் காட்சி முறையில் புத்தாக்க வெளிப்பாட்டு முறையைக் கொண்டிருந்தனர். 'வரலாற்றினுடைய வரலாறு' எனும் பொருளில் அவர்கள் இக் காட்சியகத்தை அமைத்திருந்தனர் சனாதனன் உடன் கண்ணன், தமிழினி, குமுதா, வசந்தி ஆகியோர் ஈடுபட்டிருந்தனர். மக்கள் பங்களிப்புடன் கூடிய கூட்டுக் கலை ஆக்கச் செயற்பாடாகவும் அவை இருந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்கிலும் இவ்வாறான பண்புகளுடன் கூடிய ஓவியக் காட்சிகளை (குறிப்பாக பிரான்சில்) நாம் கண்டிருக்கிறோம். நாங்கள் அது போன்றதொரு கண்காட்சிக் கூடத்துள் நுழைந்த அனுபவத்தையே அங்கும் பெறக் கூடியதாக இருந்தது. கழித்து எறியப்பட்ட நகர் புறத்து பொருட்களைக் கொண்டே அந்த ஓவியர்கள் நவீன சிற்பங்களை செதுக்கியதைப் போன்று எங்களுடைய கலைஞர்களும் போர்க்கால அழிவுப் பொருட்களை கொண்டு கலையாக்கச் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தார்கள். இந்த செயற்பாட்டில் தமிழ் சிங்கள இரு கலைஞர்களிடையேயும் ஒத்த பண்பு இருந்தது. அது அரச பயங்கரவாதத்தை படிமமாகவும் குறியீடாகவும் எம்மனக் கண்களில் நிழலாட விடுவதும், பயங்கரவாதத்தின் மிக நுண்ணிய உறைந்த பக்கங்களை வாசிக்கச் செய்வதுமாக இருந்தது.

புத்தரிடம் தனது பாம்பு கடித்து இறந்த மகனை உயிர்பித்துத் தருமாறு ஒரு தாய் கேட்கிறாள். அதற்கு அவரோ மரணமே நிகழாத வீட்டிலிருந்து ஒரு பிடி அரிசி எடுத்து வந்தால் நான் உங்களுக்கு அவனை உயிர்பித்துத் தருகிறேன் என்கிறார். தமிழ்த் தாயோ தனது பிள்ளைக்கு ஒரு துன்பமும் நேர்ந்து விடக் கூடாது என இறைவனிடம் மன்றாடி நேர்த்திக் கடன் செய்வதற்காக மடிப்பிச்சை ஏந்தும் ஒரு மரபு இருக்கிறது. இந்த இரு பண்புகளையும் உள்வாங்கிய இந்தத் தமிழ் கலைஞர்கள் பயங்கரவாதம் தன் கால் பதித்த தாய் நிலம் தோறும் பயணம் செய்கிறார்கள் மடிப் பிச்சைக்காரரைப்போல. 'ஓவியக்காட்சி ஒன்று நிகழ்த்துவதற்கு உங்களிடம் போர்க்கால அழிவின் பொருட்கள் இருந்தால் தாருங்கள்' என்று கேட்கிறார்கள். அதற்கு ஒரு தாய் பின்வருமாறு பதில் சொல்கிறாள்:

"இடம் பெயர்ந்து இடம் பெயர்ந்து
களைத்துப் போனேன்
இனிமேல் இடம் பெயர்வதில்லை - என்ற
முடிவுக்கே வந்து விட்டேன்
'மல்ரி பரல்' அடித்து உடம்பின்
எந்தப் பாகமும் கிடையாமல்
ஒரு மகன் போயிற்றான
இன்னொருத்தன் உடல் முழுதும்
எரிகாயமென ஆனான்
இப்போ ஒரு பொருளும்
எனக்கு ஞாபகமாக இல்லை"

அதை அவ்வாறே பதிந்து ஒரு கண்ணாடி போத்தலுள் வாசிக்கும் வண்ணமாய் வைக்கிறார்கள்.

அவர்கள் வீடு வீடாக சைக்கிள்களில் பயணம் செய்தார்கள் படலைக்குப் படலை தட்டினார்கள். அவர்கள் நின்றிருக்கும் அந்த வீடு, அந்த நகர், போர்க்கால சிற்பமாக அவர்களுக்குத் தெரிகிறது. சன்னம் தின்ற சுவர்கள் ஓவியமாக கண்களில் படர்கிறது. காற்று தீராத அழுகுரலோடு ஒரு வீட்டில் குந்தியிருக்கிறது. யார் உள்ளே ? பயங்கரவாதம் கால் மேல் கால் போட்டு குந்தியிருக்கிறது. அதன் காலின் கீழ்


1




3


4





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மிதியுண்ட ஆடல் பெண்ணொருத்தியின் சலங்கை உடைந்து கிடக்கிறது. ஒற்றைச் சலங்கை - இப்போ கையில் எடுக்கிறான் கலைஞன். மீண்டும் சலங்கையின் நாதம் ஒலிக்கிறது பல்வேறு காட்சிப் படிமங்களை எழுப்பியபடி.

'அரிக்கன்லாம்பின் உடைந்த கை பிடி' விளக்கேற்றிய நினைவுகள், எரிபொருள் தடைகள் ஒளியிருந்த வீடு, ஒளியின் கீழ் இருந்த வாழ்வு, படீர் படீரென பல்வேறு படிமங்களை வளர்த்துச் செல்லும். அரச அதிகாரம் தலைவிரித்தாடிய கோரத் தாண்டவத்தின் நினைவுகள் மெல்ல யாழ் நகரெங்கும் அதிரும் அவனுடைய அகம் அங்கே வெளிச்சமிட்டு காண்பிக்கப்படும்.



'தவமணி செல்வலிங்கத்தின் அடையாள அட்டையும், கடவுச் சீட்டும்' சொந்த நாட்டிலேயே தொடர்ந்து அந்நியர்களாக விசாரிக்கப்பட்டு வந்த வரலாறு விரிந்து செல்லும் "உசிர் போனாலும் இந்த மண்ணோடதான் ஒண்டிக்கிடப்பன்" என்று சொன்ன வார்த்தை அதிர்கிறது. செம்மண் புழுதி ஏறுகிறது, அனல் கரை புரளுகிறது. காற்றாடியாக சுழலும் மரங்களைக் காணவில்லை வியர்த்து உடல் நனைகிறது அகம், புறம் தேடும் படலம் தொடர்கிறது.

உரு அழிந்து கொண்டிருக்கும் ஒரு அழகிய குடும்பத்தின் புகைப் படம், தகப்பன் கையில் குழந்தையை ஏந்தி வைத்திருக்க தாய் கேக் தீத்துகிற புகைப்படம், பூப்புனித நீராட்டு விழா, கலியாண வீடு, காணி உறுதிகள், காணாமல் போனோர், ஏ.கே ரவைகள், ஏவுகணையின் உடைந்த பகுதி, பெண்ணுடைய உடைந்த சிலையின் பாகங்கள், குழந்தையின் ஒற்றைச் செருப்பு, தேர் முட்டியில் இருந்து வீழ்ந்த சிலை, கல்லறையில் விழுந்து கிடந்து அழும் சிறுமி, விடுதலைப் போர் வீரன், பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகள், கத்தியால் அறுந்த கயிறு, ஈர்கோலி, அறுந்த ஒலிநாடா, திருகணி, சேகரின் திறப்புக் கோர்வை, கண்ணிவெடி தொடர்பான விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரம், வெடி அபாயம், எறிந்த பேனாக்கள், கிழிந்த புத்தகங்கள், உடைந்த சைக்கிள் கம்பிகள், எலும்புத் துண்டுகள், கதவுப் பிணைச்சல் என நீள்கிறது. ஐநூறுக்கும் மேற்பட்ட வீடுகளுக்குச் சென்று இந்தக் கலைப் பொருட்களைத் திரட்டினார்கள்.

மனிதனின் கைப்பட்டு அளைந்த பொருட்களுக்கு அவ்வளவு கலைத்துவம் இருக்கிறதா? அவனுடைய கனவுகள், ஆசைகள், விருப்பங்கள், ஓய்வுகள், அவற்றுள் உறைந்திருக்கின்றனவா? எத்தனையோ அகவுணர்வின் தாக்கங்கள் அவற்றுள்ளும் ஏறி இருக்கிறதா? உழைப்பாலும் காதலாலும் அவை உருவாக்கப்பட்டிருந்தனவா?

ஒரு வாழ்வின் பண்பாட்டின் சுருதியை அவை இசைக்கின்றனவா? இந்த பண்பாட்டுச் சுருதியின் நரம்புகளை யார் அறுத்து எறிந்தான்? அதிகாரத்துவம் தன் கோரப் பற்களால் அவற்றைக் குதறி எறிந்திருக்கிறது. அரச பயங்கரவாதிகள் கசாப்புக் கடைக்காரனாக நின்று வாழ்க்கையை கடை விரித்திருக்கிறார்கள். இங்கேதான் தொங்குகிறது அவனின் அகமும் புறமும்.

2.

பௌத்த பண்பியல்புகள் பலவற்றை தமது அரசியல் வாழ்வுக்கான குறியீடாகவே சிங்கள அரச பயங்கரவாதத்தின் பிரதிநிதிகள் கருதி வந்திருக்கின்றனர். தமிழ் மக்களுடைய வாழ்வில் மட்டுமல்ல சிங்கள மக்களுடைய வாழ்விலும் கோரப்பற்களை பதித்திருக்கிறார்கள். தமிழ் விரோத உணர்வுக் கருத்தியல் கட்டமைக்கப்பட்டு அவ்வெறுப்புணர்வானது உச்சத்தை அடைந்திருக்கிறது. சிங்கள மக்களுக்குள்ளும் அரச பயங்கரவாதம் தன் கால்களைப் பதித்தது என்கிற விடயத்தை சிங்களக் கலைஞர்கள் காட்சிப் படுத்தினார்கள்.

இரு பேரினவாத அரசியல் கட்சிகளும் போட்ட வேசங்கள் வெட்ககரமானவை. தேசம் முழுதும் அது விளைத்திருக்கும் கோரம் வெளியில் தெரியத் தொடங்குகிறது. அத்தகைய ஒரு முன்னெடுப்பாகவே இத்தகைய கூட்டுச் செயற்பாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

படைப்பின் மூலம் ஒரு பண்பாட்டின் அதிர்வை இசைத்துக் காட்டுவதும், கோடிட்டு காட்டுவதும் கலைஞனின் வேலையாகிறது. அவர்கள் அத்தகைய முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள். சோ.பவின் 'தென்னிலங்கைக் கவிதைகள்' சிங்கள மொழிபெயர்ப்பும், சிங்கள சிறுகதை மொழிபெயர்ப்பும், சிங்கள நாடக அரங்கப் பயில்கை பரிமாறல்கள் எனும் தொடரும் முயற்சிகள் குறிப்பிடத்தக்கவையாக அமைந்திருக்கின்றன. அரச பயங்கரவாதத்தின் அகப்பண்பாடு, அகவளர்ச்சி, அகத்தூண்டல், அகவளம் குறித்து தமிழ்-சிங்கள கலைஞர்கள் கோடுகளாலும், போர் அழிவுப் பொருட்களாலும், நிறங்களாலும், துணிகளாலும் இன்னோரன்ன பொருட்களாலும் பேச முனைந்த








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









14



செயற்பாடு புதியதொரு பண்பாட்டுத் தளத்திற்கான அக புற சமிக்ஞையே.

இன வாதப் பூதம் விழிங்கித் துப்பியதன் குறியீடாக யாழ்ப்பாணம் நூல் நிலையம் விளங்குகிறது. அதிகாரத்துவம் தன்னை அழகுறக் காண்பித்த அவ்விடத்திலேயே அகம் புறம் காட்சிப்படுத்தப்பட்டமை பார்வையாளனுக்கு பல செய்திகளை வழங்கும். வரலாற்றின் பயங்கரவாத பண்பாட்டுத் தொடர்ச்சியின் சுவடுகளைப் பின்பற்றி ஒரு பூதம் எம்முன் எழுப்பி நிறுத்தப்படுகிறது.

சிங்கள ஓவியர்களின் ஓவியங்கள் இத்தகைய அதிர்வையே எமக்குள்ளும் ஏற்படுத்துகின்றன

காண்பியம்(4). ஜே.வி.பியினுடைய புரட்சியை அடக்கும் முகமாக நிகழ்ந்த படுகொலைகளைச் சித்திரிக்கிறது. ரயர் போட்டு கொழுத்திய பிறகு அவ்விடத்தில் கைகள் மட்டும் எஞ்சி இருக்குமாம் அதனைச் சித்தரிக்கிற ஓவியச் சிற்பமிது.

காண்பியம்(19) அரச பயங்கரவாதம் தனது இரத்தமாக, வேராக, நிழலாக, அதன் ஆன்மாவாக புத்தரை எழுப்புகிறதைச் சித்தரிக்கிற ஓவியச் சிற்பமிது. இதனால்தான் ஒரு கவிஞர் 'புத்தர் வெளி நடப்புச் செய்துவிட்டார்' எனத் தனது கவிதையில் குறிப்பிடுகிறார். வெளி நடப்பு என்பது பண்பாட்டுச் சிதைவு எனவும் பொருள்கொள்ளலாம். புத்தருடைய போலிச் சிலைகளின் பெருக்கம் அவரது மௌனித்த நிலை அவர்களுக்கு வாய்ப்பானதாக அமைய அவர்கள் இழுத்துக் கொண்டு திரிகிறார்கள் ஒரு பண்பாட்டு மோதலுக்கான கருவியாகவும். கலைஞன் காலம் அரித்த புத்தர் சிலையைக் கண்டெடுத்திருக்கிறான். வன்முறை அரசியலின் குறியீடாக எழுப்பி அதன் கரங்களால் சிதைக்கப்பட்ட புத்தரை எடுத்து வந்திருக்கிறான். அக வெளியில் சென்று உதிர்க்க வேண்டியவைகளை உதிர்க்காது ஓடுகளையும் சிலைகளையும் காவுவதை காட்சிப் படுத்தியிருக்கிறான். இவ்வாறு பல அலைகளை அப்புத்தர் சிலை எழுப்புகிறது. காண்பியம்(08) சிங்கள கிராமத்தில் வறுமையில் வாடும் இளைஞன் ஒருவன் ராணுவத்தில் சேர்வதற்காக வந்திருக்கிறான். அவனுடைய மார்பு அளவு எடுக்கப்படுகிறது. எதிரியினது ஏமாற்றும், பொய்யும், புரட்டும், சுரண்டலும், பலியிடலுமான குண இயல்புகளை சிங்களக் கலைஞர்களே சொல்வதானது அகத்தின் பார்வை வீச்சை அகலப்படுத்துகிறது.

காண்பியம்(20),(14),(1) அறிவும் ஞானமும் பெண்ணுக்கு வாய்ப்பதை பௌத்த பின்னணி தவிர வேறு சமயங்கள் கருதியிருக்காது என ஆய்வாளர்கள் மணிமேகலையை ஆதாரம் காட்டி ஆதங்கப்பட்டுக்கொண்டிருக்கையில் பௌத்த பின்னணியைக் கொண்ட சமூகத்தில் பெண் பற்றியக் கருத்தியல்கள் மிக மோசமானவையாக இருக்கின்றன. தன்னுடைய சமூகமே கருத்தியல் ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் வளங்களை அகலித்து வளர அனுமதிக்க முடியாதவன் எப்பேற்பட்டவனாக இருப்பான். ஒரு விலங்குப் பண்ணையொன்றுள் சென்று திரும்புவதைப் போன்ற உணர்வை கலைஞர்கள் அகத்தில் தொற்றவைக்க நினைத்திருப்பார்களா? எங்களுக்கு செம்மணியைப் போலவே காண்பியம்(03) சிங்களத் தாயும் தனது மகனின் புகைப்படத்தோடு முகாம் முகாமாக போய் வந்தாள். பட்டலந்த, களனி, பலவத்த, சூரியவெள, முதியங்கணய, நாகதீபம், புஸ்ஸா, கதிர்காமம், சிவனொளிபாதம், குருவிட்ட, மகியங்கணைய, திவாகுசா, அபயகிரிய, இருவான்வலிசாய புனித வழிபாட்டுத் தலங்கள் ஈறாயும் திரிந்தாள். அங்கெலாம் பூக்கள் அழுகிக் கிடக்கின்றது. கரியும் மண்ணும் கலந்து கிடக்கிறது, சிட்டி விளக்குகள் உடைந்து கிடக்கிறது, நெல் மணிகள் சிதறுண்டு கிடக்கிறது. தமிழ் தாயும், சிங்களத் தாயும் உணர்வாலும், மொழியாலும், அழுகையாலும் இங்கே ஒன்றுபட்டு நிற்பதை போன்றே அரச பயங்கரவாதத்தை வெல்வதற்கு ஒன்றுபட்டு உழைப்பதற்கான கோட்டுப் பாலத்தை அவர்கள் வரைந்திருக்கிறார்கள். ஆயினும் அரச பயங்கரவாதம் அதைத் தாண்டாது என்பதற்கு தீவில் ஒரு உத்தரவாதமும் இல்லை.

காண்பியம்(24). இராப் போசன விருந்தை காட்சிப் படுத்தியிருக்கும் ஓவியன் பன்னிரெண்டு கோப்பைகள் அடுக்கியிருக்கிறான். அவற்றில் எரிந்து கருகிப் போன உணவுகளை படைத்துவைத் திருக்கிறான். பன்னிரெண்டு கிளாசுகள் வைத்திருக்கிறான் இந்த நாட்டை இரவு யாரிடம் யார் காட்டிக் கொடுக்கப் போகிறார்களோ? அந்த மேசையில் இருந்த மனுகாட்டில் அவன் மூன்று மொழிகளிலும் எழுதியிருக்கிறான்.



'உங்களுக்கு தர என்னிடம் இதுதான் இருக்கிறது. இது உண்ணும் படியாக இராததால் உண்ணும் படியான உணவை உருவாக்கத்தக்க பண்பாட்டினைப் பற்றி தயவு செய்து எழுதுங்கள்' என்று.





20








24





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீராகி நிமிர்ந்தெழுந்த நெருப்புக்கள்

போராளி சுமித்திரா
நவம் அறிவுக்கூடம்

நீராகி நிமிர்ந்தெழுந்த நெருப்புக்கள் இவர்கள்
நீரேறி நிம்மதியாய் ஈழமதை காணவென வந்தவர்கள்,
நீதியற்ற இந்தியாவின் வஞ்சனையால் எம்மை விட்டுச் சென்றவர்கள்
நிலையான ஈழத்தை சிந்தையிலே நிறுத்தி வைத்தவர்கள்

தமிழன்னை பெற்றெடுத்த மூத்தவராம் அண்ணா கிட்டு
தமிழீழ மண்ணை கண்பதற்காய் ஓடி வந்தாய் வெளிநாட்டை விட்டு
தன்மானத் தலைவரின் சிந்தனையை மனதிலிட்டு
தமிழீழ விடிவிற்காய் எங்கையடா போய்விட்டார் எமைவிட்டு

முதிபெரும் தளபதியாம் எங்கள் முத்தான கிட்டு அண்ணா
முகமெல்லாம் சிரிப்பாக மக்கள் முன் நிற்பதுதான் நினைவண்ணா
முடியாது உமை மறக்க உண்மை இது அண்ணா
முயற்சி செய்தும் முடியவில்லை நாம் என் செய்வதண்ணா

தலைவருக்குத் தம்பியாய் போராளிக்கு முதுபெரும் தளபதியாய்
தர்மத்தின் தலைவனாய் தமிழ் அன்னை மைந்தனாய்
தரணியிலே தம்பிக்கு நற்பெரும் தனையனாய்
தன்னையும் மறந்து தன் உறவையும் மறந்து தன்கொடையாளனாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின்



## 12 ஆம் ஆண்டு நினைவாக...













அமைதி காணவென ஆசையோடு தேசம் விட்டு வந்த போது
அன்னிய அரக்கர்களின் நாசகாரப் பொறியில் அகப்பட்டு
அண்ணனுடன் ஐயிரண்டு வேங்கைகளும் நெருப்பினிலே நீராகி
அழகான திருமேனி தணலாக மாறியதன் மாயமென்ன.

எமக்கெதிரி சிங்களம் தான் என நினைத்தோம்
ஏமாற்றம் இந்தியனை நம்பியிருந்தோம்
எம்மவர் ஏறிவந்த கப்பலினை ஆவலுடன் பார்த்திருந்தோம்
ஏமாற்றம் தான் அடைந்தோம் நீரிலே நெருப்பினைத்தான் கண்டோம்.

நம்பி ஏறினார் எம்.வி அகத்தில் ஈழமதைக் காணவென
வெம்பி அழுகின்றோம் இன்னும் வரக் காணவில்லை
அன்பு எனும் அன்பினால் எமை ஆட்கொண்ட அண்ணர் இவர்
நம்பியிருந்தோம் நாமெல்லாம் நலமாக வருவாரென

சிரித்த முகமெங்கே சிந்தித்து உரையாற்றும் நாவெங்கே
சிங்களத்தை சிதறிடச் செய்திட்ட வீரம் தான் எங்கே
சிரமத்தைப் பாராது சிரிப்புடன் செய்தவைதான் எங்கே
சிட்டான கிட்டண்ணா நெருப்பிலே நீரான மாயமென்ன

வங்கக்கடலும் வாய்திறந்து புலம்புதண்ணா
வழங்கொண்ட ஈழமதும் நிலையறிந்து தவிக்குதண்ணா
வந்துபுகுந்தானே வழிப்பறி கொள்ளையனாய் இந்தியன்
வருந்துகின்றோம் வாடுகின்றோம் வரவுதனைப் பார்த்திருந்த நாம்

எங்கள் தேசத்தின் வாசலிலே ஏற்றிவைத்த தீபமண்ணா
ஏகாதிபத்தியத்தின் தீயினிலே நீராகி நிமிர்ந்தாயண்ணா
எம்மவர்கள் நெஞ்சினிலே பூவாகி நிலைத்து விட்டாயண்ணா
ஏற்றுகின்றோம் உந்தனுக்கு தீபம்தனை
போற்றுகின்றோம் உந்தனுக்கு நாமம்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களைத்தோடிக் கண்ணகை

## செங்கை ஆழியான்

ஒரு மாலைப்பொழுதில் பொன்னாச்சியும் அவளது மகள்வழிப்பேத்தி பவளமும் நவாலி கடந்து வயலோர வீதியில் மினிபஸ்ஸில் வந்து இறங்கினர். யாழ்ப்பாணத்திலிருந்து ஆனைக்கோட்டையூடாகக் கட்டுடைவரை நெருக்கியடித்து நின்றபடி பயணப்பட்ட களைப்பு இருவரிலும் தெரிந்தது.

"ஒருத்தனுக்குக் கூட நெஞ்சில் ஈவிரக்கமில்லை. ஒரு கிழவி நின்றபடி தொங்கிக்கொண்டுவர இளந்தாரியள் குசாலாக சீற்றில இருந்து வாறாங்கள். கலிமுத்திய காலம்..." என பொன்னாச்சி பொருமிக்கொண்டாள். அவள் கொட்டிய வார்த்தைகளைக் கிரகிக்கும் நிலையில் பவளம் இல்லை. பக்கத்து வீட்டுச் சரசிடம் பொறுப்புக் கொடுத்துவிட்டு வந்த நான்கு பிள்ளைகளின் நினைவு மனதில் தளர்வைத் தந்தது.

"கெதியாகத் திரும்பவேண்டும் அம்மாச்சி. பிள்ளையள் தனிய.... நானில்லாட்டில் கடைக்குட்டி துடித்துப் போய்விடும். இப்ப எங்கயணை கூட்டிக்கொண்டு போறாய்?"

"உனக்கெப்பவும் அந்தரம்தான். பேசாமல் என்னோட வா. நான் இங்க வந்தும் கனகாலமாகுது. ஆரிட்டையாவது இடம் கேட்பம்..."

"டேய் தம்பி.... இந்தக் களத்தோடை கண்ணகி அம்மன் கோயில் எங்கை இருக்குது....?"

"என்னணை சரியான இடத்தில நிண்டுகொண்டு கேக்கிறியள். அங்க பாருங்கோ.... அரைச்சுவரில் தெளிவாக எழுதியிருக்குது. அப்படியே மேற்கால போனா ஐந்து கோயில்கள் வரும். அப்படியே அவற்றினைக் கடந்துபோனால் வயல்வெளி வரும். அங்க மேட்டில களைஒடி கண்ணகை அம்மன் கோயில் இருக்குது"

"ஏனணை அங்கை?"

"பேசாமல் வா மோனை. வலு சக்தியுள்ள அம்மன். உன்ர துயரங்களுக்கு எல்லாம் விடிவு வரும்."

பொன்னாச்சி இடதுபுறமாகச் சென்ற மண்வீதியில் இறங்கி முன்னே நடந்தாள். வீதியோரத்தில் தெளிவாக 'களை ஓடை கண்ணகை அம்மன் கோயில்' என எழுதப்பட்டிருந்த அரைக்கற்சுவர் விளங்கியது.

"இதென்ன களைஒடைக் கண்ணகை அம்மன் என்றிருக்குது. நீ களைத்தோடி கண்ணகை அம்மன் என்கிறாய், அம்மாச்சி."

"பாண்டி நாட்டை எரிச்சிட்டுக் களைத்து ஓடிவந்த கண்ணகிதான் இவ.."

அவள் கேள்விப்படாத கோயில் அது. அவள் கண்களில் இவ்வளவு காலமும் இது படவில்லை. எவரும் இக்கண்ணகி கோயில் பற்றிக் கூறியிருக்கவில்லை. இருந்தாற்போல ஆச்சி இக்கோயிலிற்குச் செல்லாமல் கொள்ளாமல் அழைத்து வந்திருக்கிறாள். அவளுடைய துயரம் இங்கே வந்தால் தீருமாம். அது ஆச்சியின் நம்பிக்கை. அவள் எத்தனை கோயில்களில் கண்ணீரோடு முறையிட்டும் தீராத துயரம் அது."என்ர துயரம் தீராதணை அம்மாச்சி. செல்லம்மா வீட்ட மேய்ச்சலிற்குப் போய் வாறதை அந்த மனிசன் நிறுத்ததாது."

எதிரில் ஒரேயிடத்தில் ஐந்து கோயில்கள் குறுக்கிட்டன. பவளத்திற்கு வியப்பாக இருந்தது. இப்படி ஒரேயிடத்தில் அனைத்துத் தெய்வங்களையும் அவள் தரிசித்தவளல்லள்.

"நீ எப்பவாது உன்ர மனிசனைக் கண்டித்திருக்கிறியா?" என்று இருந்தாற்போல பொன்னாச்சி கேட்டாள். அவள் தொடர்ந்து, "இல்லை... எங்க கண்டித்துக் கேட்டுச் சண்டை பிடித்தால் அவர் உன்னையும் பிள்ளையும் கைவிட்டுவிட்டு ஓடிப்போயிடுவார் எண்ட பயம். அதுவும் சரிதான். ஆனால்.... என்றபடி பொன்னாச்சி ஒரு ஒதுக்காக நடந்தாள். பற்றைக்குள்ளால் ஒரு ஒடுங்கிய பாதை சென்றது. இரு புறங்களிலும் வளர்ந்திருந்த முட்பற்றைகள் வழியைத் தடைசெய்தன. அப்பாதை ஏறியவிடத்தில் சுண்ணப்பொளி கற்களால் கட்டப்பட்டிருந்த ஒரு அழகான கேணி குறுக்கிட்டது. நீள்பக்கத்தில் கேணிக்குள் மனிதர் இறங்கப் படிகளும் அகலப் பக்கத்தில் மாடுகள் இறங்கி நீரருந்தச் சரிவுப் பாதையும் இருந்தன. சரிவுப்பாதைப் பக்கத்தில் மாடுகள் பேன் கடிக்கும், உடல் உழைவிற்கும் முதுகு தேய்க்க ஆவுரோஞ்சிக் கல் நடப்பட்டிருந்தது.

"அங்க பார் கண்ணகை அம்மன் கோயில்...." என் பொன்னாச்சி மேற்கே சுட்டிகாட்டினாள். மேற்கு வானில் சூரியன் சரிந்து கொண்டிருந்ததால் ஒளிக்கதிர்கள் சாய்வாகப் பவளத்தின் முகத்தில் படிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாச்சி சுட்டிக்காட்டிய இடத்தைப் பார்க்கத் தடைசெய்தன. கண்ணுக்கெட்டிய தூரம்வரை வயல் விரிந்து கிடந்தது. பவளத்திற்கு எதுவும் தெரியவில்லை.

"எங்கயணை..."

"அந்தா..."

"ஒரு கோபுரத்தையும் காணேல்ல.... கோயில் எங்கை...."

"அங்க பார் பிள்ளை.... ஒரு மேடு, வயலுக்குள்ள சிறியதொரு மலைக்குன்றாகத் தெரியுது. அதில் காடு போல மரங்கள் வளர்ந்திருக்குதெல்ல...."

பவளத்திற்கு இப்போது ஆச்சி சொன்னவிடம் புலப்பட்டது. வயல்களின் நடுவே மணல் மேடு ஒன்று தெரிந்தது. அதில் மரங்களும் கொடிகளும் பற்றைகளும் மூடி வளர்ந்து கவிந்திருந்தன. அதற்குள் கோயில் இருப்பதற்கான அறிகுறி எதுமில்லை.

அவள் ஆச்சியை தொடர்ந்தாள். வயற்பாதை மணமேட்டினை நோக்கித் திரும்பியது. கற்படிகள் அமைக்கப்பட்டிருந்தன. அப்படிகளில் பொன்னாச்சி ஏறினாள். அவளைத் தொடர்ந்த பவளத்திற்கு மணல் மேட்டில் சிறியதொரு கோயில் இருப்பது தெரிந்தது. படிகளில் ஏறும்போது தன்னையறிமால் படிகளை எண்ணிக்கொண்டாள். உச்சியை அடைந்தபோது பதினெட்டுப் படிகள் அமைக்கப்பட்டிருப்பது தெரிந்தது.

"பதினெட்டுப்படிகள் அம்மாச்சி..."

"அப்படியா.... ஐயப்பனுக்கும் பதினெட்டுப்படிகள் தானாம்"

சிறியதொரு கர்ப்பக்கிருகம். அதன் முன் அர்த்த மண்டபம். அதற்குமுன் ஒரு சிறிய மகாமண்டபம் எல்லாம் சேர்ந்து முப்பத்திரண்டு அடி நீளமும் பத்துப் பன்னிரண்டு அடி அகலத்திற்குள்ளும் அடங்கிவிடும். அக்கோயிலின் அமைவிடம் மிக அற்புதமானது. அக்கோயிலைச் சூழ்ந்து சரிந்து சென்ற சாய்வுகளில் வேம்பு, பனை, புன்னை முதலான மரங்களும் பற்றைகளும் வளர்ந்து சோலையாக்கியிருந்தன. அவற்றில் தாவி ஏறி இறங்கி விளையாட வேண்டும்போல பவளத்திற்கு இருந்தது. கர்ப்பக்கிருகத்தில் கண்ணகை அம்மன் சிலாவிக்கிரமாக அமர்ந்திருந்தாள். கர்ப்பக் கிருகக் கதவு திறந்திருந்தது. அம்மனைத் தரிசிக்க முடிந்தது. கோயிலைச் சுற்றி வந்தார்கள்.

பவளத்தின் களைப்பும் வீட்டு நினைவுகளும் மறந்து போயின. மண்டபத்தில் பொன்னாச்சி அமர்ந்ததும் அவளும் அவளருகில் அமர்ந்துகொண்டாள். அவர்கள் இருவரையும் தவிரக் கோயிலில் வேறு எவருமேயில்லை. கோயிலும் சூழலும் அமைதியில் ஆழ்ந்து கிடந்தன.

"இப்படி அமைதியான ஒரு கோயிலை நான் காணவில்லை.... மனதுக்கு நிம்மதியாக இருக்குது, அம்மாச்சி."

காகங்கள் சிலவற்றின் வருகை கரைதலிலிருந்து தெரிந்தது.

"ஏனெணை என்னை இங்கை கூட்டி வந்தாய்?"

"உன்ர வயதுதான் அப்ப எனக்கும் இருக்கும். உன் கொம்மப்பா அதுதான் உன்ர அப்பு திருவாளர் முத்தர் அம்மான் ஐந்து பிள்ளையள் பெறுமட்டும் நல்ல ஒழுங்காகத்தான் இருந்தார்." பொன்னாச்சி நிறுத்திவிட்டு பேத்தியைப் பார்த்துச் சிரித்தாள்.

பவளம் வியப்புடன் ஆச்சியை நோக்கினாள். ஆச்சி தொடர்ந்தாள்: "எப்படியோ அவருக்கு தையலோட தொடுப்பு ஏற்பட்டுவிட்டது. கதை ஊரெல்லாம் பரவி எல்லாரும் சிரிசிரியெனச் சிரித்தபின்னர்தான் எனக்குத் தெரிந்தது. துடிச்சுப்போனன். காட்டிக்கொள்ளவில்லை. தெரிஞ்சதாகக் காட்டிக்கொண்டால் இப்ப இருக்கிற பயமும் போய்விடும். எவருக்கும் தெரியாமல் அழுதன். என்ர ஆச்சி கண்டிட்டா ஒரு நாள். அவவிடம் சொல்லி அழுதன். "அழாதை பிள்ளை. எதுக்கும் கண்ணகை அம்மனிடம் முறைப்படு. அவ தீர்ப்பா" என்றா. எனக்கு ஆச்சியின்ர பேச்சில நம்பிக்கை வந்தது. ஒருநாள் மனிசனையும் கூட்டிக்கொண்டு இங்க வந்தன...." ஆச்சி தொடர்ந்தாள்.

பொன்னாச்சி அமர்ந்திருக்கிற இடத்தில்தான் அன்று முத்தர் அம்மான் அமர்ந்திருந்தார்.

"நல்ல கோயிலணை..." என்றார் முத்தர் அம்மான்.

"ஓமோமப்பா.... கண்ணகி கோவலன் கதை தெரியுந்தானே?"

முத்தர் அம்மான் சிரித்தார்.

"அது தெரியாமல் ஆராவது இருப்பினமே?

கண்ணகி இருக்கத் தக்கதாக அவர் மாதவியிடம் போனது.... காற்சிலம்பை விற்கப் போனது.... பாண்டியன் கள்ளனென நினைத்துக் கொல்வித்தது.... படிச்சிருக்கிறன்.... பெரிய எழுத்துக் கோவலன் கதை என்னிடம் இருக்கிறது. நாட்டுக் கூத்தும் பார்த்திருக்கிறன்" என்றார் ஆர்ப்பாட்டமாக முத்தர் அம்மான்.

"கோவலன் செய்தது சரியே? கண்ணகி இருக்க மாதவியிடம் போனது...."

"பெண்ணாசை ஆரை விட்டது...." என்றார் முத்தர் அம்மான்.

"அப்ப நீங்களும் அப்படியே...."

முத்தர் அம்மானின் முகம் வியர்த்துவிட்டது.

"நானோ... என்ர ராசாத்தியாட்டம் நீரிருக்க நான் வேறை தேவடியாளை நாடுவனோ..."

பொன்னாச்சி கொடுப்பிற்குள் சிரித்துக்கொண்டாள்.

"பிறகென்ன நடந்தது?"

"எதுக்குப்பிறகு?"

"பாண்டியன் கோவலனைக் கொலை செய்வித்ததன் பிறகு?"

"என்ன தெரியாதது மாதிரிக் கதைக்கிறாய், பொன்னு? தன்ர முலையைத் திருகி பிடுங்கி எறிந்து மதுரையை எரித்தாள். பேந்து... சேர நாட்டிற்குச் சென்று அதுக்குப் பிறகு களைத்து ஓடி இந்தவிடத்தின் மணமேட்டில தங்கினாளாம். அதுதான் களைத்தோடி கண்ணகை அம்மன்..."

"நானாகவிருந்தால் கண்ணகி மாதிரிச் செய்திருக்க மாட்டன்...."

"என்ன செய்திருப்பாய்...."

"மாதவியிடம் அவன் போறான் என்று கேள்விப்பட்டதுமே நித்திரையில வைச்சு நான் திருகிப் பிடுங்கியெறியிறதே வேறாக இருந்திருக்கும்" என்றாள் பொன்னாச்சி திடமாக. முத்தர் அம்மான் பேயறைந்தவர் போலானார்.

அவரால் எதுவும் பேசமுடியவில்லை. வியர்த்துக்கொட்டியது. "செய்தாலும் செய்வாள். செய்யக்கூடியவள்" எனத் தனக்குள் கூறிக்கொண்டார். "வா நேரமாகுது போவம்" என்று எழுந்தார்.

பொன்னாச்சி கதையை நிறுத்தினாள். பவளம், ஆச்சியை வியப்புடன் ஏறிட்டாள்.

"அதுக்குப் பிறகு உன்ர அப்பு வீட்டைவிட்டு வெளியில போறதில்லை" என்று பொன்னாச்சி கடகடவெனச் சிரித்தாள்.

அவர்கள் ஆலயத்தினை விட்டுப் புறப்பட்டனர். பவளம் எதுவும் பேசவில்லை. யோசனையில் ஆழ்ந்து போனாள். ஆலய மேட்டிலிருந்து படிகளூடாகக் கீழிறங்கி வயற் பாதையில் நடந்து கேணியைத் தாண்டி ஐந்தாலயங்களைக் கடந்து வீதியில் ஏறி வீடு வரும்வரை பவளம் பேசவில்லை.

"எங்க ஆச்சியோட போயிட்டு வாறாய்... இங்க புள்ளையள் நீயில்லாமல் தவிச்சுப் போட்டுதுகள்...." என்றான் பவளத்தின் கணவன்.

கணவனை ஆழமாக பவளம் ஏறிட்டுப் பார்த்தாள். பின்னர் கேட்டாள், "நானும் நீங்களும் ஒருக்கா களைத்தோடி கண்ணகை அம்மன் கோயிலுக்குப் போகவேணும்...."

பொன்னாச்சி தனக்குள் சிரித்துக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாம் எங்கே செல்கிறோம்?

ஏமாற்றுபவன் என்ற பொருளில் போக்கிலி (Fraud) என்ற சொல் தமிழில் வழங்குகின்றது. இது போக்கிரி எனத் திரிக்கப்படுவதும் உண்டு.

ஆனால் போக்கு+ இலி என இதனைப் பிரித்தால் போக்கிடம் அற்றவன் என்ற பொருள்தான் மேலேழுவதைக் காணலாம். போவதற்கு இடமற்றவன் அகதி. ஈழத்தமிழர் வீடுகளில் வாழ்ந்தாலும் அகதிமுகாம்களில் அவலப்பட்டாலும் வெளிநாடுகளில் அடைக்கலம் புகுந்தாலும் ஒருவகையில் நாங்கள் எல்லோரும் போக்கிலிகள் - அகதிகள்தான்.

எமக்கென்று ஒரு நாடும் அதில் தலை நிமிர்ந்து எவருக்கும் ஆட்படாது வாழும் தன்னாண்மை வாழ்வும் கிட்டாதவரை நாம் போக்கிலிகளே, அகதிகளே!

ஒட்டுமொத்தமான இன எழுச்சியும் அதற்கு அடிப்படையான தன்மானமும் ஒருமுகப்பட்ட ஈகமும் ஒன்றாய் இணையும்பொழுதுதான் ஈழத்தமிழ் மண்ணிலே விடுதலைக் கதிரவன் தன் பேரொளியினை முழுமையாகப் பரப்புவான் என்பதற்கு ஐயம் இல்லை.

ஆனால்...

விடுதலை பெற்று நெஞ்சு நிமிர்த்தப்போகும் அந்நாளுக்கு, இன்றுள்ள எமது தமிழ்ச்சமூகம் எந்த அளவுக்குத் தகுதி உடையதாய் விளங்கப்போகின்றது என்பதே இன்று எம்முன் எழுந்து நிற்கும் மிகப் பாரிய கேள்வி.

எம் இளைஞர் மத்தியிலே நிலவும் வக்கிர உணர்ச்சிகள் அந்த உணர்ச்சிகளுக்குப் பால் வார்த்து வளர்க்கும் ஊடகங்கள் - சிறப்பாகத் தொலைக்காட்சி என்பன எந்த அளவுக்குத் தமிழ் இனத்தை விட்டு வைக்கப்போகின்றன?

இளைஞரின் போக்கினைத் தீர்மானிக்கும் ஊடகங்கள் ஒரு சாராக, நடுத்தர வயதினைரையும் முதியோரையும் கூட ஆட்டிப்படைக்கும் கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப்போவது எக்காலம்? உண்மையில் நாம் எங்கே சென்றுகொண்டிருக்கிறோம்?

"மக்கள் ஆட்சி நிலவும் நாடுகளில் வாழ்கின்றவர்களை நான்கு வகையினராய்ப் பிரிக்கலாம். காதலர், கூர்த்த நோக்கினர், பேராசைக்காரர், மடையர் என்பவர்களே அந்த நான்கு வகையினரும் இவர்களில் மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்பவர்கள் மடையர்கள் (Fools) தாம்" என்பது றெயின் (Rain) என்ற மேற்திசை அறிஞனின் கூற்று.

மடையர்களாய் இருந்து அரை நூற்றாண்டாக ஏமாற்றப்பட்டு வந்த நாம் இனியும் மடையர்களாக இருப்பதா? இல்லை என்றால் இன்று கொடிகட்டிப் பறக்கும் தொலைகாட்சி நாடகங்கள், ஆட்டங்கள், பாட்டங்கள், திரைப்படங்கள் (நீலத்திரைப்படங்களும் இவற்றுள் அடங்கும்) அவற்றினூடாக வெளிப்படுத்தப்படும் வல்லுணர்வுகள், ஆபாசங்கள், சமூக விரோதச் செயல்கள், நம்பகத் தன்மைக்கு அப்பாலான அடிபிடி சண்டைகள், பழிவாங்கல் உணர்ச்சிகள், பெண்மைக்குச் சமாதிகட்டும் காட்சிகள், உரையாடல்கள், பாலியல் ஊக்கிகள், கொலைகள், கொள்ளைகள் என்பவற்றை இன்னும் சகித்துக்கொண்டிருப்பதற்கு என்ன பொருள்?.

நகைச்சுவை என்ற பெயரால் உரையாடல்களிலே கையாளப்படும் அநாகரிகச் சொல்லாட்சிகள் (நாயே, தீவட்டித்தலையா, முட்டாள், மூதேவி முதலாய் நூற்றுக் கணக்கானவை) வலிமை உள்ளவன் வலியற்றவனை அடித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைத்தல் முதலாய கீழ்த்தரச் செயல்கள், சோரம்போதலை முதன்மைப்படுத்தி நம் சமூகத்தை சிரிப்பார் சிரிக்க வைப்பது இவைதாம் நகைச்சுவை என்றால் அந்த நகைச்சுவை நாசமாகட்டும்.

நண்பர் என்றால் 'அடா' போட்டுத்தான் பேசவேண்டும் நண்பிகள் என்றால் 'அடி' போட்டுப் பேசுவதுதான் ஜதார்த்தம் என்ற காட்டுமிராண்டிப்போக்குகளுக்கு என்று முடிவு வைக்கப்படுமோ?

சமூக, இன, மொழி தேசபற்றுக்கள் தாம் கேலிக்குள்ளாக்கப்படுகின்றன என்றால் குடும்ப உறவுகளும் கேவலப்படுத்தும் வகையிலே காட்சிப்படுத்தப்படுகின்றனவே! எல்லாவித குணக்கேடுகளும் ஊடகங்களுடாக ஊடுருவி வந்து இளைஞர் சமூகம் என்ற பாற்குடத்திலே நஞ்சினைப் பாய்ச்சுவதை ஏன் என்று கேட்க நாதியில்லாத, வெட்கட் கெட்ட ஓர் இனமாக நாம் சென்றுகொண்டிருக்கிறோம்.

மாட மாளிகைகள், புதுப்புது ரக மோட்டார்கள், ஆடம்பர தளபாடங்கள், லட்சக் கணக்கில் பணம் புரளுவது போன்ற 'பாவலா' கொண்ட ஒரு சிறுபான்மைக் குடும்ப அலகுகளே கதைகளுடாக வெளிவருகின்றன.

நடுத்தர மக்கள், ஏழை மக்கள் என்போருடைய பிரச்சினைகள், அவலங்கள் என்பவற்றுக்குத் தொலைக்காட்சி நாடகங்களில் இடமேயில்லை. சமூகப் பார்வையில் வெள்ளெழுத்து விழுந்ததென்ற இரக்கப்பட முடியாதவாறு முழுப்பார்வையும் இழந்து விட்ட ஒரு கலை வங்குரோத்துக்காரர்களைக் காண எமக்குக் கண்கள் உள்ளனவே என்று கவலைப்படத்தான் முடிகின்றது.

தமிழ் நாட்டிலே தண்ணீர் பஞ்சம் நிலவுகிறது என்று கூக்குரல் இடுகின்றனர். அதனைப்போக்கிட எடுக்கப்படும் அரசியல் ரீதியான முயற்சிகள் யாவும் புஸ்வாணமாகிவிட ஏழை உழவர்களில் பலர் தற்கொலை செய்கின்ற துர்ப்பாக்கிய நிலை அங்கு பரவலாகக் காணப்படுகின்றது. இவர்களுக்கு ஓர் உருப்படியான ஆலோசனையைக் கூறுவது இவ்விடத்தில் பொருத்தமானது எனக் கருதுகிறேன்.

தொலைக்காட்சி நாடகங்களிலே கிளிசரின் வாயிலாக ஆண், பெண் நடிகர்களுக்குச் செயற்கையாக உண்டாக்கி வழியச் செய்கின்ற கண்ணீரைத் தேக்கி வைத்தாலே தமிழ் நாட்டின் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கி விடலாமே. அப்பப்பா! எந்தத் திறமையும் இவர்களுக்கு (நடிகர், நடிகைகளுக்கு) இல்லாவிடினும் இவர்கள் விம்மவும் பொருமவும் கதறவும் அழவும் நன்கு பழக்கப்பட்டிருக்கிறார்கள்.

தொலைக்காட்சி நாடகத்தில் பாத்திரம் ஏற்க வேண்டுமா? கண்ணாடி முன்னின்று கதறி அழப்பழகிக் கொள்ளுங்கள். உங்களைத் தொலைக்காட்சிக் கலைஞர் முதல் வரிசையில் சுக்கிரபூசை நடத்தி வரவேற்று உபசரிக்க எத்தனையோ தயாரிப்பாளர்களும் இயக்குனர்களும் சகோரபட்சிகள் போல மழைத்துளிக்குக் காத்திருக்கும் சகோர பட்சிகள் போலக் காத்திருக்கின்றார்கள்.

திரைக்காட்சியில் ஒரு கதை தொடங்கி முடியும் அதிக பட்ச நேரம் இன்று இரண்டரை மணித்தியாலமே. எனவே அவற்றின் முடிவு ஏதோ ஒரு வகைப் படிப்பினையையோ(அது இன்றைய கலை வெளிப் பாடாக எவரும் ஏற்பதில்லை என வைத்துக் கொண்டாலும் ) முடிவையோ அந்த நேர இடைவேளைக்குள் தெரிவித்து விடும்.

ஆனால் இருநூறு முந்நூறு நாட்கள் தொடர் நிகழ்ச்சிகளாக எதிர்பாராத திருப்பங்களுடன் நீண்டு செல்லும் Episodes தொலைகாட்சி நாடகங்களின் கதாபத்திரங்கள் அவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் வக்கிர உணர்ச்சிகளுக்கு முடிவேயில்லை. இவை இளைஞர்களிடையே உளவியல் ரீதியான பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. முடிவற்றகதைகளின், முடிவற்ற தீய பாத்திரங்களே அவர்களின் நெஞ்சங்களை நிறைத்து தேவர்களாகவும் தேவதைகளாகவும் உலாப் போகின்றனர்.

உடைகளை உடுத்தலைப் போடுதல், தரித்தல், அணிதல் என்ற பெயர்களாலும் அழைப்பதுண்டு. போடுதல் என்பது சட்டைகளை உடம்பில் இடுதலை குறிப்பது. தரித்தல் என்பது உடலுக்குப் பொருத்தமான வகையில் தெரிவுசெய்து இடுதல். அணிதல் என்பது அழகுணர்வுடன் இட்டுக்கொள்ளுதல். இவற்றோடு உடைகளை வேண்டா வெறுப்போடு போட்டுக்கொள்ளலையும் உடுத்தல் என்ற சொல்லின் மற்றொரு பொருளாக கொள்ளத்தக்க அளவிற்கு ஆடைகள் போடப்படுகின்றன. கூந்தல்கள் கண்ணகிக்கு வக்காளத்து வாங்குகின்றன.

பண்பாடு, நாகரிகம் பழம்பெருமையுடையது என்று விரித்தும் தெளித்தும் போற்றியும் புகழ்ந்தும் பேசப்பட்ட தமிழினம் அவ்வாறு பேசப்பட்ட வேண்டிய நிகழ்காலத்தைத் தெலைத்துவிட்டது. அப்படியானால் அதன் எதிர்காலம்?

நாம் எங்கே செல்கிறோம்?

**சொக்கன்**



## பிரபல எழுத்தாளரும் தமிழறிஞருமான சொக்கன் காலமானார்

சொக்கன் என்று எல்லோராலும் அறியப்பட்ட பிரபல எழுத்தாளரும் தமிழறிஞருமான கந்தப்பு சொக்கலிங்கம் 10.12.2004 அன்று பிற்பகல் யாழ்ப்பாணத்தில் காலமானார்.

தமிழ் மொழிக்கு அவர் ஆற்றிய சேவையைப் பாராட்டி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அவருக்கு அண்மையில் இலக்கியத்துறையில் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்திருந்தது.

நல்லூர் நாயன்மார்கட்டை பிறப்பிடமாகக் கொண்ட சொக்கன் தமிழீழக் கல்வி அபிவிருத்திச் சபையின் ஆலோசகராகவும் பணியாற்றி வந்தார்.

காலஞ்சென்ற மூதறிஞர் க.சொக்கன் அவர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் நாட்டுப் பற்றாளராக அறிவித்து கௌரவித்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழீழ அரசியல்த்துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மூதறிஞர் சொக்கன் அவர்களது மறைவுச் செய்தி ஈழத் தமிழ் மக்களை பேரதிர்ச்சியிலும் துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது என்றும் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்மொழி, இன, சமுதாய மேன்மையை இலக்காகக் கொண்ட நூற்றுக் கணக்கான இலக்கியங்களைப் படைத்து தமிழ் இலக்கிய உலகில் பெரும் புகழ் பெற்று விளங்கியவர் மூதறிஞர் சொக்கன் அவர்கள். அவரது படைப்புக்களிற்காக பல்வேறு நிறுவனங்களினதும் அமைப்புக்களினதும் பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்ற போதிலும் அடக்கமாகவும், அமைதியாகவும் இருந்து தமிழ்ப் பணியாற்றி வந்தார். என்று புகழாரம் சூட்டப்பட்டுள்ளது.

தமிழ் மொழியை உயிரிலும் மேலாக எண்ணிச் செயற்பட்ட அவர், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தமிழீழக் கல்விக் கழகம், தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை, கலை பண்பாட்டுக் கழகம் ஆகியவற்றோடு இணைந்து முதுமைக் காலத்திலும் தமிழ் மொழிக்கும் இனத்துக்கும் ஆற்றிய பணி அளப்பரியது என்றும் நோய் வாய்ப்பட்டிருந்த போதிலும் அவற்றைப் பொருட்படுத்தாது அரும் பணியாற்றி வந்த அன்னாரின் திடீர் மறைவு எமக்கு பேரதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றது. நாட்டுப் பற்றோடு அவர் ஆற்றிய அரும் பணியை நினைவில் நிறுத்தி அன்னாரை நாட்டுப் பற்றாளராக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு அறிவிக்கை செய்வதுடன் அவருக்கு இறுதி வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றது. என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த மூதறிஞர் சொக்கன் அவர்களுக்கு எரிமலை தனது இதய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருபா




# சுதந்திரமான மனித உரிமை ஆணைக்குழு

ஓர் நாட்டில், ஒழுங்கையும், சட்டத்தையும் நிலைநாட்ட காவற்துறையும், நீதிமன்றங்களும் தமது பங்கையாற்றும் வேளையில் அந்நாட்டில் ஓர் சுதந்திரமான மனித உரிமை ஆணைக்குழு அல்லது நிறுவனம் அல்லது மனித உரிமைக்கண்காணிப்பாளர் செயற்படவேண்டியது மிக அவசியமென சர்வதேச வரையறைகள் கூறுகின்றன

தமிழீழ மக்கள் மீதான சிறீலங்கா அரசுகளின் மனித உரிமை மீறல்களான சுயநிர்யண உரிமை மறுப்பு, கைது, சித்திரவதை, படுகொலைகள், பாலியல் வன்முறைகள் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குமேல் நடந்தபோதும், இம்மனித உரிமை மீறல்களை எந்தவொரு சர்வதேச உரிமையமைப்போ, ஸ்தாபனமோ ஒழுங்கான முறையில் பட்டியலிடவோ அறிக்கையாக்கவோ, ஓர் சுதந்திரமான விசாரணைக்குழுவை அமைக்கவோ முன்வராதது பெரும் வருத்தத்திற்குரிய விடயம்.

ஆனால் மாறுபட்ட சிறீலங்கா அரசுகளோ தத்தமது காலங்களில் தமிழீழ மக்கள் மீது, தமது அட்டூழிய இராணுவத்தை கட்டவிழ்த்துவிட்டு செய்த மனிதாபிமானமற்ற செயல்களைப் பார்த்து சர்வதேச சமுதாயம் ஏளனம் செய்யப்படாது என்பதற்காக பலவிதப்பட்ட கண்துடைப்பு விசாரணைக் குழுக்களை நியமித்து உலகத்துக்கு கண்கட்டுவித்தை காண்பித்ததை யாவரும் அறிந்தது.

இதன் கண்துடைப்புக்களில் ஒன்றாக கடந்த சில வருடங்களாக 'தேசிய மனித உரிமை ஆணைக்குழு' என்ற ஓர் அமைப்பை நிறுவி, தொடர்ந்தும், தமிழீழ மக்கள் மீதான மனித உரிமை மீறல்களை விசாரிப்பதுபோல் பாசாங்கு செய்து வருவதும் யாவரும் அறிந்ததே.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையில் தமிழீழ மக்களினால், கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்படும் விடுதலைப் போராட்டமானது, தமிழீழ மக்களுக்கு ஓர் அரசை தமிழீழ நிலப்பரப்பில் எழுபதுவீதமான பிரதேசங்களில் பலவிதப்பட்ட கட்டமைப்பு களை உருவாக்கியது.

இந்த அடிப்படையில், சட்டத்தையும் ஒழுங்கையும் தமிழீழ பிரதேசங்களில் நிலை நாட்டுவதற்காக, 1990ல் தமிழீழக் காவற்துறையும், 1993ல் தமிழீழ நீதி மன்றங்களும் உருவாகி, கடந்த ஒரு சகாப்தத்துக்கு மேலாக தமிழ் மண்ணில் தமிழீழ மக்களின் நிறைவான ஆதரவுடன் இயங்கி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நாட்டில், ஒழுங்கையும், சட்டத்தையும் நிலைநாட்ட காவற்துறையும், நீதிமன்றங்களும் தமது பங்கையாற்றும் வேளையில் அந்நாட்டில் ஓர் சுதந்திரமான மனித உரிமை ஆணைக்குழு அல்லது நிறுவனம் அல்லது மனித உரிமைக் கண்காணிப்பாளர் செயற்படவேண்டியது மிக அவசியமென சர்வதேச வரையறைகள் கூறுகின்றன.

இதன் அடிப்படையில் 2004ம் ஆண்டு யூலை மாதம் 9ம் திகதி, ஓர் சுதந்திரமான தமிழீழ மனித உரிமை ஆணைக்குழு 'வடக்கு கிழக்குக்கான மனித உரிமை செயலாகும்' (NORTH EAST SECRETARIAT ON HUMAN RIGHTS - NESOHR) உருவானது.

இவ் அமைப்பு வழக்கறிஞர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சமயத்தலைவர்கள், மனித உரிமையாளர் போன்றோரை அங்கத்தவர்களாக கொண்டதுடன் வண பிதா எம். கருணாரட்ணம் அவர்களைத் தலைவராகக் கொண்டு, கிளிநொச்சியில் உள்ள கரடிப்போக்கு சந்திக்கு அருகாமையில் A9 றோட்டில் இயங்குகிறது.

இவ் அமைப்பு, மிகவும் சிரமமான, ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான தமிழீழ மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களைச் சேகரிக்கப்போவதெனில் இந்த வேலை பழுவை சமாளிப்பதற்காக சில பல்கலைக் கழக பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்தியுள்ளனர்.

இந்த அமைப்பின் ஆலோசகர்களாக வெளிநாட்டைச் சேர்ந்த சில நீதிபதிகளும், சர்வதேச வழக்கறிஞர்களும், பல்கலைக் கழக பேராசிரியர்களும், மனித உரிமையாளரும் கடமை புரிகிறார்கள்.

இந்த அமைப்பின் முதற்கட்ட வேலையாக, மற்றைய சர்வதேச மனித உரிமை, மனித அபிமான அமைப்புகளுடனான நட்புறவை வளர்க்கும் பணி ஆரம்பமாகியுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் முதல் வாரம் இவ் அமைப்பின் அங்கத்தவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பிரிவைக் கொண்ட ஜெனிவாவுக்கு விஜயம் செய்து அங்கு பல தரப்பட்ட சர்வதேச மனித உரிமை அமைப்பின் பிரதிநிதிகளையும், ஐ.நா. சபையின் மனித உரிமை பணிப்பாளர்களைச் சந்தித்து பல தரப்பட்ட உரையாடல்கள் கூட்டங்களை நடத்தியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிறுவனம் காலத்தின் தேவையை பூர்த்தி செய்யப்போகிறது என்பது இதனுடைய ஆரம்ப செயற்பாட்டிலிருந்து தெளிவாகிறது.







மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் 5ம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு 07.01.2005 அன்று மாலை 6.30 மணிக்கு பாரிஸ் லாச்சப்பல் முத்துமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் தமிழர் மனித உரிமைகள் மையத்தினால் நடாத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2ம் லெப்ரினன்ட் தமிழழகி

# காவியம்

## அணையாத தீபங்கள்



2ம் லெப்ரினன்ட் தமிழழகி, மிக இளைய பராயத்திலேயே அறிவியல் புத்தகங்களிலிருந்து ஆராய்ச்சிப் புத்தகங்கள் வரையிலும் சிற்றிதழ்களிலிருந்து சிறுகதைகள், நாவல்கள் ஈறாக ஊடாடிய உயரம் அவள்.

அவளது வாசிப்பாற்றலே, அவளது பல்துறை ஆற்றலினதும் அளவுகோல். புத்தகம் என்றால் சந்தடி இன்றி சமாதியாகி விடுவாள். ஊண், உறக்கம் எல்லாமே அடுத்த பட்சம், கடமை மட்டும் நீங்கலல்ல.

கடமை நீங்கல் ஆகையில், காணிக்கை அதிகம் வேண்டியிருக்கும். ஓய்வொழிச்சல் நேரங்கள் இரையாகும். நித்திரா தேவிக்கு நிந்திப்பு நடக்கும். நள்ளிரவு தாண்டியும் வாசிப்பு நீளும். அதிகாலையும் கண்டு, அடுத்தநாள் கடமையையும் அரவணைத்த நாட்கள் அவள் பதிவில் இருக்கிறது.

தன் பணிசார்ந்த வேலையோ எதுவோ எடுத்த காவடி ஆடி முடித்துத்தான் இறக்கப்படும். இரவுபகல் மாற்றங்கள் அவளை வரையறுத்துக் கொண்டதில்லை. கற்பதில் ஆர்வம்; எப்பவும் சாதிக்கவேண்டும் என்ற ஓர்மம்; எவ்வேலையானாலும், வேளையானாலும் கற்றுத் தனித்தியங்கும் துடிப்பு.

சமையலிலும் சமர்த்து. தொடர்சமையல்தான் பணியென்றாலும் சலியாத சிருஸ்டி பலமைல்கள் பொதி சுமந்தும் பொசுங்காத பூரிப்பு. கோபம் கோலமிடுக் கண்டதில்லை. வயதுக்கு மீறிய வளர்த்தி மட்டுமல்ல வனப்பும் ஆர்வ வளமும் அவளிடம்.

துன்பப்படுபவர்கள், பெரியவர்களோ - சிறியவர்களோ, பொறுப்பாளரோ பணியாளரோ மந்திராலோசனை நடக்கும் ஒவ்வொன்றையும் எப்படி எதிர்கொள்ள வேண்டுமென்றே எதிர்வு கூறல்கள், விளக்கங்கள், வியாக்கியானங்கள் முன்மொழியப்படும். சிறியவளிற்குள் இருக்கும் சீமாட்டி வெளிப்பட்டு கட்டிப்போடும் துணுக்குற்றவரை.

ஆச்சி அளந்துகொண்டே போவாள்.

அவள் அடிப்படைப்பயிற்சி முடித்து வெளிவந்தபோது, அவள் வயதை ஒத்தவர்கள் அடிப்படைக்கல்வி பெற தேர்வாக்கப்பட, அவள் கணிணிக்கற்கை நெறிக்காய் தேர்வானாள். கணிணியைக் கற்றுக்கொண்டே கடமையைத் தொடர்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் வேலைகளின் ஐக்கியம், ஆழ அகலப் பரிமாணங்கள்; பொருத்தங்கள் - முரண்களாய் வெளிப்படுத்தப்படும்.

போராட்ட வாழ்வில் அலுவலகப் பணியென்பது அதிமுக்கிய பணியாகிறபோதும் பற்றிப்பிடிக்கச் செய்யும் பணியன்று. போர்களப் பணிக்காய் தாக்கல் செய்ய வைக்கும் மகிமை அதற்குண்டு.

தமிழழகிக்கு மட்டும் விதிவிலக்கு. ஞாபகத்திரையில் அத்தனையும் டாலடிக்கும். பணிச்சிரத்தையின் பரிசு என்று பாராட்டுதல் வேறு கிடைக்கும். அசிரத்தை அவளிடம், தன்னைக் கவனத்தில் கொள்வதில் மட்டுமே. 'டக்(Duck) 'டக்கி' என்று செல்லமாயும் காரணமாயும் (வாத்துப் போன்று நடப்பதனால்) அழைக்கப்படும் அவள் டக்கேதான்.

ஓயாத அலைக்கரம் அகன்று கொண்டபோது சண்டை அனுபவத்திற்கான வாய்ப்பு அவளுக்கும் வாய்த்தது. நிர்வாகப் பணியிலேயே நிலைத்து விட்டவளுக்க சுட்டதீவுக் களம் சுக்கான் கொடுத்தது.

"அக்கா அப்படியே கிடக்கட்டும் நான் வந்து கவனிக்கிறன். "திரும்பத்திரும்பச் சொல்லிப்போன அவள் வார்த்தைகள் எதிரொலிக்க அவள் வருகைக்காய் யாவும் அப்படியேதான் இருந்தது.

இந்தச் சண்டையில் நான் செத்திடவேணும் எண்ட வெளிப்பாடுகளுக்கு நடுவில் அவள் உறுதியாய்ச் சொன்னாள் "நான் சாக விரும்பேல்ல; சாதிக்க வேணும்; வாழவேணும்; வருவன்; வருவன்; என்று.

18.03.1999 களமிறங்கினாள் 17. 04.1999 வரலாறாகிப் போனதாய் கிளிநொச்சி பரந்தன் சுட்டதீவுப் பகுதியில் இடம்பெற்ற எதிர்பாராத நேரடி மோதல் சொன்னது.

காலத்தின் கட்டளையில் கடமையுணர்ந்தவள். கட்டுமானப் பணிக்காய் 3 வருடங்கள் கணிப்பொறியில் கணிப்புச் செய்தவள். கால நீட்சியில் கடமை நீட்ட காலன் கணக்கு வைக்க வில்லை. அவள் தண்டனை பெற்று, தட்டி நிமிர்த்தப்பட்டது. மிகக் குறைவு. சுயதிட்டமிடலில் பணி பகிர்ந்து பணி இலகுவாக்கும் பக்குவத்தால் எப்பணியும் அவளுக்குப் பஞ்சு.


முடியாது என்பது அவள் அகராதியில் கிடையாது. 'அவளும் ஜெனரேட்டரும்' என்று ஒரு கதையே எழுதலாம் என்று தோன்றும் அவள் ஜெனரேட்டர் ஸ்ராட்' செய்ய எடுத்துக்கொண்ட முயற்சியை நினைக்க.

ஆண் போராளிகளே வழமையாக அந்த 'ஜெனரேட்டரை' ஸ்ராட் செய்யதுகொள்வது வழக்கம். அன்று இவள்தான் 'ஸ்ராட்' செய்வதாய்ச் சென்றாள். சாதாரண பொறிகளைவிட இயல்பான இயக்கத்தில் இயக்கம் பெறும் இயல்பை அது இழந்தே இருந்தது. அவள் விடுவதாய் இல்லை. அன்று முழு நாள் அதே முயற்சியிலேயே அவள்.

முயற்சி வெற்றியாய் முடிந்ததிலிருந்து அதன் இயக்குநர் அவளேதான். காலம் மட்டும் ஆயுட்காப்புறுதி செய்திருக்குமானால் கனதியாய் அவள் சேவையைத் தாயகம் பெற்றுப் பெருமைப்பட்டிருக்கும்.

அகநிலா

# மாலிகா கவிதை



ஐயோ வேண்டாம் ஆளைவிடு.
எனக்கிப்போ வேண்டுவதெல்லாம்
மனிதவாடையற்ற ஒரு வெளி.
இல்லையேல் ஒரு வயல்,
குறைந்தது ஒரு தெரு
சும்மா உலாத்தத்தான்.
ஆட்களும் ஆரவாரங்களும்
ஏனோ அலுத்துவிட்டது.
இருப்பது,
கதைப்பது,
சிரிப்பது.
எத்தனை காலத்துக்கென்றுதான்
இவையே நானாவது!
அவிந்து போனது நெஞ்சு.
பூவோடு மணிக்கணக்காகப் பேசலாம்
ஒரு பொல்லாப்பும் இல்லை.
நாயோடு நாட்கணக்காகப் பேசலாம்
எந்தப் பிரச்சினையும் எழாது.
மனிதர்களுடன் பேசுவோமெனில்
முகமூடி,
உருமறைப்புச் செய்த வார்த்தைகள்,
சிரிப்பது போன்ற பாவனை
இவற்றுடனல்லவா இருக்கின்றனர் முன்னால்
எப்படிப் பேசலாம் இவர்களுடன்!
பேசலாம்,
எனக்கும் வேண்டும் முகமூடி,
உருமறைப்புச் செய்த வார்த்தைகள்,
சிரிப்பது போன்ற பாவனை
வேண்டுமா இந்த வதை!
ஐயோ வேண்டாம் ஆளைவிடு,
ஒரு வெளி,
ஒரு வயல்,
குறைந்தது ஒரு தெரு வேண்டும்
சும்மா உலாத்தத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிதம்பரம் சொன்ன சேதி

முல்லை யேசுதாசன்

கே.கே. எஸ் பொலிஸ் ஸ்ரேசனில் இருந்து வாகனங்கள் மாதகலுக்கு போகிறதும் வருகிறதுமாய் பெரிய அமளி. லோறன்ஸ் அண்ணருக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை.

'இரவுக்கு கடற்கரை நீளம் கட்டாயம் ஆமி ரோந்தில வருவான். கடலில நிக்கிறவங்களுக்கு என்னண்டு தகவல் சொல்லுவது? கட்டுமரம் ஒன்றை தயாராக வைத்திருந்தார் அவர். வள்ளச்சத்தம் கேட்டால், உடனே மரத்தை இறுக்கிக்கொண்டுபோய் சொல்லிப்போடோணும், வள்ளக்காரன் 'சிக்னல்' தரமுந்தி நாங்கள் கரையை இருந்து 'சிக்னல்' குடுக்கோணும்.' பதறிக்கொண்டிருந்தார் லோரன்ஸ் அண்ணர்.

லோரன்ஸ் அண்ணர் மட்டுமல்ல, யாழ்ப்பாணம் முழுவதுமே அப்படித்தான் இருந்தது. கடற்கரையோரப்பகுதிகள் அதைவிடமோசம். வீதிகளில் ஒருவரையுமே காணக்கிடைக்காமல் இருந்தது. வீடுகளுக்குள் அடைந்துகொண்டு 'வால்வுரேடியோ'க்களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தி கேட்டுக்கொண்டு 'அது சரிதான்' என்று சொல்லிக்கொண்டும், சந்தோசப்பட்டுக்கொண்டும் சனம்.

'துரையப்பாவை சுட்டுப்போட்டாங்களாம்' ஆர் சுட்டது எவர் சுட்டது என்று ஒருவருக்குமேதெரியாது. கரையில் ஆமி, பொலிஸ் ரோந்தைவிட கடலிலேயும் 'நேவி' ரோந்து கூடிப்போச்சு.

மாதகலில் அல்லது மாரீசன் கூடல் கடற்கரையில் இல்லையென்றால் சேந்தாங்குளத்தில்தான், சாமான்களை இறக்குவது என்று திட்டம். ஆனால் இப்ப தப்பித்தவறி மாதகலில் சாமான்களை இறக்கினால் அவ்வளவுதான். சிதம்பரத்தார் மூளைசாலிதான். எங்ககொண்டுபோய் இறக்கப்போறாரோ? என்று பயந்துகொண்டிருந்தார் லோரன்ஸ் அண்ணர்.

அன்று இரவு முழுவதும் லோரன்ஸ் அண்ணர் காவல் காத்ததுதான் மிச்சம், போட் வரவில்லை. பதற்றம் அவருக்குக் கூடிப்போய்விட்டது. பகல் தன்னுடைய ஆட்களை சிதம்பரத்தார் சாமான் இறக்கக்கூடிய எல்லாக் கடற்கரைக்கும் அனுப்பியும் பதில் ஒன்றும் நல்லதாக வரவில்லை.

மச்சான் சிதம்பரத்தை அவனுடைய எண்ணத்துக்கு அனுப்பினது பிழைச்சுப்போச்சு. 'அவன் ஒரு சிறுக்குப்பிடிச்ச ஆள். பயமென்ற சாமானே இல்லை. இன்னமும் என்ன செய்யிறானோ' பேசிக்கொண்டேயிருந்தார்.

'வள்ளத்தில் சாப்பாட்டுப்பிரச்சினை இல்லை. எஞ்சின் பழுதாய்ப்போக வாய்ப்பில்லை, இன்னும் ஏன் வரேல்லை? இந்திய வள்ளக்காரன் சாமான் கொண்டு வரேல்லையோ? இல்லாட்டி நேவியிட்டை மாட்டுப்பட்டுப்போச்சோ? சீ நேவிபிடிக்கேலாது. பிடிச்சாலும் தங்குகடல், வந்தநாங்கள் என்று சொல்லி தப்பிறதுக்கு வள்ளத்தில திருக்கைவலையும் ஏத்திக்கிடக்கு.'

இம்முறை லோரன்ஸ் அண்ணர்தான் போகிறது என்றிருந்தது. ஆனால் இந்தமுறை வெடிமருந்துச்சாமான்கள் கூடுதலாக ஏத்தவேணும் என்றபடியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரத்தாரை அனுப்பினது. 'அவர் ஆரையும் பேக்காட்டிப்போட்டு வரக்கூடிய ஆள்.'

வெடிமருந்துச்சாமான்கள் ஏற்றுவது லோறன்ஸ் அண்ணனுக்கு விருப்பமில்லை. சிதம்பரத்தார்தான் அந்த ஓடர்கள் எல்லாம் எடுக்கிறது. வேண்டாம் என்றாலும் கேட்கமாட்டார். நான் நல்லதுக்குத்தான் இதைச் செய்யிறன் என்பார். முன்னெல்லாம் தனியே வள்ளங்கள் வைத்து கடத்தல் தொழில் செய்தவர், இப்போது இதையெல்லாம் கைவிட்டு விட்டார். காசு இல்லாதவர் என்றில்லை - ஆனால் பிள்ளைகள் இல்லை, சொத்தெல்லாம் தங்கச்சியினுடைய பிள்ளைகளுக்கு- லோரன்சருடைய பிள்ளைகளுக்கு எழுதிப்போட்டார், பின்பு ஏன் கடத்தலுக்கு ஓட்டியாகப் போகவேணும். லோரன்ஸ் அண்ணருக்கு சந்தேகம். ஒரு கறுவல்பெடியன் இடைக்கிடை வருவான், அவன் வந்தால் வெடிமருந்துகளுக்குத்தான்- அன்றைக்கு அவர்தான் கடத்தலுக்கு வெளிக்கிடுவார்.

அந்தக் கறுவலுக்கு வெடிமருந்து ஏத்திக்குடுக்கிறதில் எந்தலாபமும் இல்லை, பீடியிலையோ அல்லது சாறமோ ஏற்றினால் நல்லவருமானம். முன்பெல்லாம் வெடிமருந்து கொணர்ந்தால், கிணற்று வெடிகாரருக்கும் மீன் வெடிகாறருக்கும் நல்ல விலைக்குக் கொடுக்கலாம். ஆனால் இப்போ அவர்களுக்கு சிதம்பரத்தார் வெடிமருந்து விற்கிறதில்லை.

இப்போ வெடிமருந்து ஏற்றுவதும் விற்பதும் சிதம்பரத்தார்தான். "ஆர் அந்தக்கறுவல்' என்று கேட்டால் தெரியாதென்பார். உண்மையில் அவருக்குத் தெரியாதுதான். ஆனால் அதுக்கு ஏன்தான் மினக்கெட்டு ஏற்றிக்கொடுக்க வேண்டும் என்றும் தெரியவில்லை லோரன்சுக்கு.

துரையப்பாவைச் சுட்டுப்போட்டீங்கள் என்று சொன்னால் சந்தோசப்படுவார் சிதம்பரத்தார். கொஞ்ச நாட்களுக்கு முன்பு சொன்னவர் 'உவன் துலையப்போறான்' என்று. அந்தாள் சொன்னால் உண்மையாக நடக்கிறது.

முன்பு சிதம்பரத்தார் ஒரு கெட்ட ஆள். யாழ்ப்பாணத்துப் பெரிய சண்டியன். எவனையும் வெட்டியால் ஒரு வெட்டுத்தான். இரண்டு மூன்று பேர்கள் வந்தால் தாறுமாறுதான். ஒரு வெட்டு வெட்டினால் கோபத்தில் செய்தது, கனபேருக்கு வெட்டினால் தற்பாதுகாப்புக்கு செய்தது. சட்டங்களுக்குள்ளேயும் லஞ்சங்களுக்குள்ளேயும் நுளைந்து வந்தவர்.

முன்பெல்லாம் அவர் கட்சி, கொடி என்றும் அலைந்த ஆள்தான். 'அவரை ஆர் முதல் கூப்பிடுறானோ அவனுக்குத்தான் எல்லா உதவியும். அரசாங்கத்திற்கும் வால்பிடிச்ச ஆள்தான். ஒருதடவை யாருடையதோ பிறந்தநாளுக்கு நல்ல தண்ணியில் எம்.எஸ் பெர்னாண்டோவின் 'லக்சன் றோசமல் லக்சன்' என்ற பாட்டுக்கு டான்ஸ் ஆட்டிக்கொண்டிருக்கும்போதுதான் துரையருடைய காருக்குள்ள குண்டு வெடிச்சது. அதோடுதான் கொஞ்சம் யோசிக்கத்தொடங்கினவர். தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அவரும் போனவர். அப்போதுதான் அரசியல்வாதிகள் என்றாலே வெறுத்தது. அத்தோடு மெல்ல மெல்ல மாறினவர்தான்.

சிதம்பரத்தார் அப்போ கார்வைச்சிருந்தவர். காரில்லை. ரைக்சி மேல் கூட்டுக்கு மஞ்சள் பெயின்ற் அடிச்ச மொறிஸ் மைனர்க்கார் மீற்றர் பூட்டியது.

ஒன்று சிறி, இருபத்து மூன்று பத்து என்றால் எல்லாப்பொலிசுக்கும் தெரியும், அது கடத்தல் சாமான் ஏற்றுகிற கார் என்று. அது சிலவேளைகளில் நம்பர் பிளேட்டடையும் மாற்றிக்கொண்டு போகும். மாறி மாறி வருகிற ஒவ்வொரு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் சிதம்பரத்தாரை பிடிக்கத் திட்டம் போடுறதுதான். எல்லாம் கூடுதலான லஞ்சம் வாங்கலாம் என்றுதான்.

சிதம்பரத்தாரோ மனைவியிடம் கொஞ்சம் பீடி இலையை கொடுத்துவிட்டு கஸ்டம்சுக்கு அறிவிப்பார். கஸ்ரம்ஸ்காரன் வந்து பிடிப்பான். குற்றம் கட்டி வெளியிலெடுப்பார். அந்த 'றிசீற்'றை வைத்துக்கொண்டே நாலைந்து தடவை கொழும்புக்கு கடத்தின சாமான்களை ஏற்றிப்போடுவார்.

லோரன்ஸ் அண்ணனுக்கு சரியான கோபம். மனைவிக்கு பேசிக்கொண்டிருந்தார்.

'கொண்ணனுக்கு சாமான் ஏத்திறது சரிவராட்டி விட்டுவிட்டு வாறதுதானே, பேந்தென்ன கடனுக்கு கிடக்கிறான் பேயன்' அவ முறைக்க இவர் பேசாமல் இருந்திட்டார்.

காலையிலதான் இரண்டு பொலிஸ்காரர்கள் சிதம்பரத்தாரை விசாரித்துவிட்டுப்போனார்கள். லோரன்ஸ் 'அவர் கொழும்புக்கு போய்விட்டார்' என்று சொல்ல வந்தவுடன் ஸ்ரேசனுக்கு வரச்சொல்லிவிட்டு போனார்கள். செபஸ்திசொன்னான், 'யேசுராசாவுக்கும் யோசப்புக்கும் நல்ல அடியாம். அடைச்சுவைச்சிருக்கிறாங்களாம்.' அவர்களும் பழைய கடத்தல்காரர்கள்தான். இந்த நேரம் சிதம்பரத்தார் அகப்பட்டால் அவ்வளவுதான்.

இரவிரவா நித்திரை விழித்துவிட்டு விடியற்காலையில அக்காவிடம் போய் விடயத்தை சொல்லுவம் என்று சிதம்பரத்தார் வீட்டுக்குப் போனால் அங்கே சிதம்பரத்தார் கட்டிலில் படுத்திருக்கிறார்.

சிதம்பரத்தாரை லோரன்ஸ் எழுப்பி 'என்ன மச்சான் என்ன நடந்தது' என்று பதட்டப்பட்டார். ' இப்ப ஏன்ரா அந்தரப்படுறாய் சாமான் எல்லாம் கொழும்புத்துறையில இறக்கிட்டன். அதுபோய் சேரவேண்டிய இடத்திலயும் சேந்திட்டுது'

'அதென்னண்டு கரையில நடக்கிறதெல்லாம் உனக்கு கடல்ல தெரியும்'

'ஏனடா என்ன நடந்தது' அச்சரியமாகக் கேட்டார் சிதம்பரத்தார்.

'துரையை சுட்டாச்சு. மாதகல் ரோட்டைப் பாக்கமாட்டாய். அவ்வளவு பொலிஸ்'

'துரையை சுட்டுட்டாங்களோ?' அவர் எதிர்பார்த்ததுதான்.


'ஆராம் சுட்டது'

'என்னட்டை கேக்கிறாய்'

'சுடுவாங்கள் எண்டு எனக்கு தெரியும்'

லோரன்ஸ் ஆர்வமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

இலங்கையை குடியரசா பிரகடனப்படுத்தேக்க இந்த எம்பிமாரெல்லாம் அந்த அரசமைப்புக்கு சார்பாக கையெழுத்துப்போட்டவங்களெல்லே



*இப்பவெல்லாம் தமிழ்த்துரோகிகளை அழிக்கிறதுக்கு தமிழனாகப் பட்டவங்கள் எல்லோருமே மனதுக்குள்ள அங்கீகாரம் கொடுத்திட்டாங்கள். ஒருத்தருக்கு ஒருத்தர் தெரியாமல் அந்தப் பெடியளுக்கு ஆதரவும் கொடுக்கத் தொடங்கி விட்டார்கள். 'நீயும் தானே' என்றார் லோரன்ஸ் அண்ணர். இடைமறித்து சிதம்பரத்தார் 'நானும் இப்ப இளந்தாரியாய் இல்லையென்றுதான் கவலை' என்றார்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பவே தமிழ்ச் சனத்தின்ர துரோகியாய்ப் போயிற்றாங்கள் அவங்கள்.

சின்னப் பெடியங்கள் கொஞ்சப்பேர் சேர்ந்து பஸ்சுகளை கொளுத்தியும் எம்பிமாருடைய வீடுகளுக்கு குண்டெறிஞ்சு பயமுறுத்தியும் எதிர்ப்புக் காட்டியும் அவங்கள் திருந்தேல்லப்பார்.

துரையரும் ஒரு துரோகிதான். அவரையும் அவங்கள் பயமுறுத்திப் பாத்தவங்கள். அவரும் திருந்தேல்ல. அதுக்குப்பிறகும் எத்தினைய நடத்திப்போட்டார். தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு பார்க்கவந்து பயந்து ஓடினவனுக்கு தெரியும். அந்தப் பயங்கரம். எத்தினை சனங்களை சாகவிட்டவங்கள்.

இப்பவெல்லாம் தமிழ்த்துரோகிகளை அழிக்கிறதுக்கு தமிழனாகப் பட்டவங்கள் எல்லோருமே மனதுக்குள்ள அங்கீகாரம்



*'துரோகியளை கொல்லுறது பாவமில்லை'*

*'இதால உங்களுக்கொண்டும் வரப்போறதில்லை' கத்தினான் அர்னோலிஸ்.*

*'எனக்கொன்றும் வராதுதான். தமிழன் அத்தனை பேருக்கும் ஒரு ஆறுதலாவது வரும்' 'நான் அரசாங்க உத்தியோகஸ்தன். அரசாங்கத்திற்கு விசுவாசமா வேலை செய்யோணும்.'*

*'செய். எனக்கு அதைப்பற்றி பிரச்சனை இல்லை. நானும் என்னால செய்ய முடிஞ்சதை அவங்களுக்கு செய்யத்தான் வேணும்'*

*'அப்ப தொடர்ந்தும் அதைச் செய்யத்தான் போறீங்களே'*

*'ஓம்' ஒற்றைப்பதிலில் அழுத்தமாகச் சொன்னார் சிதம்பரத்தார்.*

கொடுத்திட்டாங்கள். ஒருத்தருக்கு ஒருத்தர் தெரியாமல் அந்தப் பெடியளுக்கு ஆதரவும் கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள். 'நீயும் தானே' என்றார் லோரன்ஸ் அண்ணர். இடைமறித்து சிதம்பரத்தார் 'நானும் இப்ப இளந்தாரியாய் இல்லையென்றுதான் கவலை' என்றார்.

'சிதம்பரம், செய்யிறது ஒன்றும் நல்லாயில்லை. நேற்று பொலிஸ்காரர் ரெண்டுபேர் உன்னை வந்து விசாரிச்சுக்கொண்டு போறாங்கள். உன்ன ஸ்ரேசனுக்கு வரட்டாம். பழைய கடத்தல்காரர் எல்லாரையும் பிடிச்சு விசாரிக்கிறாங்களாம். நீ நாளைக்கு கொழும்புக்குப் போயிடு. நான் உன்னை கொழும்பில எண்டுதான் சொன்னான்.' என்றார் லோரன்ஸ் அண்ணர்.

'டேய் நிலவுக்குப் பயந்து பரதேசம் போறதில்லையடா. பாப்பம். நான் ஒருக்கா அவங்களப்போய் பார்கிறதுதான்'

வாசலில் அந்தக் கறுவல் பெடியன் காசோடு நின்று கூப்பிட்டான். சிதம்பரத்தார் பொலிஸ்ரேசனுக்குள் நுளையும்போதே அடிவிழுகிற சத்தமும் கத்துகின்ற சத்தமும் கேட்டுக்கொண்டேயிருந்தது. உள்ளே யோசப்பை ஒருவாங்கினில் குப்புறப்படுக்கவைத்து கால் பாதத்தின் முன்பகுதியை வாங்கின் விளிம்பில் தடையாக வைத்துவிட்டு குதிக்காலில் அடித்துக்கொண்டிருந்தான் ஒரு பொலிஸ்காரன். உயிர்போகும் வலியில் கத்திக்கொண்டிருந்தான் யோசப்பு.

வெளியில் வந்த இன்ஸ்பெக்டர் சிதம்பரத்தாரைக் கண்டு அவரையே கொஞ்சநேரம் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு ' என்னை தெரியுமா' என்று கேட்டான். 'அர்னோலிஸ்தானே நீ' தலையாட்டினார் சிதம்பரத்தார். சிதம்பரத்தாரை அர்னோலிஸ் சந்தித்தது தற்செயலாகத்தான். அர்னோலிஸ் கான்ஸ்டபிளாய் இருந்தபோது நடந்த சந்திப்பு.

இரவே, 'போட்'டில் வருகிற சாமானை இறக்குவதற்கு, சிதம்பரத்தார் யோசப்பையும் ஏற்றிக்கொண்டு முதலே புறப்பட்டு விட்டார், பின்னால் லொறியை வரச்சொல்லிவிட்டு, அந்தநேரம் நாச்சிக்குடா வலைப்பாட்டு பக்கம்தான் சாமான் இறக்க வசதி.

பூநகரி ரோட்டில எந்தவாகனமும் இல்லாமல் ரோட்டு வெளித்துக்கிடந்தது. வாகனத்தை அந்தக்காட்டு ரோட்டில் நிறுத்திவிட்டு கொஞ்சநேரம் நின்றார்கள். நேரம் போகட்டுமென்று, அந்தநேரம்தான் அந்தப் பொலிஸ் ஜீப் வந்தது. வந்த ஜீப் காரைக்கண்டவுடன் நிறுத்திவிட்டது. பொலிஸ்காரர்கள் இறங்கியது காருக்குள் எட்டிப்பார்த்தார்கள். சாராயப்போத்தல்களும், பியர்ப்போத்தல்களுமாய் நிரம்பியிருந்தது கார்.

'எங்க போறீங்கள்' இன்ஸ்பெக்டர் கேட்டார்.

'வாடிக்குப் போறோம்' யோசப் சொன்னார். 'பொய் சொல்லவேண்டாம் நீங்கள் எங்கபோறீங்கள் என்று எனக்குத் தெரியும், கடத்தல் சாமான் இறக்கத்தானே' 'இல்லை' யென்றான் யோசப் அவசரமாய். அந்தநேரம்தான் லொறியும் பின்னால் வந்துகொண்டிருந்தது. அர்னோலிஸ் ஓடிப்போய் கொஞ்சத்தூரம் முன்னுக்கே லொறியை மறித்தான். சிறிது நேரம் அவர்களுடன் ஏதோ பேசினான். திரும்ப வந்து இன்ஸ்பெக்ரருடன் தனியே கதைத்தான்.

இன்ஸ்பெக்டர் சிதம்பரத்தாரிடம் வந்து 'லொறிக்காரர் உங்கட ஆக்கள்தானாம். எல்லா விசயமும் சொல்லிப்போட்டாங்கள். என்ன சாமான் இறக்கப்போறீங்கள் எங்க இறக்கப்போறீங்கள்' சாதாரணமாகத்தான் கேட்டான். யோசப் உடனடியாக மறுத்துச் சொன்னான். 'எங்களுக்கு லொறிக்காரரைத் தெரியாது, நாங்கள் வாடிக்குப்போறம்', இன்ஸ்பெக்டர் ஏழனமாய் சிரித்தான். 'நாங்கள் இப்ப என்ன கேக்கிறம் எங்களையும் கவனியுங்கோ' என்றுதானே.

சிதம்பரத்தாருக்கு நன்றாய் விளங்கிவிட்டது. எங்களை மடக்கிப்போட்டாங்கள் என்று. யோசப்புச் சொன்னார் 'எவ்வளவு வேணுமெண்டு கேள்' என்று. 'ஒரு இலட்சம்' இன்ஸ்பெக்டர் சொன்னான்.

'என்ன விளையாடுறீங்களே' சிதம்பரத்தார் ஒரு சாராயப்போத்தல் எடுத்து உடைத்து கிளாசில் ஊற்றிக் குடித்துவிட்டு யோசப்பிடம் கொடுத்தார்.

'ஒரு ஐம்பது' இன்ஸ்பெக்டர் சொன்னான். 'என்னடா சாமானே இறக்கேல்ல இதுக்குள்ள பேரம்பேசிறீங்கள்? இருபத்தைந்து தரலாமென்று சொல்லடா. காசு பெரிசில்லை. ஆனால் ஆரண்டாலும் ஒரு பொலீஸ்லொறியில மதவாச்சிக்கரைக்கும் போய் சாமானை அனுப்பிப்போட்டு வரோணும். சாராயத்தை குடடா யோசப்' இன்ஸ்பெக்டர் தலையாட்ட வாகனத்துள் இருந்தும் சாராயம் எடுக்கப்பட்டது.

ஒருமுறை, லோரன்ஸ் அண்ணரின் இரண்டாவது தங்கச்சியின் கல்யாண வீட்டுநேரம், கூறை, வேட்டி, சோடனையெல்லாம் இந்தியாவில் இருந்துகொண்டுவர, சிதம்பரமண்ணர் சொல்லிவிட்டார். அந்தச்செலவுக்கு கொஞ்ச 'பீடி' இலையும் போட்டுக்கொண்டு வாறது என்ற முடிவு.

லோரன்ஸ் அண்ணர்தான் இந்தமுறை போனது, ஆனால் அவர் குறிப்பிட்ட அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்துக்கு போகமுன்னமே இந்தியக் 'கஸ்ரம்ஸ்: அவரின்ர வள்ளத்தைப் பிடிச்சுப்போட்டுது. கொண்டுபோன வள்ளம் தங்கச்சியாருக்கு சீதனம் கொடுக்கவென்று புதுசாய் எடுத்த 'யன்மார் எஞ்சின்' வள்ளம். இதை திருப்பி எடுக்கிறதுக்கு வள்ளத்தினுடைய காசைவிட கூடுதலாய் லஞ்சம் தாறன் என்று சொல்லியும். கஸ்ரம்ஸ்காரன் விடவில்லை.

அந்த நேரம்தான் அர்னோலிசும் சிதம்பரத்தாரிடம் தன்னுடைய தங்கச்சியினுடைய கல்யாண வீட்டுக்கென்று காசுகேட்டவன். 'இந்த முறை சாமான் இறக்கிற லஞ்சக்காசு முழுவதையும் உனக்குத்தாறன். மற்றப் பொலிஸ்காரருக்கு நான் ஏதும் குடுத்துச் சமாளிக்கிறன்' என்றும் சொல்லிப்போட்டார்.

வள்ளம் வரவில்லை. சிதம்பரத்தாரோடு அர்னோலிசும் சேர்ந்து காத்திருந்தார்கள். வள்ளம் வரவில்லை. லோரன்ஸ் அண்ணர் மட்டும் வேறு ஒரு வள்ளத்தில் வந்திருந்தார். 'வள்ளத்தை கஸ்டம்ஸ்காரர் பிடித்துவிட்டார்கள்' என்றார்.

'டேய் அது கலியாண வீட்டிலண்டு கடலில நிக்கோணுமடா. சீதனவள்ளமெல்லோடா. ஏன்ரா அதைவிட்டுட்டு வந்தனி?' சிதம்பரத்தாருக்கு சரியான கோபம். 'நானும் எவ்வளவு காசு எண்டாலும் தாறன் எண்டு கேட்டுப்பாத்திட்டன். கஸ்டம்ஸ் பெரியவன் ஆரோ வந்து பிடிச்சதாம். வழக்குப் பதிவு செய்தாச்சாம். வேற வள்ளத்தை கட்டிப்போட்டு அதைக்கொண்டு போகட்டோ என்று கேட்டுப்பாத்திட்டன் சரிவரேல்ல'

'லோரன்ஸ் நாளைக்கு இந்தக் கரையில் வள்ளம் நிக்கோணும். ஒரு போட்டுக்கு டீசல் அடி. சாப்பாடு எடுத்துவை இரண்டுபோட்டுக்கு. சாமான் எடுத்து கரையில வைக்கச்சொல்லி எங்கட தூத்துக்குடிக்காரருக்கு அறிவி' கட்டளையிட்டார்.

லோரன்ஸ் அண்ணர் போய்விட்டார். அர்லோனிஸ் மட்டும் நின்று கொண்டிருந்தான். சிதம்பரத்தார் கையில் கட்டியிருந்த றோமர் மணிக்கூட்டைக் கழற்றி அர்னோலிசிடம் கொடுத்தார். 'இதைக்கொண்டுபோய் என்ர மனிசியிட்ட குடுத்திட்டு இருபத்தையாயிரம் வேண்டிக்கொண்டு நீ போ. இந்தக்காசை திருப்பித்தரவேண்டாம்' அர்னோலிசுக்கு என்ன நன்றி சொல்வதென்றே தெரியவில்லை. 'இதைச் சாகும்வரை மறக்கமாட்டேன்' என்றான் அர்னோலிஸ்.

இரவிரவாக தூத்துக்குடி குறைமுகத்துக்குப் போய்ச் சேர்ந்துவிட்டது வள்ளம். லோரன்ஸ் அண்ணரிடம் சிதம்பரத்தார் சொன்னார். 'நீ போய் இந்த வள்ளத்தில கல்யாணவீட்டு சாமானெல்லாத்தையும் ஏத்திக்கொண்டுபோ. இன்னொரு வள்ளத்துக்கு சாமான் எடுத்து வைக்கச்சொல்லு. உன்ர சாரத்தை தா' 'நீ என்ன செய்யப் போறாய்' என்று ஆச்சரியத்துடன் கேட்டார் லோரன்ஸ் அண்ணர். சிதம்பரத்தார் சாரத்தை தலையில கட்டிக்கொண்டு வள்ளத்தை விட்டு தண்ணீரில் இறங்கும்போது லோரன்சர் புரிந்துகொண்டார்.

அந்தத்துறையில் கட்டியிருந்த வள்ளங்களை நீந்தியபடியே பார்த்துக்கொண்டு போனார் சிதம்பரத்தார். தூரத்தில் அவருடைய வள்ளம் தெளிவாகத் தெரிந்தது. இரவிலும் வெளிப்பாகம் தெரியக்கூடிய நிறம் அதற்கு. மெதுவாய் வள்ளத்தில் ஏறி நங்கூரத்தை தூக்கி விட்டு சாரங்களை இரண்டாக கிழித்து ஒரு தாங்குகம்பில் பாயாக கட்டிவிட்டார். இப்போது வள்ளம் அடயத்தொடங்க சுக்கானை ஒருபக்கம் முழுதாக திருப்பிட்டார். வள்ளம் வழியத்தொடங்கிவிட்டது.

அர்னோலிசை ஒருநாள் சிதம்பரத்தார் சந்தித்தார். அர்னோலிஸ் மரியாதையாக நின்று நன்றி சொன்னான். "பரவாயில்லை அர்னோலிஸ் உனக்கு தந்தகாசுக்கு மேலேயே எனக்கு வந்துவிட்டது' என்றார் தனக்குள்.

'உங்களை மறக்க ஏலுமோ சிதம்பரண்ணை' என்றான் அர்னோலிஸ் இன்ஸ்பெக்டர். 'கதிரையில இருங்கோ அண்ண'

'நான் இருக்கமாட்டன் என்று தெரியும்தானே? ஏன் கூப்பிட்டனி என்று சொல்லு'

'நீங்கள் நல்லா இருக்கோணும் என்றுதான் நினைக்கிறன்' சிரித்தார் சிதம்பரத்தார்.

'அதுதான் இந்தக் கடத்தல் வேலையை விட்டுட்டு'

'நான் கடத்தல் செய்ததால் நீயும் பயனடைஞ்சிருக்கிறாய்' நீங்க முந்தி நல்ல ஆள்தான். இப்ப அப்படியில்லை. நேற்றும் நீங்கள் வெடிமருந்துச் சாமான்கள் இறக்கிக் குடுத்திருக்கிறீங்கள். நீங்கள் வேற எதை இறக்கினாலும் எனக்கு கவலையில்லை' 'ஆரும் ஓடர் தாறாங்கள் நான் கொணர்ந்து கொடுக்கிறேன்' ' இல்ல நீங்கள் எல்லாம் தெரிஞ்சு கொண்டுதான் செய்யிறியள். அதை நீங்கள் கொணர்ந்து குடுக்கிற ஆக்களை உங்களுக்கு நல்லாத் தெரியும்' 'எனக்குத் தெரியாது' சிதம்பரத்தார் அழுத்தமா சொன்னார்.

'சரி பரவாயில்லை. நீங்கள் வெடிமருந்துகளைக் குடுக்கிற ஆக்கள் குண்டடிக்கிறது. பஸ்சைக் கொழுத்துறது. அரசாங்கத்தின்ர ஆக்களைக் கொல்லுறதெல்லாம் செய்யிறாங்கள். அதாவது உங்களுக்கு தெரியமோ?'

'தெரியும்' சிதம்பரத்தாரின் ஒற்றைப்பதில்.

'அப்ப அவங்கள் அப்படிச் செய்யிறாங்கள் என்று தெரிஞ்சும் ஏத்திக்கொடுக்கிறீங்கள்தானே'

'துரோகியளை கொல்லுறது பாவமில்லை'

'இதால உங்களுக்கொண்டும் வரப்போறதில்லை' கத்தினான் அர்னோலிஸ்.

'எனக்கொன்றும் வராதுதான். தமிழன் அத்தனை பேருக்கும் ஒரு ஆறுதலாவது வரும்' 'நான் அரசாங்க உத்தியோகஸ்தன். அரசாங்கத்திற்கு விசுவாசமா வேலை செய்யோணும்.'

'செய். எனக்கு அதைப்பற்றி பிரச்சனை இல்லை. நானும் என்னால செய்ய முடிஞ்சதை அவங்களுக்கு செய்யத்தான் வேணும்'

'அப்ப தொடர்ந்தும் அதைச் செய்யத்தான் போறீங்களே'

'ஓம்' ஒற்றைப்பதிலில் அழுத்தமாகச் சொன்னார் சிதம்பரத்தார்.

'அப்ப நீங்கள் சிறையில இருக்கப்போறதாய் முடிவு செய்திட்டீங்கள்' சிரித்தார் சிதம்பரத்தார் ஏளனமாய். 'என்னை உன்னால பிடிக்க முடியாதென்று உனக்கே நல்லாத்தெரியும்.' சிரித்தான் அர்னோலிஸ் 'அதையும் பார்ப்பம்'

'அர்னோலிஸ் உன்னில எனக்கெந்தக்கோபமும் இல்லை உன்னில. அனுதாபம்தான் வருது எனக்கு. பேசாமல் உன்ரவேலையை ஊரோட மாத்திக்கொண்டு போய் நீ சந்தோசமாயிரு. நாங்களும் எங்கபாட்டில சந்தோசமாயிருப்பம். ஏன் வீணா இங்க கிடந்து சாகிறாய்'

'சரி நீங்க போகலாம். ஆனால் நாளைக்கு நீங்கள் கடலுக்கு போனா கட்டாயம் என்னட்ட பிடிபடவேண்டி வரும்.'

'சரி நாளைக்கு காலமை நான் சாமானோட வருவன். உன்னால பிடிக்கமுடிஞ்சால் பிடி' சிதம்பரத்தார் போய்க்கொண்டே இருந்தார். அவன் பேசவில்லை.

சிதம்பரத்தார் பின்னேரம் புறப்பட்டுப்போய் விடியற்காலையில் சாமான்களை இறக்கி அனுப்ப வேண்டிய இடங்களுக்கு அனுப்பி வைத்துவிட்டு வீட்டிற்கு வரும்வரை அவரைப்பிடிக்க அர்னோலிஸ் இன்ஸ்பெக்டர் அந்தப்பக்கமே வரவில்லை.

லோறன்ஸ் அண்ணர் வந்து சொன்னார். 'அர்னோலிஸ்' இன்ஸ்பெக்டரின் ஜீப்புக்கு ஆரோ குண்டடிச்சிட்டாங்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ எங்களின் உயிர்ப்பை நாமே காக்க வேண்டும். நமது கடலைப் பாலையாவதிலிருந்து நாமே மீட்கவேண்டும் ”

தி. தவபாலன்



ஒளிப்படம்: தவபாலன்

# சிதையும் சூழல் = அழியும் வாழ்க்கை

உலகளவில் சூழல் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பவை கைத்தொழிற்றுறையும், அபிவிருத்தியும்தான், இயற்கை அழகு மிளிர இருந்த வன்னி போர் அமைதியால் அழகிழந்து சூழல் மாசுபட்டு வருகின்ற பரிதாபத்தையும் சொல்லியாக வேண்டும். கட்டுமானங்களுக்கான மணல், மண் அகழ்வு மரங்களை ஆணி வேரில் நிற்கச் செய்துவிட்டது. சாலை அமைப்பிற்கான கிரவல் மண் அகழ்வு எமது மூதாதைகளின் தொல்சுவடுகளை அழிப்பதுடன் நுளம்புக் குட்டைகளையும் உருவாக்கியுள்ளது.

அதிகரித்த பொலித்தீன் பயன்பாடு மாசடைவதற்கு மற்றொரு காரணி.

உணவகங்களில் பொலித்தீன் பயன்பாட்டுக்குப் பதிலாக இலைகள் பயன்படுத்த வேண்டும் என கரைச்சி, பூநகரி பிரதேச செயலாளர்கள் அறிக்கையளவில் விட்டதோடு சரி. செயற்பாடு பூச்சியம்தான். இது இவ்வாறிக்க இன்றைய உலக சூழல் கருப்பொருளும் கடல் சமுத்திரங்களின் மாசடைதலைத் தடுத்தலாகும்.

இன்று உலகளவில் அதிகரித்த கப்பல் போக்குவரத்துகள், இழுவைமீன்பிடி, கடலடியில் அணுகுண்டு வெடிப்பு சோதனை, பெற்றோலியக் கிணறுகளின் அழிப்பு என்பன கடல் சமுத்திர மாசுகளுக்கு காரணமாகும். இத்தகைய மாசுகளால் சூழல் வெப்ப நிலை அதிகமாக, துருவப்பகுதிகளின் உருகுதலால் கடல்மட்டம் உயரும். இதனால் பெரும் நிலப் பரப்புக்கள் காணாமற் போகும். அல்லது கடல் விழுங்கும் இத்தகைய ஆபத்து நிலையில் நமது தாயகமும் உள்ளது. தமிழர் தாயகம் கடல் சூழ்ந்தது. கடலே எமது பாதிப் பொருண்மிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரம். நமது கடற்பவளப்பாறைகள் என்ற கடலுயிர், வளம் மிகுந்ததாக உள்ளது. கடற்பூங்கா என அழைக்கப்படும். இதன் மூலம் கடலின் அடியில் வெப்பநிலை கட்டுப்படுத்தப்படுகின்றது. கடலின் அடியில் மறைப்புகளை இந்தப் பவள உயிர்கள் அதிகம் கொண்டிருப்பதன் காரணத்தால் பெருமளவிலான கடலுயிர்களின் சரணாலயமாக இக்கடற்பரப்பு உள்ளது. குறிப்பாக தமிழர் தாயக மேற்குக் கடல், வடக்குகடல் திருகோணமலையின் கொட்டியாரக் குடா, மட்டக்களப்பின் கற்குடா, அம்பாறையின் அறுகம் குடா எங்கும் மிக அதிகமான பவளப் பாறைவளம் உள்ளது. இவையே கடல் நீரோட்டங்களால் ஏற்படும் நிலஅரிப்பை தடுத்து நிற்கும் காப்பரண்களாகவும் உள்ளன. இப்பவளப்பாறைகள் இல்லாமற் போனால் நமது கடல் ஒரு பாலைவனமாகவே இருக்கும்.

பவளப்பாறைகளாகவே யாழ்ப்பாணத்தீவுகள் உள்ளன. யாழ்ப் பாணத்தின் முழுமையான மிகப்பெரிய பவளத்தீவு நெடுந்தீவு, இந்தத்தீவுகளை கடலுயிர்கள் பாதுகாத்து வருகின்றன. அத்துடன் அதிகளவில் கடலுயிர்கள் வாழ்வதற்கு இவையே ஆதாரமாக இருந்து வருகின்றன. இத்தகைய கடலுயிர் சரணாயலம் இழுவை படகு மீன்பிடியினால் அழிக்கப்படுகிறது. இழுவை மீன்பிடியில் அதன் அடியில் இருக்கும் பலகை - வலை என்பன இந்தப் பவள உயிர்களை அடியோடு இழுத்து அழிக்கின்றன.

இந்திய இழுவை மீன்பிடியாலும் தாயக மன்னார், யாழ்ப்பாண இழுவை மீன்பிடியாலும் இவை அழிகின்றன. எமது கடல் மாசுக்கு நமது மீன்பிடியே காரணமாக இருக்கின்றது. யாழ்ப்பாண இழுவை மீன் பிடித்தொழிலாளர்கள் இவ்வாண்டுடன் அதனை நிறுத்த வுள்ளனர். மன்னார் இழுவை மீன்பிடித் தொழிலாளர்கள் அதற்கு இன்னமும் தயாராகவில்லை என்றே தெரிகின்றது. இன்று இதனை நிறுத்தாது போனால் நாளை கடலுயிர் அற்ற பாலை வெளியான கடலே எம்மிடம் இருக்கும். தமிழக மீனவர்கள், இழுவை மீன்பிடியை நிறுத்துவதுபற்றி ஆலோசிக்க இணங்கி யுள்ளனர். தமிழக மீனவர்களிடம் இதுபற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த தமிழக மக்களிடம் செல்வாக்குப்பெற்ற வை. கோபால சாமி போன்ற அரசியல் தலைவர்களாலேயே முடியும். அவர்களே இதனைச் செய்யவேண்டும் என கடல்வளம் சார் தமிழக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பாரிய தமிழக இழுவைப் படகு களாலேயே அதிகளவில் கடல்வளம் அழிக்கப்படுகின்றது.

இந்திய அரசு பாக்குநீரிணை மன்னார் வளைகுடாவில் சேது சமுத்திரம் என்ற கப்பல் போக்குவரவு கடல் கால்வாய் திட்டத்தை வைத்துள்ளது. சேது அணை பாலம் என்ற திட்டத்தில் சிறீலங்கா அரசும் கலந்திருக்கிறது. சேதுசமுத்திர கடல் கால்வாய் அமைக் கப்படின் கணிசமான அளவு பவளப்பாறையும் கடலுயிர்களும் அழிக்கப்படும். கப்பல்கள் பயணித்தால் அதன் கழிவுகள் கடலில் கலக்கவிடும் எண்ணெய் என்பன கணிசமான அளவு உயிர்களை அழிக்கும். பவளப்பாறைகளைச் சிதைக்கும். கப்பல்களின் இயந்திர அதிர்வு பவளப்பாறைகளை அழிக்கும். இதன்மூலம் யாழ்ப்பா ணத்தீவுகள் காணாமற் போகும் என கடல் வள ஆய்வாளர்கள் கூறு கின்றனர்.

இதேபோல் சேது அணைப்பாலம் பவளப்பாறைகளை அழிப் பதுடன் கடல் நீரோட்டத்தையும் திசைமாற்றும். இதனால் மேற்குப் பாக்குநீரிணைத் தமிழர் தாயக நிலங்கள் கடலரிப்புக்குள் ளாகும். அத்துடன் கடலுயிர்கள் வளம் குறையும்.

இப்படியாக, தமிழர் தாயகமே இவ்வாண்டு சுற்றுச் சூழல் நாளின் கருப்பொருளாக - சமுத்திரம், கடல் என்பவற்றை மாசு களிலிருந்து பாதுகாப்பது என்பதனை நடைமுறைப்படுத்த வேண் டிய விழிப்பு நிலையில் உள்ளது.

எங்களின் உயிர்ப்பை நாமே காக்க வேண்டும். நமது கடலைப் பாலையாவதிலிருந்து நாமே மீட்கவேண்டும்.

ஏப்பிறல் - 2004

# ஆக்கிரமிப்பு

இலைகளின் நிழல்களில்
வீழ்ந்திடும் எச்சங்கள்
மலைகளைப் பிளக்கும்.

குளவிகள் கூட்டில்
நுழைந்திடும் காற்றும்
குளவிகள் கூட்டில்
நுழைந்திடும் ஒளியும்
மழையின் வெளியில்
வலைகள் பின்னும்.
இடர்படும் தொடர்ஓலைகள்
துயர் விழும் காலைகள்
கடும் குளிர் நிலவில்
கனவுகள் மறக்கும்;
கனவுகள் மறக்கும்.

அச்சங்கள்
தொலைந்த இருப்புகள்
அவலங்கள் கலைந்த பொறுப்புகள்
அணுவைப் பிளக்கும்;
அணுவைப் பிளக்கும்.

வெய்யில் மழைக்குள்
நெய்யும் இதயம்
பொய்கள் அழிக்கும்
புகழ்கள் குவிக்கும்.

நல்லை அமிழ்தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களத்தில் காயத்திரி

கலாநிதி க.சோமாஸ்கந்தன்

பரந்தன்- முல்லை நெடுஞ்சாலையில், உடையார்கட்டுப் பக்கமாகப் பெண்போராளிகளின் கன்ரர் வாகனம் நின்றது. சற்றுத் தூரத்தில் தெரிந்த வீட்டிலிருந்து ஒரு போராளி அதை நோக்கி நடந்து வந்தாள். தோளில் கிடந்த கனத்த பையை வாகனத்தில் இறக்கி வைத்துவிட்டு அவள் முன்னிருக்கையில் அமர்ந்தாள். ஓடத் தொடங்கிய வாகனத்தில் ஏதோ பிசகு இருந்தது. அதை அவதானித்த அவள், 'எண்ணை அடைப்பு இருக்கு அக்கா, உடனடியாகப் பார்க்காவிட்டால் பிரச்சினை' என்றாள். 'போகிற வழியிலை உன்னுடைய தகப்பனாருடைய திருத்தகத்தில் காட்டுவம்' என்றாள் வாகனத்தை ஓட்டிக்கொண்டிருந்த அணிப் பொறுப்பாளர் அகிலா.

கொட்டடி நடேசன் புதுக்குடியிருப்பில் ஒரு ஊர்தி திருத்தகத்தை வைத்திருந்தான். கடந்த எழுபதுகளில் கொழும்பு புறநகர்ப் பகுதி பஞ்சிகாவத்தையில் நடேசனின் தந்தை மயிலர் ஒரு திருத்தகத்தையும் உதிரிப்பாகக் கடையையும் வைத்திருந்தார். தமிழர்களுக்கு எதிராக வெடித்த இனக்கலவரத்தில் அவர் யாவற்றையும் இழந்தார். ஒரு மலையாள நண்பரின் உதவியால் தனது மனைவி செல்லாச்சியையும் ஒரேயொரு வாரிசு நடேசனையும் உயிர்காத்தார். 'ஊருக்குப் போய் ஏதேனும் தொழில் பார்ப்போம், கொழும்பு வாழ்க்கை வேண்டாம்' என்று செல்லாச்சி அடம்பிடித்தாள். மயிலரால் மறுக்க முடியவில்லை. நடேசனோ யாழ்ப்பாணம் போக மறுத்துவிட்டான். ஜேர்மனிக்கு வேலை தேடிப் போகும் முடிவை அவன் எடுத்தான். பிரயாண முகவர் ஒருவர் பிரயாண ஒழுங்குகளைச் செய்து கொடுத்தார். டார்லி வீதி, சென்ஜோசப்ஸ் கல்லூரியில் கல்விகற்றுக்கொண்டு ஊர்தி திருத்தும் தந்தையின் தொழிலையும் நடேசன் கற்றிருந்தான். ஜேர்மனியில் தன்னால் முன்னுக்கு வரமுடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

மேற்கு ஜேர்மனியின் மின்சார இறயில்பெட்டி தயாரிக்கும் நிறுவனத்தில் நடேசனுக்கு இரும்புத் தகடுகளை வெட்டி ஒட்டும் கடினவேலை கிடைத்தது. அதை அவன் விரும்பி ஏற்றுக்கொண்டான். இளமையும் உறுதியான உடற்கட்டும் அவனுக்கு இருந்தது. ஏற்கனவே அவன் அறிந்த தொழில்தான், என்றாலும் கருவிகளும் செய்முறைகளும் வித்தியாசமாக இருந்தன. ஆனால் அடிப்படை ஒரே மாதிரியானதுதான். சில மாதங்களில் அவன் தனது திறமையைக் காட்டத் தொடங்கினான். முதல்வருட முடிவில் அவனுக்கு கணிசமானளவு சம்பளஉயர்வு கிடைத்தது. வருடமொருமுறை ஊதியத்தோடு ஆறுவார விடுமுறை கொடுக்கும் வழக்கம் ஜேர்மன் தொழிற்சாலைகளில் உண்டு. நடேசனுக்கும் இந்தச் சலுகை கிடைத்தது. அவனுக்கு வீட்டுக்குப் பணம் அனுப்பவேண்டிய தேவை இருக்கவில்லை. வீண்செலவு செய்யும் பழக்கமும் அவனுக்கு இல்லை. உடல் உறுதியைப் பேணுவதற்காகச் சத்துணவைத் தேடிவாங்கித் தானே சமைத்து உண்டான்.

தனது சேமிப்பில் புத்தம்புதியதொரு கார் வாங்கினான். அதை ஓட்டிக்கொண்டு மேற்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றை விடுமுறை நாட்களில் சுற்றிப் பார்த்தான். சிறுவயதில் அவன் ஐரோப்பிய வரலாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தவன், இப்போது வரலாற்றுச் சான்றுகளை நேரடியாகக் கண்டான். அவன் ஜேர்மனியில் வாழ்ந்த காலத்தில் அது மேற்கு கிழக்காக இரண்டுபட்டிருந்தது. கிழக்கு சோவியத் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கியது. தொழிற்சிறப்புமிகுந்த மேற்கில் பணியாற்றிய நடேசனுக்கு கிழக்கைப் பார்க்கவேண்டும் என்ற ஆர்வம் தோன்றியது. கிழக்கு ஜேர்மனி, போலாந்து, ருஷ்யா ஆகிய மூன்றையும் ஒன்றாகக் பார்க்க அவன் திட்டமிட்டான். தனக்கும் தனது வாகனத்திற்கும் அவன் கடும் பிரயத்தனம் எடுத்து உள்நுழைவு அனுமதிகளைப் பெற்றான். ஒரே நெடுஞ்சாலையில் கிடந்த மூன்று நாடுகளையும் ஒரேமூச்சில் பார்த்துவிடலாம் என்பது அவனுடைய எண்ணம்.

ருஷ்யத் தலைநகர் மொஸ்கோ வந்து சேர்ந்து வெளிநாட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்ட விடுதியில் தங்குமிடம் பிடித்த நடேசனுக்கு ஒரு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. கேரளத்திலிருந்து வந்த மிகவும் பிரபலமானதொரு சேர்க்கஸ் கொம்பனி மொஸ்கோவில் முகாமிட்டிருந்தது. பொதுவாக ருஷ்யர்களும் கிழக்கு ஐரோப்பிய மக்களும் சேர்க்கஸ் விளையாட்டுக்களைப் பார்ப்பதில் மிகவும் விருப்பமுடையவர்கள். ருஷ்யாவுக்குச் சொந்தமான சேர்க்கஸ் நிறுவனங்களும் அங்கு உண்டு. சீனா, இந்தியா போன்ற நாடுகளின் கம்பனிகளும் காலத்திற்குக் காலம் ஐரோப்பா முழுவதும் நாடு நாடாகச் சென்று தமது மயிர்க்கூச்செறியும் வித்தைகளைக் காட்டிச் செல்வதுண்டு. இதனால் ஒருவகை கலாசாரப் பரிமாற்றம் நடைபெறுவது கண்கூடு.

மொஸ்கோவின் ஒதுக்குப்புறமான பெருந்திடலில் பிரமாண்டமான சேர்க்கஸ் கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. அதைச் சுற்றி பணியாளர்களுக்கான விடுதிக் கூடாரங்கள், விலங்கினங்களை அடைத்து வைக்கும் இரும்புக் கூடுகள், சேர்க்கஸ் நகர்வுக்குத் தேவையான வாகனங்கள், களஞ்சியப் பகுதிகள் ஒரு சிறிய தற்காலிக நகரம்போல இடம்பெற்றன. தனது ஆவலைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் நேரத்தோடு அந்த இடத்திற்கு நடேசன் சென்றான். அத்தோடு கூடுதல் பணம் செலுத்தி முன்வரிசைக்கான அனுமதிச் சீட்டையும் வாங்கினான். தரைப்பகுதி ஆடுகளத்தையும் பார்வையாளர் பகுதியையும் பிரிக்கும் இரண்டடி உயரமான சங்கிலி வேலிக்கு முன்னால் போடப்பட்ட இருக்கை வரிசையில் அமர்ந்தான். சிங்கம், புலி, கரடி, குரங்கு போன்ற விலங்குகளின் வித்தைகளோடு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. அடுத்ததாக உடற்பலம் பொருந்திய பயில்வான்கள் தமது பல்வேறு சாகசங்களைச் செய்துகாட்டினார்கள். இடையிடையே பல நிறங்களில் ஆடை அணிந்த கோமாளிகள் வந்து தமது கைவரிசையைக் காட்டி யாவரையும் சிரிக்க வைத்தனர்.

தரை நிகழ்ச்சிகள் முடிவுக்கு வந்தபின் கூடாரத்து மேற்புற நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. கூடாரத்தின் உட்புறத்தில் முக்கால் பனை உயரத்தில் கட்டப்பட்டிருந்த குறுக்குக் கயிற்றில் ஒரு இளம்பெண் இரு முனைகளுக்கும் இடையில் பலமுறை நடந்து காட்டினாள். தரையில் பொருத்தப்பட்ட மின்சார விளக்குகள் அவளை நோக்கிச் செலுத்தப்பட்டன. அவளுடைய ஒவ்வொரு அசைவையும் பார்வையாளர்களால் பார்க்க முடிந்தது. ஒற்றைக் கயிற்றில், அந்த உயரத்தில் கையில் ஒரு சிறு விரித்த குடையை மாத்திரம் பிடித்தபடி அவள் நடைபயின்றதை நடேசன் வியப்புடன் நோக்கினான். அடுத்ததாக அதே பெண் ரயர், ரியூப் அகற்றப்பட்ட மிதிவண்டியை அந்த ஒற்றைக் கயிற்றில் ஓடிக்காட்டினாள். இதன்பின் சேர்க்கஸ் உலகின் அதியுச்ச நிகழ்ச்சியென வர்ணிக்கப்படும் ஊஞ்சல் விளையாட்டுக்கள் ஆரம்பமாகின.

ஒற்றைக் கயிற்றின் அதே உயரத்தில் இரு கயிற்று ஊஞ்சல்கள் தொங்க விடப்பட்டன. கயிற்றில் நடைபயின்ற பெண்ணும் இன்னொருத்தியும் ஊஞ்சலில் வேகமாக ஆடியபடி ஒருவர் ஊஞ்சலுக்கு மற்றவள் தாவிக் காற்றில் பறந்து ஆடினார்கள். இப்படிப் பலமுறை செய்து காட்டினார்கள். மக்கள் ஆரவாரம் பெருகியது. அடுத்ததாக இரு பெண்களும் ஊஞ்சலில் ஆடியபடியே தமது கால்களை ஊஞ்சல் கயிற்றில் கொழுவியபடி தலைகீழாக ஆடினார்கள். அதே நிலையில் மீண்டும் ஒருவர் ஊஞ்சலுக்கு அடுத்தவர் தாவிப் பறந்தார்கள். கயிற்றில் நடந்த பெண்தான் நிகழ்ச்சியை முன்னின்று நடத்தினாள். அடுத்தவள் அவளைப் பின்தொடர்ந்து ஆடினாள். பார்வையாளர்களுக்கு இது நன்றாகப் புரிந்தது. நடேசன் ஒருபடி மேலே சென்று அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தபடியே இருந்தான். பிறிதோர் பெண்ணைத் தனது வாழ்நாளில் அவன் அப்படிப் பார்த்தது கிடையாது.

அன்றிரவு நடேசனால் தூங்க முடியவில்லை. அந்தப் பெண்ணின் முகம் அவன் முன்னால் நின்றது. முன்பு அறியாத பால் உணர்ச்சி அவனை வாட்டி எடுத்தது. அடுத்தநாள் மாலை எப்போ வரும் என்று காத்திருந்த அவன் முதல் அமர்ந்த அதே இருக்கையை மீண்டும் பிடித்தான். மூன்று நாட்களாக விடாப்பிடியாக அவன் சென்று வந்தான். நான்காம் நாள் தலைகீழாக ஆடும்போது அந்தப் பெண் தன்னை நிமிர்ந்து பார்ப்பது போன்ற பிரமை அவனுக்கு ஏற்பட்டது. அடுத்த நிமிடம் செய்தொழிலில் அவள் கவனம் சிதறியதால் கால் தவறியது. ஆபத்தான உயரத்தில் இருந்து அவள் தரையை நோக்கி விழுந்துகொண்டிருந்தாள், மின்னல் வேகத்தில் தடுப்பு வேலியை நடேசன் பாய்ந்து கடந்தான். ஒரு பஞ்சுப் பொதியை ஏந்துவதுபோல் அவளை இருகைகளாலும் தாங்கிப் பிடித்தான்.

அடுத்தநாள் மதியம் சேர்க்கஸ் கொம்பனி முதலாளி குட்டனை அவருடைய அலுவலகத்தில் நடேசன் சந்தித்தான். 'வா ஆகாரம் பண்ணிண்டு பறையலாம்' என்று அவர் உணவருந்த அழைத்தார். அவனுடைய பூர்வீகம், செய்யும்தொழில், வந்த காரியம் போன்ற பலதரப்பட்ட விடயங்களை குட்டன் கேட்டறிந்தார். குறிப்பிட்ட பெண்ணைத் தான் திருமணம் செய்ய விரும்புவதாக நடேசன் சொன்னபோது அவர் கடும் யோசனையில் ஆழ்ந்தார். 'நான் ஒன்று சொல்றேன் கேட்டுக்கோ, இங்கிருக்கிற பெண்ணுங்க என் சொந்தப் பிள்ளைகள் மாதிரி. அவுக நன்மை தீமைகளுக்கு நான் பொறுப்பு. அவளைக் கட்டிக்கிறதிலை நீ உறுதியாக இருந்தால் கேரளம் வா. அவளட பெத்தவங்க அனுமதியோடு கட்டிக்கோ' என்று குட்டன் பேசி முடித்தார். இதற்கு நடேசன் சம்மதித்தபோது அவர் 'எங்க ஐரோப்பா ரூர் முடிய ஆறுமாதகாலம் பிடிக்கும். இப்ப நீ ஜேர்மனிக்குப் போ. நன்றாக யோசித்து என்னோட தொடர்பு கொள்' என்று சொன்னார்.

சரசம்மா என்ற நடேசன் விரும்பிய பெண் கேரளத்தின் மேற்கு மலைப்பகுதி முன்னரில் கழைக் கூத்தாடிக் குடும்பத்தில் பிறந்தவள். பன்னிரு வருடத்திற்கு ஒருமுறை பூக்கும் நீலக்குறிஞ்சிக்கும் தரமான தேயிலைக்கும் முன்னர் மலைப் பிரதேசம் பெயர்பெற்றது. கேரளத்தைப் பூலோக சொர்க்கம் என்பார்கள். இப்பகுதியைப் பார்த்தவர்களுக்கு அதன் உண்மை விளங்கும். சிறுவயதிலிருந்தே சரசம்மா தனது இயல்பான திறமையைக் காட்டத் தொடங்கினாள். அவளைப் பற்றிக் கேள்விப்பட்ட குட்டன் முதலாளி தலசேரியில் இருந்து முன்னர் வந்தார். கேரளத்தின் வடகன்னூர் மாவட்டத்திலுள்ள தலசேரி இந்தியாவின் சேர்க்கஸ் தலைநகரம் என்று அழைக்கப்படுகிறது. குட்டன் முதலாளியிடம் பயிற்சி பெற்றவர்கள் உலகின் பல பாகங்களில் சேர்க்கஸ் தொழில் நடத்துகின்றனர். நெஞ்சில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பன் யானையை ஏற்றிச் சாதனை படைத்த கிலேரி கிருஷ்ணன் குட்டனின் சீடன். சரசம்மாவும் அவரிடமே பயிற்சி பெற்றாள்.

எண்ணி ஆறுமாதத்தில் தனது பெற்றாருக்கு கடிதம் எழுதிப் போட்டுவிட்டு நடேசன் ஜேர்மன் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்தான். சேமிப்பில் இட்டது போக எஞ்சிய கணிசமானளவு தொகை பணத்துடன் கேரளம் வந்தான், தலசேரிக்குச் சென்று குட்டன் முதலாளியைச் சந்தித்தான். இருவரும் முன்னர் சென்றனர். சரசம்மா ஏற்கனவே ருஷ்யாவில் தனது பூரண சம்மதத்தைத் தெரிவித்துவிட்டாள். பெற்றாரின் ஒப்புதல் மாத்திரம் பாக்கி. வருவாய் ஈட்டும் பெண் என்றபடியால் ஒரு தொகை பணம் கேட்டார்கள். நடேசன் தயங்காமல் கொடுத்தான். ஒரு நல்ல நாளில் பகவதி அம்மன் கோயில் பூசாரி எடுத்துக் கொடுத்த கருகுமணித் தாலியை அவள் கழுத்தில் நடேசன் கட்டினான். சில காலம் ஊர் சுற்றிப் பார்த்தபின் இருவரும் கொட்டடி வந்தனர். இருவரையும் கோயிலுக்குக் கூட்டிச்சென்று மருமகள் கழுத்தில் தங்க தாலியை மகனைக் கொண்டு செல்லாச்சி கட்டுவித்தாள்.

வாசுகி, காயத்திரி என்று இரு பெண்கள் பிறந்து வளர்ந்தார்கள். நால்வரும் ஒருமுறை கேரளத்தின் தேசியத் திருவிழாவான ஓணம் பண்டிகையைப் பார்ப்பதற்குச் சென்றார்கள். முதல் குட்டன் முதலாளியிடம் சென்றார்கள். அவருக்காக எடுத்துச் சென்ற பொருள்களைக் கொடுத்து மகிழ்ந்தார்கள். அடுத்ததாக முன்னர் சென்றார்கள் சரசம்மாவின் தம்பி சினிமாவுக்குச் சென்றுவிட்டானாம். சண்டைக் காட்சிகளில் ஏதோ நடிக்கிறானாம். விவசாயம் செய்யலாமே, ஏன் இந்த வம்பு என்று நடேசன் நினைத்தான் மனைவி மனம் நோகக்கூடாது என்பதற்காக வாய் பேசாதிருந்தான். அக்காவைப் பார்க்க வருவதாகக் கடிதம் போட்டான், ஆனால் சொன்னபடி வரவில்லை. பள்ளி விடுமுறை முடிய ஒருவாரம் மாத்திரம் இருந்தது, தாமதிக்காமல் யாழ்ப்பாணம் வந்துவிட்டார்கள்.

வாசுகி படிப்பில் அக்கறை காட்டவில்லை. விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றுவதில்லை. தன்னைச் சீவிச் சிங்காரிப்பதில் மாத்திரம் கூடுதல் கவனம். வயசு வந்ததும் தேடிவந்த மாப்பிள்ளைக்குக் கட்டிக் கொடுத்தார்கள். காயத்திரி வித்தியாசமானவள். வேம்படிப் பள்ளியில் படிப்பிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் முதலிடம் பெற்றாள். தாயைப் போன்று நல்ல உயரம், செக்கச் செவேலென்று நிறம், சேர நாட்டு அழகு நிரம்பியவள். பல்கலைக்கழகம் செல்வாள் என்று எல்லோரும் நம்பியிருந்தார்கள் 'நான் புலிப்படையில் சேர்ந்துவிட்டேன் வன்னிக்குப் போறேன் பயிற்சிக்கு' என்று அவள் ஒருநாள் திடீரென்று அறிவித்தாள். மகளைப் பிரிய முடியாத சரசம்மா 'நாமளும் போவோம் அந்த வன்னிக்கு' என்றாள். தனது மனைவி கண்கலங்குவதைப் பார்த்தறியாத நடேசன் பதறிப்போனான்.

உடையார்கட்டில் வீடு, கிணற்றோடு ஒருதுண்டு நிலத்தை நடேசன் வாங்கினான். மனைவியோடு வன்னிக்கு வந்துவிட்டான். 'மருமகள் தனியாக என்ன செய்வாள் பாவம்' என்று சொல்லிக்கொண்டு செல்லாச்சியும் வந்துவிட்டாள். மயிலர் வாசுகி குடும்பத்தோடு ஒட்டிக்கொண்டார். புதுக்குடியிருப்பில் ஒரு ஊர்தி திருத்தும் தொழிலகத்தை நடேசன் திறந்தான். கொட்டடி நடேசன் என்ற இடப்பெயர் அவனுக்குக் கிடைத்தது. ஆயுதப் பயிற்சி முடிந்தவுடன் களமருத்துவப் பிரிவில் காயத்திரி இணைக்கப்பட்டாள். பயம் என்றால் என்னவென்று அறியாமல் மிகவும் துணிச்சலாகச் செயற்பட்டாள். ரவை மழையைப் பொருட்படுத்தாது மருத்துவப் பணியாற்றினாள். தனது அறிவைப் பெருக்குவதற்காக விரிவான மருத்துவ ஆராய்ச்சிகளை மேற்கொண்டாள். ஒஸ்ரியோலொஜி எனப்படும் மனித எலும்பியல் கற்கையை சுயதேடல் மூலம் தீவிரமாகக் கற்றாள்.

பாதை திறந்தபின் எம்மின மருத்துவ நிபுணர்களும் இத்துறைசார்ந்த பிற நாட்டவர்களும் எமது தாயகம் வரத்தலைப்பட்டனர். மாணவப் பருவத்தில் இலண்டன் சென்ற டாக்டர் துரைசாமியால் மனமிருந்தும் வரமுடியவில்லை. அவருக்கு உயர் குருதி அழுத்தம், நீண்ட தூரப் பயணத்திற்கு அவருடைய குடும்ப வைத்தியர் தடைவிதித்திருந்தார். டாக்டர் துரைசாமி இடைக்காட்டைச் சேர்ந்தவர், அதிகாலையில் எழுந்து பெற்றாரோடு தோட்டவேலை செய்தபின் கால்நடையாகப் பள்ளிக்கூடம் சென்று படித்தவர். பிரிட்டிஷ் அரசின் உபகாரச் சம்பளம் பெற்று இங்கிலாந்து வந்து மருத்துவப் படிப்பை மேற்கொண்டவர். மகப்பேற்றில் அவர் உலகறிந்த நிபுணர். அவர் விரும்பித் திருமணம் செய்த காதல் மனைவி ஒரு ஆங்கில மாது. தனது கணவனின் இன, மொழி மற்றும் பண்பாட்டு அடையாளங்களில் அக்கறை கொண்டவள்.



# களத்தில் காயத்திரி


தனது வயிற்றில் பிறந்த ஒரே பிள்ளையான சுந்தர் தமிழனாக வாழவேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக நிற்பவள்.

துரைசாமியாருடைய மூத்த சகோதரியின் பேரன் வீரச்சாவடைந்து கிளிநொச்சியில் துயில்கொள்கிறான். அவனுடைய உரித்தாளர்கள் யாபேரும் கல்லறைக்கு அஞ்சலி செலுத்திவிட்டார்கள். தனது மனைவியையும் மகனையும் அவர் கிளிநொச்சிக்கு அனுப்பிவைத்தார். ஆனால் துயரம் தணிந்தபாடில்லை. அவர் கொடுத்தனுப்பிய அன்புச் சின்னங்களை கல்லறைமீது சாற்றியபின் சேலை கட்டிய அந்த ஆங்கில மாது கண்ணீர் மல்க மண்டியிட்டாள். சத்திர சிகிச்சை நிபுணனான அவளுடைய மகன் டாக்டர் சுந்தர் தனது உறவினனுக்கு மரியாதை செலுத்திவிட்டு வீடியோ படம் பிடிக்க ஆரம்பித்தான். வரிசையாகக் கிடந்த கல்லறைகளைப் பார்த்தபோது அவனுக்கு வேதனையாகவும் அதே சமயம் பெருமையாகவும் இருந்தது.

பண்பாட்டு மண்டபத்தில் நடந்த களமருத்துவக் கருத்தரங்கில் சுந்தர், காயத்திரி ஆகியோர் நெருக்கம் ஆரம்பித்தது. மேடையில் நிறுத்தப்பட்ட திரையில் அவள் களமருத்துவம் சம்பந்தமான படங்களைக் காண்பித்து ஆங்கிலம், தமிழ் மொழிகளில் விளக்கம் கொடுத்தாள். களத்தில் பெண்களுக்குத்தான் கூடுதலாக எலும்பு முறிவுக் காயங்கள் ஏற்படுகின்றன என்பதைப் புள்ளி விவரங்களுடன் நிரூபித்தாள். 'இது என்னுடைய கண்டுபிடிப்பு அல்ல, உலக இராணுவங்கள் எல்லாவற்றின் அனுபவம் இதுதான்' என்றாள் காயத்திரி. அடுத்ததாக தண்டுவடக் காயங்கள் பற்றிப் பேசியவள் மிகவும் உணர்ச்சிவசப்பட்டாள். தண்டுவடச் சிகிச்சை வளர்ச்சி காணாமல் இருக்கும்வரை கள மருத்துவத்தில் மேம்பாடு ஏற்படவில்லை என்றுதான் கொள்ளவேண்டும் என்று வாதிட்டாள். கருத்தரங்கு முடிந்தபின் இருவரும் தனியாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அதன்பின் தனது தாயாருக்கு காயத்திரியை அவன் அறிமுகம் செய்து வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குசினி நடுவில் ஒரு வேப்பங்கன்று

வேரற்கேணியன்

ஏழாண்டுகளின் பின்
வந்திருக்கிறார் வீடு பார்க்க,
கிட்ட அணுகாமல்
எட்டத்தில் நிற்கிறார்
நிலவெடிக்கு அஞ்சி,
தெருப்படலை வேலி, கிடுகு
கதியால் எதுவுமில்லை
ஓ வென்று திறந்த
பெரும் வளவில்
பற்றை கொடிகளுக்குள்
பாதி வீடு.
மேலும் சில அடிகள்
முன்னால் வந்தார்.
பாட்டத்தில் விழுந்த
மீதிச் சுவர் உடைவில்
பசுஞ்சோலையாய்
ஆல், அரசு அரிதான
காட்டுச் செடிகள்.
குசினி நடுவில் அழகாய்
தனியொரு வேப்பங்கன்று.
“அதை வளர்த்தெடுக்கலாம்”
அவர் மனதின் கனவு

வாசலில் வளர்ந்திருந்த
வட்டவட்டத் தேக்கு
வானுயர்ந்த நான்கு
அசோக மரங்கள்
பத்து வண்ணங்களில்
பூத்துக் குலுங்கிய
போகன் வில்லாக்கள்
செழிப்பாய் இரண்டு
செவ்விளநீர்த் தென்னை
நின்ற சுவடேயில்லை;
இன்று புல்லும் புதரும்.
நெடிதுயர்ந்து பின் வளவில்
நின்ற தென்னைகள் ஏன்
முடிகள் இழந்தன?
பல்லாண்டு வாழும்
பனைகள் ஏன், சரி
பாதியை இழந்தன?
எதிரிப்படை ஏவிய
எறிகணைகளை எதிர்த்து
மோதி மடிந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலை வரலாற்றில் ஜனவரி

நினைவுக் குறிப்பு

### கடைசித் தமிழ் மன்னன் கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்ட நாள் :

அன்றைய கண்டி இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னனான கண்ணுசாமி என்ற சிறி விக்கிரமராஜசிங்கனின் ஆட்சியைக் கைப் பற்றும் நோக்கில் படையெடுத்து வந்த ஆங்கிலப்படைகளிடம் பிலிமத்தலாவை, எகஸ்போலை தலைமையிலான சிங்களப் பிரதானிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு 24.01.1815 அன்று வேலூருக்கு நாடு கடத்தப்பட்டான்.

### சிங்களச்சிறீ தமிழர்களின் வாகனங்களில் பொருத்தப்பட்டது :

சிங்களப் பேரினவாதத்தின் ஆசியோடு ஆட்சிபீடமேறிய சிறீலங்காவின் பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்காவினால் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டு தமிழீழப் பகுதிகளில் அமுல்ப் படுத்தப்பட்டது. அதன் ஒரு கட்டமாக 01.01.1958 அன்று தமிழர் பகுதிகளில் அனைத்து வாகனங்களிலும் சிங்கள சிறீ எழுத்தை பொறிக்க வேண்டும் என்ற அநாகரிக இனவாத விதி அமுல்ப்படுத் தப்பட்டது.

### தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை:

10.01.1974 அன்று சிறீலங்கா அரசின் பல்வேறு தடைகளையும் மீறி யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட உலகத் தமிழாராட்சி மாநாட்டு நிகழ்வின்போது சிறிமா அரசின் சிங்களக் காவல்படைகளால் 9 அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

### கிளாலி நீரேரிப் பயணிகள் படுகொலை:

02.01.1993 அன்று யாழ் மாவட்டத்தில் கிளாலி நீரேரியில்வைத்து குழந்தைகள் பெண்கள் உட்பட 50ற்கும் மேற்பட்ட பயணிகள் சிங்களக் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

### மாவீரன் கப்டன் அருள் வீரச்சாவு:

தாயகத்து விடுதலைக்காக 1986இல் தன்னை விடுதலைப் புலிகளோடு இணைத்துக் கொண்டவர் கப்டன் அருள் மாஸ்ரர். தமிழீழ விடுதலைப் புலிகளால் பாவிக்கப்படும் துப்பாக்கி எறிகணையான அருள்-89 இவரால் வடிவமைக்கப்பட்டதாகும். 04.01.1988 அன்று நீர்வேலிப் பகுதியில் ஏற்பட்ட இந்திய இராணுவத்துடனான மோதலின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

### கொக்கட்டிச்சோலைக் கிராமப்படுகொலை:

1987ல் சனவரி. 28,29,30 ஆகிய நாட்களில் மகிழடித்தீவு, இறால் கொம்பனி, முனைக்காட்டுப் பகுதிகளில் சிறீலங்கா விசேட அதிரடிப்படையினரால் பெண்கள், குழந்தைகள் உட்பட200 தமிழ் மக்கள் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர்.







### வங்கக்கடலில் காவியம் படைத்த கேணல் கிட்டு உட்பட 10 போராளிகளின் நினைவு நாள்:

விடுதலைப் புலிகளின் மத்தியகுழு உறுப்பினரும் முதுபெரும் தளபதியுமான கேணல் கிட்டு அவர்கள் போராட்ட வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட ஒரு அத்தியாயம். யாழ் மக்களால் அன்புடன் நேசிக்கப்பட்ட இவர் சிங்களப்படைக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தவர்.

16.01.1993 அன்று வெளிநாட்டிலிருந்து குவேக்கர்ஸின் சமாதானச் செய்தியுடன் வந்து கொண்டிருந்தபோது இந்தியச் சதிக்குப் பலியாகி 9 போராளிகளுடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.



### மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் நினைவு நாள்:

சந்திரிகா அரசின் தமிழின அழிப்புக் கொள்கையை அம்பலப் படுத்தியவரும், மனிதஉரிமைவாதியும், சட்டத்தரணியுமான திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் கொழும்பில் சந்திரிகா அரசின் கொலையாளிகளால் 05.01.2000 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

சிங்களத்தின் தலைநகரில் தனித்து நின்று சிங்களப் பேரினவாதத்திற்கு சவால் விடுத்து, ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தபோதும் அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்துப் போராடியவர் திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள். இவரின் இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் இவருக்கு மாமனிதர் விருது வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 11 நவம்பர் 2004



மரணத்துடன் போராடிக் கொண்டிருந்த பலஸ்தீனிய அதிபர் யசீர் அரபாத் தனது 75ஆவது வயதில் பிரான்சில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் காலமானார். 1929ஆம் ஆண்டு பிறந்த அரபாத் பலஸ்தீனியர்களின் விடுதலைக்காகப் போரடி வந்தவராவார்.

அரபு லீக்கின் தலைமையில் மரணச் சடங்கு கெய்ரோவில் நடைபெற்றது. பின்னர் அதிபர் அரபாத்தின் பூதவுடல் மேற்குக் கரைப் பிரதேசத்திலுள்ள றமளா நகரில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

### 11 நவம்பர் 2004

கிளிநொச்சிக்கு வருகை தந்த நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் பீற்றர்சன், தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களை 11 நவம்பர் 2004 அன்று முற்பகல் சந்தித்தார்.

இலங்கைத் தீவகத்தில் தமிழீழம், சிறீலங்கா நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்டு வரும் அமைதி முயற்சிகள் தொடர்பான இருதரப்பு பேச்சுகளின் போது ஆராயப்பட்டன.

### 14 நவம்பர் 2004

யாழ்-வவுனியா(ஏ-9) வீதி, கொடிகாமத்தில் சிறீலங்கா இராணுவ வாகனம் மோதி ஆலய பூசகர் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். பலியான பூசகரின் உடலை உடனே படையினர் அகற்ற முற்பட்டதால், ஏற்பட்ட முறுகல் நிலையில் ஆத்திரம் கொண்ட பொது மக்களினால் இராணுவ வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டது. இதனால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. பலியான பூசகர் கல்வியங்காட்டைச் சேர்ந்த 24 வயதான வரதராஜப்பெருமாள் ஹரிகரசர்மா ஆவார்.

### 19 நவம்பர் 2004

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியான சரத் அம்பேபிட்டிய 19.நவம்பர் 2004 அன்று மாலை அவரது அதிகாரபூர்வ வதிவிடத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### 19 நவம்பர் 2004

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் 19 நவம்பர் 2004 அன்று மாலை 6.00 மணியளவில் உந்துருளியில் வந்தவர்களால் நடத்தப்பட்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் இரு இளைஞர்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். இன்னுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

### 20 நவம்பர் 2004

யாழ் குடாநாட்டில் இராணுவத்தினருக்கு எதிராக மக்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது மீசாலையில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மகாலிங்கம் சுந்தரராஜா (21) என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### 21 நவம்பர் 2004

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் கையெழுத்திடப்பட்ட சான்றிதழ்கள் வானோசை - 14 போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன், புலிகளின் குரல் வானொலியின் 14ஆம் ஆண்டு நிறைவு விழா வெகுசிறப்பாக நடைபெற்றது.

### 25 நவம்பர் 2004

மாவீரர் தினத்துக்கு முன்னோடியாக மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வுகள் 25.நவம்பர் 2004 அன்று காலை 8 மணிக்கு தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் தேசியக் கொடியேற்றலுடன் உணர்வுபூர்வமாக ஆரம்பமாகியது. 25ம் திகதி முதல் மூன்று தினங்கள் எழுச்சி தினங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு 27 ம் திகதி மாவீரர் நாள் முன்னெடுக்கப்பட்டது. இந்த மூன்று நாட்களும் பொதுச்சுடரேற்றல், தேசியக்கொடியேற்றல், ஈகச்சுடரேற்றல், மலர்வணக்கம், அகவணக்கம், உறுதியுரை எடுத்தல், நினைவுரை ஆகிய நிகழ்வுகள் வரிசைக்கிரமப்படி இடம்பெற்றன.

### 26 நவம்பர் 2004

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கு 26 நவம்பர் 2004 அன்று 50 தாவது அகவையாகும்.

தமிழன் என்றால் அடிமை என்றும், அடிவாங்கி அடங்கி வாழப் பிறந்தவன் என்றும், எழுதப்பட்டிருந்த விதியை மாற்றி, தமிழர்கள் என்றால் வீரர்கள், என்றும் சாதனை படைக்கக்கூடியவர்கள் என்றும் தமிழருக்கென்றொரு அடையாளத்தையும் முகவரியையும் தேடித் தந்த அவருடைய பிறந்தநாள் தின நிகழ்வுகள் தமிழர் தாயகத்திலும் தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளிலும் நடை பெற்றுள்ளன.

### 27 நவம்பர் 2004



தாயக விடுதலைக்கு தங்கள் இன்னுயிர்களை ஆகுதியாக்கிய 17,780 மாவீரர்களை நினைவு கூரும் வகையில் தமிழர் தாயகத்திலும் தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளிலும் 27.11.2004 அன்று மாவீரர்நாள் எழுச்சியாகவும் உணர்வுபூர்வமாகவும் நினைவுகூரப்பட்டுள்ளது.

தாயக நேரம் மாலை 5.40 மணியளவில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை . பிரபாகரன் அவர்கள் ஆற்றிய மாவீரர்நாள் சிறப்புரை தமிழர் தாயகத்திலும் தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளிலும் நேரடியாக ஒளி ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

மாவீரர் நாளன்று வன்னியில் ஓரிடத்தில் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த இடத்தில் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை. பிரபாகரன் அவர்கள் மாவீரர் தின ஒழுங்கின்படி மாவீரர்களுக்கான நினைவு வணக்கத்தை செலுத்தினார்.

அதேநேரம் 6.00மணிக்கு அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும் மாவீரர் நினைவு மண்டபங்களிலும் நினைவொலி எழுப்பப்பட்டது. பின்னர் அகவணக்கம் இடம் பெற்றது. அகவணக்கத்தை அடுத்து தளபதிகள் மற்றும் அரசியல் துறை பொறுப்பாளர்களினால் பொதுச்சுடர்கள் ஏற்றப்பட்டன.

அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு கல்லறைகளுக்கும் மற்றும் நினைவுக் கற்களுக்கும் முன்பாக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த ஈகச் சுடர்கள் ஏற்றப்பட, மாவீரர் பாடல் இசைக்கப்பட்டது. போராளிகள், பொது மக்கள் அனைவரும் மாவீரர்களின் கல்லறைகளுக்கு மலர்தூவி, மலர் மாலைகளை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தினர் .

தாயக விடுதலைக்குத் தங்கள் இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களின் நினைவாக 27 நவம்பர் 2004 அன்று மாலை சிறீலங்கா பாராளுமன்றத்திலும் ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டுள்ளது.

தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் 21 பேரும் பாராளுமன்ற முன்புற வாசலில் கூடி 21 ஈகைச் சுடர்களை ஏற்றி அகவணக்கம் செலுத்தினார்கள்.

சிறீலங்கா பாராளுமன்ற அரசியல் வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாவீரர் நினைவாக ஈகைச் சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தியது இதுவே முதற் தடவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







### சிறப்பு பயிற்சி பெற்ற புதிய அணி ஒன்று பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறியுள்ளது.

திங்கட்கிழமை, 06 டிசம்பர் 2004

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் சிறப்பு பயிற்சி பெற்ற புதிய அணி ஒன்று பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறியுள்ளது. தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், வன்னியில் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில், புதிய சிறப்பு அணியினருக்கு தகைமைச் சான்றிதழ் வழங்கினார்.

06.12.2004 அன்று படைத்துறை பயிற்சி ஆசிரியர் சுகிர்தா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தேசியத் தலைவர், போரியல் நுட்பங்கள் தொடர்பான ஆழமான கருத்துக்களையும் வழங்கினார்.

### நினைவுகூரல்

திங்கட்கிழமை, 06 டிசம்பர் 2004

மட்டு அம்பாறை மாவட்ட துணைத் தளபதி லெப். கேணல் ஜீவன் உட்பட எட்டு வேங்கைகளின் மூன்றாம் ஆண்டு நினைவு தினம் 06.12.2004 அன்று மட்டு அம்பாறை மாவட்டங்களில் அனுஷ்டிக்கப்பட்டது.

### அனைத்துலக மனித உரிமைகள் தின நிகழ்வுகள்

வெள்ளிக்கிழமை, 10 டிசம்பர் 2004

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் மனித சமத்துவம் விழுமியம் போன்ற உயர்ந்த சிந்தனையுடன் வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் செயலாற்றி வருகிறது என்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். அனைத்துலக மனித உரிமைகள் தினத்தை ஒட்டி வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் முதலாவது மனித உரிமைகள் தின நிகழ்வுகள் 10.12.2004 அன்று கிளிநொச்சியில் நடைபெற்றது. அருட்தந்தை கருணாரத்தினம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் சுப தமிழ்ச்செல்வன், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

### உண்ணாவிரதம்

வெள்ளிக்கிழமை, 10 டிசம்பர் 2004

சர்வதேச மனித உரிமைகள் தினமான 10.12.2004 அன்று யாழ். மாவட்ட அன்னையர் முன்னணி உறுப்பினர்கள் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலக முன்றிலில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### கலை நிகழ்வில் நடாத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல்

சனிக்கிழமை, 11 டிசம்பர் 2004

கொழும்பில் 11.12.2004 அன்றிரவு நடைபெற்ற வட இந்திய கலைஞர்களின் கலை நிகழ்வில் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலில் இந்தியக் கலைஞர்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லையென்றும் பார்வையாளராக வந்த ஒரு ஆணும் ஒரு பெண்ணுமே உயிரிழந்ததாகவும், பத்துப் பேர் காயமடைந்ததாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. வட இந்திய திரைப்பட கலைஞர்களான சாருக்கான் தலைமையிலான கலைஞர்கள் பங்கு கொண்ட டெம்டேஸன் - 2004 என்ற இசைநிகழ்ச்சியிலேயே கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ரஷ்யாவில் இதேதினத்தில் மரணமான சோம தேரரின் நினைவுநாள் இன்று அனுஸ்டிக்கப்படுவதால் இந்த நிகழ்ச்சி நடத்தப்படக்கூடாது என ஜாதிக ஹெல உறுமய 10.12.2004 அன்று முதல் போராட்டம் நடத்திவந்தது குறிப்பிடத்தக்கது.

### கடற்புலிகளின் மூத்த உறுப்பினரான லெப்டினன்ட் கேணல் மறவன் வீரச்சாவு

சனிக்கிழமை, 11 டிசம்பர் 2004

கடற்புலிகளின் மூத்த உறுப்பினரான லெப்டினன்ட் கேணல் மறவன் சுகவீனம் காரணமாக வீரச்சாவடைந்தார். தாயக விடுதலைப் போருக்கு தன்னை ஆகுதியாக்கிய மாவீரன் லெப்டினன்ட் கேணல் மறவனுக்கு நாமும் எமது இதய வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.



### அரசு பாராமுகம்

செவ்வாய்க்கிழமை, 14 டிசம்பர் 2004

கிளிநொச்சியில் 14.12.2004 அன்று வரை 8000 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளன. 6000 வரையான குடும்பங்களின் வீடுகள் சேதமாகியுள்ளன. தொடர்ந்து பாதிப்புக்கள் அதிகமாகி வருகின்றன. அதற்கான புள்ளிவிபரத் திரட்டல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### அரசு மறுப்பு

புதன்கிழமை, 15 டிசம்பர் 2004

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி போதுமானதாக இல்லை என சிவில் அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு உரிய நிவாரணம் ஒதுக்க அரசு மறுப்பு.

### சமாதானத்திற்கு விரோதமான கருத்துக்களே வருகின்றன

புதன்கிழமை, 15 டிசம்பர் 2004

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் சந்தித்து கலந்துரையாடிய போது தெற்கிலிருந்து சமாதானத்திற்கு விரோதமான கருத்துக்களே வருகின்றன என நோர்வேயிடம் தமிழ்ச்செல்வன் கருத்துத் தெரிவித்தார்.

### எந்த முன்னேற்றமும் இன்றி

வியாழக்கிழமை, 16 டிசம்பர் 2004

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் 16.12.2004 அன்று பகல் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்தித்துப் பேசினார். அமைதி முயற்சியில் எந்த முன்னேற்றமும் இன்றி வெறுங்கையுடன் நாடு திரும்பினார் சொல்ஹெய்ம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கர நெருக்கடியில்

வியாழக்கிழமை, 16 டிசம்பர் 2004

'சமாதான முயற்சிகள் மிகவும் நெருக்கடியான கட்டத்தில் உள்ளது'- என்று விடுதலைப் புலிகளின் அரசியல்த்துறைப் பொறுப்பளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கவலை தெரிவித்துள்ளார்.



## சமாதானத்தை பாதிக்கும்

வெள்ளிக்கிழமை, 17 டிசம்பர் 2004

சிறீலங்கா - இந்திய கடற்படைகளின் கூட்டுப்பயிற்சியானது சமாதானத்தை பாதிக்கும் ஒரு நடவடிக்கை என கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் தெரிவித் துள்ளார்.

## அரசியல் ஆலோசகருடன் சந்திப்பு

திங்கட்கிழமை, 20 டிசம்பர் 2004

நோர்வேயின் சிறப்புச் சமாதானத் தூதர் எறிக் சூல்ஹெய்ம், 20.12.2004 அன்று அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். லண்டனில் உள்ள கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்ற இன்றைய சந்திப்பில், எரிக் சூல்ஹெய்முடன், சிறீலங்காவுக்கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் கலந்து கொண்டார்.

## இராணுவ ஆய்வு விஜயம்

செவ்வாய்க்கிழமை, 21 டிசம்பர் 2004

அமெரிக்காவைச் சேர்ந்த அரசியல் மற்றும் இராணுவ ஆய்வாளர்கள் மூவரைக் கொண்ட குழுவொன்று 20.12.2004 அன்று யாழ் குடாநாட்டிற்குச் சென்று தற்போதய நிலவரம் குறித்து நேரில் ஆராய்ந்துள்ளது.



## மனிதச் சங்கிலிப் போராட்டம்

வியாழக்கிழமை, 24 டிசம்பர் 2004

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு தன்னாட்சி அதிகார சபை திட்டத்தின் அடிப்படையில் உடனடியாக பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு சிறீலங்கா அரசை வலியுறுத்தும் 3வது மனிதச் சங்கிலிப் போராட்டம் 24.12.2004 அன்று கொடிகாமத்தில் நடைபெற்றது. கொடிகாமம் சந்தியிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வீதியின் இரண்டு புறத்திலும் கைகளைக் கோர்த்தவாறு இந்த மனித சங்கிலிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். சாவகச்சேரியிலும், கைதடியிலும் நடைபெற்ற மனிதச் சங்கிலிப் போராட்டத்தின் தொடர்ச்சியாகவே அன்றைய மனிதச் சங்கிலிப் போராட்டம் நடைபெற்றது.

## சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம்

ஞாயிற்றுக்கிழமை, 26 டிசம்பர் 2004

தென்கிழக்காசியப் பகுதியில் வரலாற்றில் என்றும் இல்லாதவாறு ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலையால் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்திருக்கின்றனர். தமிழர் தாயகம் முழுவதிலும் கரையோரப் பகுதிகளில் இடம்பெற்ற சுனாமி ஆழிப்பேரலையால் பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிரிழந்திருக்கின்றனர்.





தமிழர் தாயகப் பகுதியில் கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உடனடி மனிதாபிமான மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு உதவுமாறு தமிழ் ஈழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சுப தமிழ்ச்செல்வன அவர்கள், அனைத்துலக சமூகம் மற்றும் உதவி வழங்கும் நாடுகளுக்கு அவசர வேண்டுகோளை விடுத்திருக்கிறார்.

## துயர் பகிர்வு

புதன்கிழமை, 29 டிசம்பர் 2004

தமிழ் ஈழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், தமிழர் தாயகத்தில் ஏற்பட்ட இயற்கையின் பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுடன் துயர் பகிர்ந்து கொண்டார்.

இந்தப் பேரனர்த்தத்தில் பலியான சிங்கள மற்றும் இஸ்லாமிய மக்களுக்கும் தேசியத்தலைவர் தனது அனுதாபத்தை தெரிவித்துள்ளார்.

பேரழிவுகளுக்குட்பட்ட மக்களின் மனிதாபிமானப் பணிகளுக்கு வலுவூட்டும் வகையிலும் அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையிலும், தாமாகவே முன்வந்து, தாராளமாக உதவி வரும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகளுக்கும் தேசியத் தலைவர் வெளியிட்டிருக்கும் செய்தியில் தமது அன்பையும் நன்றியையும் தெரிவித்திருக்கிறார்.

## துயராற்றப் பயணம்

சனிக்கிழமை, 01 சனவரி 2005

கடற்புவி நடுக்கம் உருவாக்கிய ஆழிப்பேரலையால் உயிரிழந்த தமிழ் நாட்டுத் தமிழ் உறவுகளின் உறவினர்களுக்கும், இடப்பெயர்வுகளுக்கும் உள்ளானோரை சந்தித்து ஆறுதல் கூற தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், கவிஞர் அறிவுமதி உள்ளிட்டோர் பயணம் மேற்கொண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவுகள்



## யுனிசெப் பாராட்டுகிறது

திங்கட்கிழமை, 03 சனவரி 2005

முல்லைத்தீவிற்கு விஜயம் மேற்கொண்டு சேதங்களையும் அதன் பின்னான மீட்பு நடவடிக்கைகளையும் யுனிசெப் தலைமை இயக்குனர் திருவாட்டி கரோல் பெலாமி பார்வையிட்டார். புலிகளின் துரித மீட்புப் பணியும், நன்கு திட்டமிடப்பட்ட நிவாரணப் பணியும் மிகவும் பாராட்டினார்.



## உயிரிழந்தோர் எண்ணிக்கை 155,000 தாண்டியது!

திங்கட்கிழமை, 03 சனவரி 2005

இதுவரை புவிநடுக்க ஆழிப்பேரலையின் கொடூரத்திற்கு அனைத்து நாடுகளிலும் இருந்து உயிரிழந்தோர் எண்ணிக்கை 155,000 தாண்டியிருப்பதாக பிந்திக்கிடைத்த தகவல்கள் தெரிவிப்பதாக சி.என்.என் செய்தி நிறுவனம் 03.01.2005 அன்று அறிவித்துள்ளது.

## காட்டு மிராண்டித்தனம்

புதன்கிழமை, 05 சனவரி 2005

திருக்கோவில் விநாயகப்புரத்தில் துயர் துடைப்பு பணியில் ஈடுபட்ட பெண் போராளி ஒருவர் சிறீலங்கா விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டுள்ளார். காட்டுமிராண்டித்தனமான செயல் என விடுதலைப் புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

## அவுஸ்திரேலியா முதலிடம்

வியாழக்கிழமை, 06 சனவரி 2005

இதுவரை சுனாமி அனர்த்தத்தில் பாதிப்படைந்த மக்களுக்காக ஏராளமான நாடுகள் நிதியுதவி வழங்கியுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் அவுஸ்திரேலியாவே முதலிடம் வகிக்கிறது.

## முன்மாதிரி குடியிருப்புகள்

வியாழக்கிழமை, 06 சனவரி 2005

கடற்புவி நடுக்க ஆழிப்பேரலையினால் முற்றாக அழிக்கப்பட்ட முல்லை நகரை விட்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களை மாதிரிக் கிராமங்கள் அமைத்துக் குடியமர்த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

## 98 பாடசாலைகள் சேதம்

வெள்ளிக்கிழமை, 07 சனவரி 2005

கடற்புவி நடுக்க ஆழிப்பேரலை காரணமாக கிழக்கு மாகாணத்தில் 98 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. இந்த பாடசாலைகளில் 35 பாடசாலைகள் முற்றாகவும் 62 பாடசாலைகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன.

## நாடு கடத்தும் செயல் நிறுத்தம்

சனிக்கிழமை, 08 சனவரி 2005

அமெரிக்க அரசாங்கம் இலங்கையர்களை நாடு கடத்தும் தனது செயற்பாட்டை தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

## மருத்துவக் குழு பயணம்

சனிக்கிழமை, 08 சனவரி 2005

கடற்புவி நடுக்க ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு பகுதியில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு கனடாவின் வினிப்பெக் நகரிலிருந்து வைத்தியர்கள் குழுவொன்று செல்லவுள்ளது ஈழத்தமிழர் தலைமையில் கனடாவின் பல்லினத்தவர்கள் அடங்கிய வைத்தியர்கள் அதில் அங்கம் வகிக்கிறார்கள்.

## ஒரு தனிநாடு போல

சனிக்கிழமை, 08 சனவரி 2005

அமெரிக்காவில் இருந்து வெளிவரும் சிக்காக்கோ றைபியூன் எனும் மிகவும் பிரபல்யமான பத்திரிகை 07.01.05 அன்றைய தனது இதழில், நிவாரணப் பணிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத் திறமையினை மிகவும் விபரமாக விபரித்தது மட்டுமன்றி, அப்பிரதேசம் ஒரு தனிநாடு போன்றே காட்சியளிப்பதாகவும் செய்தி வெளியிட்டுள்ளது.

## உலக வங்கிகள், பன்னாட்டு உதவி அமைப்பு பிரதிநிதிகளுடன் சந்திப்பு

வியாழக்கிழமை, 13 சனவரி 2005

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, யப்பான் ஜேபிக் நிறுவனம், ஜிகா நிறுவனம் ஆகியவற்றின் சிறீலங்காவுக்கான வதிவிடப் பிரதிநிதிகளை 13.01.2005 அன்று கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் சந்தித்து பேசினார்.

## தமிழ்ப் பிரதேச பாடசாலைகளின் இழப்பு மட்டும் 500 மில்லியன்!

வியாழக்கிழமை, 13 சனவரி 2005

ஆழிப்பேரலையின் கொடூரத்தில் தமிழர் பிரதேசமான வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளே பாரியளவில் பாதிப்புகளுக்குள்ளானதாக கல்வி அமைச்சின் புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கின்றது.



## தமிழர் புனர்வாழ்வுக் கழக பொறுப்பாளருடன் சந்திப்பு

வெள்ளிக்கிழமை, 14 சனவரி 2005

கிளிநொச்சியிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமைச் செயலகத்திற்கு விஜயம் மேற்கொண்ட கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜிம் கரிஜியானிஸ் அவர்கள், அங்கு அவ்வமைப்பின் தலைவர் திரு.கே.பி. றெஜி மற்றும் திட்டமிடல் பொறுப்பாளர் திரு.லோறன்ஸ் கிறிஸ்ரி உட்பட முக்கிய அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்

## கூட்டாக பரிசீலிக்கப்படும்

ஞாயிற்றுக்கிழமை, 16 சனவரி 2005

புனர்நிர்மாண வேலைகளுக்கான நிதியுதவி வழங்குவதற்கு முன்னோடியாக சிறீலங்கா அரசினாலும் விடுதலைப் புலிகளினாலும் கையளிக்கப்பட்டுள்ள அறிக்கைகள் கூட்டாக பரிசீலிக்கப்படும் என ஆசிய அபிவிருத்தி வங்கி 15.01.2005 அன்று அறிவித்துள்ளது.

## சர்வதேச நாடுகளின் உதவிகள் தமிழர் பிரதேசத்திற்கு திருப்பப்படவில்லை: சு.ப.தமிழ்ச்செல்வன்

ஞாயிற்றுக்கிழமை, 16 சனவரி 2005

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை, ஐ.நா அமைப்பின் உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளார் ஜேம்ஸ் மொறிஸ் அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினார். அச்சந்திப்பில் சர்வதேச நாடுகளின் உதவிகள் தமிழர் பிரதேசத்திற்கு திருப்பப்படவில்லை எனத் தெரிவித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை



விடுதலை வேட்கை மிக்க
எழுச்சிப் படைப்புக்கள்,
ஒடுக்குமுறைக்கு எதிரான
ஆவேசக்குரல்,
போர்க்கால இலக்கியத்தின்
யதார்த்தப் பதிவு,
மண்ணின் மணத்தோடு
மன உணர்வுகளை
வெளிப்படுத்தும் உன்னத
இலக்கியமாக எரிமலை

ஆக்கங்கள்அபிப்பிராயங்கள் மற்றும் தொடர்புகட்கு


- Tel: 01 - 43 58 11 42
- Fax: (33) 1 43 58 11 91
- ERIMALAI,
  C/O T.C.C France,
  341, Rue Des Pyrenees,
  75020 Paris, FRANCE.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org